499

உ

சிவமயம்.

திருவொற்றியூர்த் தலபுராணம்

(உரை நடை)

தலத்தேவாரப் பாடல்களுடன்கூடியது

SCANNED

தொகுத்து எழுதியவர் :

திருவள்ளுவரகம் - புலவர்

திரு ப. இராமநாதம் பிள்ளை அவர்கள்.

வெளியிடுவோர் :

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

ஜவுளி வியாபாரம்

3, கிடங்குதெரு, சென்னை-1.

ஆனிமீ நன்னாள் வெளியீடு

12—7—1964

ஒ 85;38.211.T
N64
163974

உ

சிவமயம்.

"சித்தாந்த வித்தகர்".

கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள்

அன்புடன் அளித்த

அணிந்துரை

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது தாயுமானுர் அருள்வாக்கு. சைவர்கள் உய்யவேண்டுமானல் பெருமான் எழுந்தருளியுள்ள தலங்களுக்கு செல்லவேண்டும். ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடவேண்டும். மூர்த்திகளை வணங்கி வழிபடவேண்டும். எல்லாத்தலங்களுக்கும் செல்ல இயலுமா? என்பது அடுத்த பிரச்னை.

பெரியோர்களால், அருளாளர்களால் பாடல்களைப் பெற்றுத் திகழும் தலங்களையேனும் அவசியம் வணங்கவேண்டும். சமயாசாரியர்கள் பாடல்களைப் பெற்றுள்ள தலங்கள் 274 என்பர் ஆன்றோர். அவற்றுள் 32 தலங்கள் நம் தொண்டை நன்னுட்டிலுள்ளன. அவற்றுள் ஒன்று **திருவொற்றியூர்** என்னும் தலமாகும்.

இதற்கும் பல பெருமைகளுண்டு. சமயாசாரியர்கள் பாடல் பெற்றுள்ளது ஒன்று. சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவியர் இருவருள் ஒருவராகிய சங்கிலியார் எழுந்தருளியிருந்த திருத்தலம். சுந்தரர் பலகாலம் இங்குத் தங்கி யிருந்ததாகப் பெரிய புராணம் பேசும். மிகப் பழமையான தலம். முற்றுந்துறந்த முனிவராகிய பட்டினத்துப் பிள்ளையார் பெருமான் அருளைப் பெற்றுக் கடற்கரையில் ஜீவ்ய சமாதி அடைந்த பெருமையும் இத்தலத்திற்குண்டு. படம்பக்கநாதர் சந்நிதியை அறியாதார் பட்டினத்தார் சமாதி என இன்றும் வழங்கிவருவது வருந்தத்தக்க செய்தியாகும்

163974

என்? பட்டினத்தடிகள் தாம் பாடிய திருக்கழுமல மும்மணிக் கோவையில்

" தாதையொடுவந்த வேதியச்சிறுவன்
தளர்நடைப்பருவத்து வளர்பசி வருத்த
அன்னயோ என்றழைப்ப முன்னின்று
ஞானபோனகத்து அருளட்டிக்குழைத்த
ஆனந்திரளை யவன்வயினருள
அந்தணன் முனிந்து தந்தாரியாரென
அவனைக்காட்டுவன் அப்ப வானர்
தோடுடைய செவியன் என்றும்
பீடுடைய பெம்மானென்றும்
கையிற் சுட்டிக்காட்டி
ஐய நீ வெளிப்பட் டருளினையாங்கே"

என்று பாடியுள்ளதை நோக்கி இவருக்கு முன்னே திருஞான சம்பந்த சுவாமிகள் இருந்தார் என்றும் அவர் தம் காலத்தே (ஏழாம் நூற்றாண்டில்) திருவொற்றியூருக்கு எழுந்தருளி வந்து படம்பக்கநாதரைப் பணிந்து தேவாரம் பாடியுள்ளார் என்றால் இது எப்படிப் பட்டினத்தார் சமாதியாகும் என அன்பர்கள் சிந்தித்து இனியாகிலும் ஆண்டவனிடம் அபசாரப்படாமலிருப்பாராக.

இத்தல புராணம் மிகப் பழையதாக ஒன்றிருந்து அது அன்பர்களுக்குக் கிடைக்கப் பெறாமலிருந்தது ஒரு குறை. ஒரு தலத்திற்கு நாம் செல்லும்போது அதன் வரலாற்றைத் தெரிந்து கொண்டுதான் பெருமானை வணங்கி வழிபடவேண்டும். எனவே, இக்குறையைப் போக்க முன்வந்தவர் என் அன்புக்குரிய திரு· கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ் அதிபர் N. K. மாரிமுத்து முதலியார் அவர்கள், இவர் சிவ, சிவனடியார் பக்தியில் சிறந்தவர். புலவர்களை ஆதரிப்பதில் தனியன்புடையவர். இவர்கள் இப் புராணத்தைச் சீர் செய்து நல்ல முறையில் அச்சிட்டு வழங்க வேண்டுமென்று எண்ணினர். இதற்குரிய புலவர் யார் என்று தேடினர்.

R 25:38, 211 T

ஆண்டவன் திருவருளால் இப் புராணத்தைப் பிழையற ஒப்புநோக்கிச் சில முக்கியமான குறிப்புகளுடனும், அன்பர்கள் அத்தலத்தில் படனஞ் செய்வதற்குத் துணையாயுள்ள தேவாரப் பாடல்களைச் சேர்த்தும் வெளியிட ஒப்புக்கொண்டு இந்த உயரிய சைவப் பணியை மேற்கொண்டவர் திருவள்ளுவரகம்—புலவர்—**திரு. இராமநாதம் பிள்ளையவர்கள்.** இவர்களை அறியாதார் சைவ வுலகில் இரார் என்பது என் எண்ணம். இவர்கட்குச் சைவ வுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அன்பர்கள் இந்நூலைப் பெற்றுப் பயனடையுமாறு ஸ்ரீ வடிவுடையம்மன் சமேத ஸ்ரீ தியாக ராஜப்பெருமான் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

வாழ்க சைவம்! வளர்க நல்லறங்கள்!! வாழ்க சீரடியா ரெல்லாம்!!!

திருவல்லிக்கேணி,
சென்னை - 5.
2ᵤ—7—64

கயப்பாக்கம். சோமசுந்தரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புரை

திருவான்மியூர் பாம்பனடிகள் மடத்துத் தலைவர் சிவத்திரு. பாலசுந்தரசுவாமிகள் வழங்கியது.

தொண்டை நன்னாட்டில் புகழ்பெற்று விளங்கும் திருக்கோவில்களில் தலைசிறந்து விளங்குவது திருவொற்றியூரிலுள்ள வடிவாம்பிகை தியாகேசர் திருக்கோவிலாகும். அதற்குரிய புராணம் பண்டே தோன்றி யிருந்தாலும், தற்போதைய சைவப் பெருமக்களுக்கு அந்நூல் கிடைக்கப்பெறாது பெரிதும் கவல்கின்றனர்.

சிவத்திரு சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளையவர்கள் ஆண்டவனது புகழ், பொருள் நூல்களை நன்குணர்ந்து அவ்வொழுக்கத்தில் நின்றதோடு தேனினுமினிய தெய்வத் திருத் தமிழின் உண்மை மேன்மையைக் கண்டு அதில் அழுந்திய பற்றுடையவராவர். இத்தகைய சாதனங்களை மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் பெற்றுப் பிறப்பினலனை எய்தல் வேண்டும்.

இதற்கிணங்க நம் பண்டிதரவர்கள் மூலம் வெளிவரும் திருவொற்றியூர்ப் புராணத்தில், நேர்ந்த இடங்களிலெல்லாம் தமது பேரறிவின் முடிந்த முடிபாகிய சித்தாந்தக் கருத்தைச் செலுத்தி முடித்தமை மக்கள் பொருளறிந்து உய்வதற்கு சிறந்த வாய்ப்பைத் தந்திருக்கிறது.

கருப்பண முதலியாரின் தவப் புதல்வர் சிவத்திரு. மாரிமுத்து முதலியாரவர்கள், சைவ பரமாகவும் வைணவபரமாகவும் ஒவ்வொரு ஆண்டிலேயும் தமிழில் பல வெளியீடுகள் செய்து தமி

மூலகத்திற்கு இலவசமாகத் தந்து துணை புரிகின்றனரென்பது யாவரும் நன்குணர்ந்த தொன்று. அதேபோன்று பெரும் பொருட் செலவில் இப்புராணத்தையும் தமிழுலகத்திற்கு உதவுகின்றனர். இது சாலவும் போற்றற்குரியது.

திருக்கோவில்களைப் பழுதுபார்ப்பது, புதுப்பித்து வேண்டிய காலங்களில் விழாக்களைச் சிறப்புறச் செய்து முடித்து மகிழ்தல் முதலிய தொண்டுகளைச் செய்வதே தம் கடமையெனக் கொண்ட திருவாளர் "மங்களாகேப்" **சம்பந்தமுதலியாரவர்கள்** ஒற்றியப்ப ராலயத்தில் முன்னரே இருந்த அறுபான்மும்மை நாயன்மார்களின் மூர்த்தங்களை நன்னிலைப்படுத்தி இன்று கும்பாபிஷேகம் செய்விக் கின்றனர். இந்நாளில் தானு முடனிருந்து இப்புராணத்தை வெளி யீடு செய்கின்றனர்.

இவற்றிற்கெல்லாம் உறுதுணையாக இருந்து செய்பவர் பழந் தொண்டர் கண்ணப்பதேவரெனும் பத்தராவர்.

சித்தாந்த பண்டித பெருந்தகையார், கீழ்க்காணும் தொண்டர் பெருமக்களனைவர்க்கும் வடிவாம்பிகை ஒற்றியப்பர் நீண்ட வாழ்நாளும், தளர்ச்சியடையாத உடல்நலமும் அதற்கான ஆக்கமும் தந்துதவ வேண்டுகின்றேன்.

வாழ்க நற்றமிழ், வாழ்க சைவம், வாழ்க திருவருள்.

திருச்சிற்றம்பலம்.

இங்ஙனம் :

பா. கு. குமாரதாசன் என்னும் பெயரிய

பாலசுந்தரசுவாமி.

ஓம்.

பதிப்புரை

நாடும், மொழியும், நன்னெறியும் பீடுற்று ஓங்கிப் பிறங்கத் தெய்வ வழிபாடு இன்றியமையாது யாண்டும் எவர்க்கும் வேண்டத்தக்க தொன்றும். வழிபாட்டிற்கு வேண்டிய துணைப் பொருள்களுள் தாய்மொழிப் பாட்டே நனிமிகச் சிறந்ததாகும். அஃது "அருச்சனை பாட்டேயாகும்" என்னும் சிவனருள் தனித் தமிழ் மந்திரத்தானும், "அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே" என்னும் செந்தமிழ்த் திருமாமறையானும் உணரலாம்.

யாங்கள் திருவருளால் யாண்டும் செய்துவரும் சிவபுண்ணியப் பணிகளுள் நூல் வெளியீட்டுப் பணியும் ஒன்று. இத்திருவொற்றியூர்த் தல புராண உரைநடை நூல் முன்னுள்ளபடியே சில சேர்த்து எங்கள் வேண்டுகோளின்படி கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் எழுதித் தந்தனர். இந்நூலின் அருமையினை முன்னுரையின்கண் காணலாம். இந்நூலினைச் செவ்வையுற எழுதித் தந்த பிள்ளையவர்கட்கு எங்கள் நன்றி.

இந்நூலினைச் செவ்விதின் அழகுறக் குறித்த காலத்துள் அச்சிட்டுதவிய "கவுணியன் அச்சகத்"தார்க்கும், அணிந்துரை முதலியன உதவிய மெய்யன்பர்கட்கும் எங்கள் நன்றி.

இதனைச் செந்தமிழ் அன்பர்களும், சிவனேயச் செல்வர்களும் வாங்கியும், வாங்குவித்தும் ஓதித் திருவொற்றியூரான் வழிபாடியற்றித் திருவருளால் எல்லா நலமும் பெற்று இனிது வாழ, அவன் திருவடியை வாழ்த்தி வணங்குகின்றோம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53, கிடங்கு தெரு, சென்னை - 1.

ஓம்.

முன்னுரை

ஒற்றியூர் ஆளும் உடையான் அடியேனைப்
பற்றிப் பணிகொண்ட பான்மையினல்—ஒற்றியூர்க்
காதை வரைந்தேன் கழலடியே கைதொழுதேன்
ஓதருளின் செய்கையென ஓர்ந்து.

செம்பொருட்டுணிவினரெனினும் சித்தாந்த சைவரெனினும் ஒன்றே. செந்நெறிச் செல்வரெனினும் சைவர் எனினும் ஒன்றே. கடவுட்கொள்கை எனினும், மதமெனினும் ஒன்றே. இதனைச் சமயம் எனவுங் கூறுப. சமயம்-பொழுது. கடவுளை நினைந்து வழிபடுதற்பொருட்டு, அக்கடவுளருள் பெற்ற மெய்யடியார்கள் வகுத்த பொழுது சமயம் என வழங்குகின்றது. இச்சொல் சமயம் என்று சொல்லப்படின், அமைக்கப்பட்டது—சமைக்கப்பட்டது என்று பொருள் தரும்.

பெற்ருேர் நினைவால் பிள்ளைகளும், ஆசான் நினைவால் மாணவரும், தலைவர் நினைவால் சார்ந்தோரும், ஆட்சியர் நினைவால் ஆளப்படுவோரும் நன்னிலை யடைந்து முன்னேறி இன்புற்று வாழ்வ தியல்பு. இதுபோல் உய்வகை அருளும் தெய்வ நினைவால் அனைத்துலகோரும் தினைத்தனை வேற்றுமையுமின்றி மனத்துறுமன்பால் ஒற்றுமையோடு இன்புற்று வாழ்வர். உலக வரலாற்றினை நடுநின்று நன்காய்ந்து வரைசெய்து எழுதிய நல்லோரனைவரும் தமிழ்நாடே உலகத்தில் தோன்றிய முதல் நாடு எனவும், தமிழ் மக்களே பண்டைய மக்கள் எனவும், தமிழ் மொழியே முதன் மொழி யெனவும், தமிழர் நாகரிகமே உலக முதல் நாகரிகமெனவும் எழுதியுள்ளனர். அதற்கு வேண்டும் அகப்புறச் சான்றுகளும் அவர்களே நன்கு காட்டியுள்ளனர். மேலும் திருவாசகம் கீர்த்தித்திருவகவல் அடிநூற்றுப் பதினெட்டில் **“பாண்டி நாடே பழம்பதி யாகவும்”** என வரும் செந்தமிழ்த் திருமறையானும் இவ்வுண்மை தெளியலாம்.

ஒருகாலத்துத் தமிழ் மொழியே முதன் மொழியாய் உலக மெங்கும் பரந்த பெரு மொழியாய்த் திகழ்ந்துள்ள வுண்மை வரும் சேக்கிழாரடிகள்; திருமொழியா னுணரலாம் :

"மொய்வைத்த வண்டின் செறிசூழல் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலயந்தர வந்த மந்த
மெய்வைத்த காலும் தருஞாலம் அளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந்திருஞ் செவ்வி மணஞ்செ யீரம்,"

—கஉ, மூர்த்திநாயனுர்-3.

தமிழ் நெறி என்றாலும் சிவனெறி என்றாலும் ஒன்றே. தமிழ்மொழிக்கண் மிகவும் தொன்மையும் நன்மையும் வாய்ந்தன வர்கத் திகழும் நூல்கள் இரண்டு. அவை ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமும் மெய்வைத்த தெய்வத் திருக்குறளுமாகும். தொல்காப்பியத்தினுள் வாழ்க்கைக்கு வேண்டிய இடமுங் காலமும், இனிய பொருள்களும், இன்பமும் வகுத்தோதப்பட்டுள்ளன. அவை முறையே "முதல் கருவுரிப் பொருள்கள்" எனப்படும். இம் மூன்றனுள் நடுநின்ற கருப்பொருள் வாழ்க்கையை வளம் படுத்துவனவாகும். இக் கருப்பொருள்களுள் **தெய்வமும்** ஒன்றாக ஓதப்பட்டுள்ளது. அம்மட்டுமன்று. அ**த்தெய்வம்** முதற்கண் நிறுத்தப்பட்டுள்ளது. இது தந்தையின் பெயரே மைந்தன் பெயர்க்கு முந்தி நிற்பது போன்றாகும்.

திருக்குறளின்கண் தெய்வம் **"செம் பொருள்"** என்னும் செந் தமிழ்ச் சிறப்புப் பெயரான் ஓதப்பட்டுள்ளது. செம்பொருள் எனினும் சிவம் எனினும் ஒன்றே. அவ்வுண்மை "சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி எம்மான்" *(4-113-9)* எனச் செந்தமிழ்ச் சிறப்புமறையான் உணர்க.

திருக்குறள் நெறியே தொன்மைத்தமிழர் நன்னெறி. திருக் குறளை உலகனைத்துமுள்ள எல்லா நெறியினரும் தங்கள் தங்கள் நெறி நூல் என ஏற்றுக்கொள்கின்றனர் எனின் தொன்மைத் தமிழர் நன்னெறியும் அத்தன்மையதே. அவ்வுண்மை "**தென்னு**

டுடைய சிவனே போற்றி", "எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி" என முறையே சிறப்பும் பொதுவுமாக ஓதப்பெறும் செந்தமிழ் மறை முடிபான் உணரலாம். மேலும் தமிழர்தம் தனிப்பெரு மறைகள் மட்டுமே எல்லாச் சமயங்களையும் பள்ளி வகுப்புப்போல் ஒப்புக்கொண்டு பகைமையின்றி நகை முகத்தராய் வாழ வழி செய்கின்றது. தமிழர் செந்நெறி, வகுப்பு மாணவர்போலன்றி அம்மாணவர்க்கு அருளொடுங் கற்பித்தும் அப்பால் நிற்கும் ஆசான் போன்று என்றும் பொன்றுது நின்று நிலவுகின்றது. இவ்வுண்மை வரும் செந்தமிழ்ப்பொருண் மறையானுணர்க:

"ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்
ஒன்ருேடொன் ருெவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள் நூல் யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க தின்றி
நீதியினுன் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அது சமயம் பொருள் நூல்
ஆதலினுன் இவையெல்லாம் அருமறையா கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீ ழடங்கும்."

—சிவஞானசித்தியார், 8-2-3.

"மொய்தரு பூதம் ஆதி மோகினி அந்தமாகப்
பொய்தரு சமயம் எல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மெய்தரு சைவ மாதி இருமூன்றும் வித்தை யாதி
எய்துதத் துவங்க ளேயும் ஒன்றுமின் றெம்மி றைக்கே."

—2-4-1.

பொய்—என்றும் ஒன்றுபோல் நில்லாதது, தோன்றியொடுங் கும் தன்மையது.

மெய்—என்றும் ஒன்றுபோல் நிற்பது.

"சிவன்அரு உருவும் அல்லன் சித்தினே டசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்
தவமுத வியோக போகந் தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பி
னனே."

—1-3-11.

சொற்செயல்கள் தூக்கின் அருவுருவத் தோடுருவம்
பொற்பார் நினைவருவம் போகமுறும்—கற்புணர்வு
மூவுருவு மின்றும் முதிர்நினைவு தானடத்தும்
தேவுநடை தான்சிவனுல் தேறு.

(சொல்—அருவுருவம், செயல்—உருவம், நினைவு—அருவம்.)

நம் அருமைச் செந்தமிழின்கண் திருமாமறை யெனவும் திருமாமுறை யெனவும் இரு பகுதியாகத் தெய்வ அருள் நூல்களைப் பிரித்துள்ளனர். மறை–வேதம், முறை–ஆகமம். இவற்றைத் திருமுறை எனவும் வழங்குப. யாண்டும் மொழியை உடலாகவும், அம்மொழியால் வழிபடப்படும் தெய்வநெறியினை உயிராகவும் கொண்டு ஒழுகுவதே நன்முறையாம். தனித் தமிழ் மொழியில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. அதுபோல் திருமுறைகளும் பன்னிரண்டு. இவற்றுள் ஏழு திருமுறைகள் மூவர் முதலிகளால் அருளிச்செய்யப்பட்டன. இவற்றைத் தேவாரம் எனவும் அடங்கன்முறை யெனவுங் கூறுப. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டும் எட்டாந்திருமுறையாகும். திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மரால் பாடப்பட்ட திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறை. திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறை. இது தனித் தமிழாகமம். திரு ஆலவாயுடையார் முதலாகப் பன்னிருவர்கள் பாடியருளிய நாற்பது பனுவல் தொகுதி பதினோராந்திருமுறை. எழுபத்திரண்டு நாயன்மார் திருவரலாறுகிய திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந்திருமுறை. இவைகளே வழிபாட்டுக்குரிய நூல்களாம்.

இவற்றுள் திருமந்திரமாகிய தனித் தமிழாகமத்தின்படி திருக்கோவில் அமைத்தல், தெய்வத்திருப்படிமங்கள் அமைத்தல், சக்கரம் வரைதல், பூசை செய்தல், அருச்சித்தல், திருவிழா நடத்தல் முதலியன செய்தல் வேண்டும். நம் செந்நெறி முதல்வர்கள் நால்வர். அவர்கள் சம்பந்தர், அப்பர், ஆரூரர், (சுந்தரர்) மாணிக்க வாசகர் எனப்படுவர். இவர்கள் சைவப்படிமுறை நான்கினையும்

நமக்கு உணர்த்தியருளத் திருவருளால் தோன்றியருளிய செல்வன் கழலேத்துஞ் செல்வர்கள். படிமுறை நான்கும் முறையே சீலம், நோன்பு, செறிவு, அறிவு எனப்படும். இவற்றை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவுங் கூறுப. தேவாரம் தமிழ்மறை எனவும், திருவாசகம் தமிழ்மறை முடிபு எனவும் கூறுப. திருமந்திரம் பொருள்நூல் எனப்படும். தேவாரந் திருவாசகம் முதலிய ஏனைத் திருமுறைகள் புகழ் நூல்கள் எனப்படும் பொருள்நூல்—சாத்திரம். புகழ்நூல்—தோத்திரம். திருமுறை திருப்பாட்டுக்களை ஓதுங்கால் முதலிலும் முடிவிலும் "**திருச்சிற்றம்பலம்**" என்னும் செந்தமிழ் முதன்மறை ஓதிக்கொள்ளுதல் மரபு. இதனை ஒற்று நீக்கி எண்ணின் ஆறு எழுத்துக்கள் இரு முறை ஓதுதலால் எழுத்துக்கள் பன்னிரண்டாகும். இதுவே திருமுறைகள் பன்னிரண்டு என்னும் வாய்மையினைத் தெளிவுற வுணர்த்தும்.

திருமந்திரமாகிய பொருள்நூலின் விரிவு தனித்தமிழ்ச் சிவ ஞானபோத விழுமிய முழு முதல் நூல் செய்தருளியவர் மெய் கண்டதேவநாயனாராவர். அவர் தம் வழியினர் அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் என மூவராவர். இம் மூவருள் அருணந்திசிவம் செய்தருளிய சித்தாந்த நூல் இரண்டு. உமாபதிசிவம் செய்தருளிய சித்தாந்த நூல்கள் எட்டு. மெய்கண்டார் மாணவர் நாற்பத்தொன்பதின்மருள் அருணந்திசிவநாயனார் முதன் மாணவர் மற்றொரு மாணவர் மனவாசகங் கடந்தார். இவர் செய்தருளியது உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூல் ஒன்று. ஆக மொத்தம் மெய்கண்ட நூல்களும் திருமுறைகள் போன்று பன்னிரண்டேயாம். மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரும் வழி வழி ஆசிரியர்களாவர். இவர்களைச் சந்தானாசிரியர் எனவுங் கூறுப. எனவே சிவபெருமானின் எட்டுவான் குணம் போன்று நம் சிவ நெறிக்குச் சமயகுரவர் நால்வர், சந்தானகுரவர் நால்வர் ஆக எண்மர் உளர். மெய்கண்டார்க்கு முன்னுள்ள திருவியலூர் உய்யவந்ததேவநாயனார் அருளிய திருவுந்தியார், திருக்கடவூர் உய்ய வந்ததேவநாயனார் அருளிய திருக்களிற்றுப்படியார் ஆகிய இரண்டு

நூல்களும் சேர்த்து மெய்கண்ட நூல்கள் பதினான்கென வழங்குப. திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும் திருநெறியின் இரு கண்கள் போன்றன. இவை கொண்டே எல்லா வழிபாடுகளும் திருக்கோவில் முதலிய எல்லா இடங்களிலும் நாளும் நிகழ்த்தி வருதல் நம்முன்னோர் தலைக்கடனாம்.

வழிபாட்டில் சிவஞ்செய்தல், அருச்சித்தல், வாழ்த்துதல் என மூன்று பிரிவுகள் உள்ளன. இம்மூன்றும் முறையே அன்பு அறிவு ஆற்றல்கள் என்னும் இச்சாஞானக்கிரியைகளால் இயற்றப் படுவன. மேலும் இம் மூன்றும் முறையே உள்ளம், உரை, உடல் என்னும் முப்பொறிகளாலும் இயற்றப்படுவனவாம்; சிவஞ்செய்த லென்னும் சொல்லே செபஞ்செய்தல் என மருவிற்று. சிவஞ் செய்தற்குரியன செந்தமிழ்த் திருவைந்தெழுத்து. அருச்சனைக் குரியன போற்றி போற்றி எனப் புகலும் செந்தமிழ்த்திருமுறை மந்திரங்கள். வாழ்த்துக்குரியன திருமுறைகளில் இவ்விரண்டை யும் குறித்துவரும் திருப்பதிகங்கள் போக எஞ்சிய திருப்பதிகங்க ளாகும். இவற்றை வருமாறு நினைவு கூர்க:

ஆவியெழுத் தஞ்சிங் கருச்சனைக்குப் போற்றிமறை
கூவிவாழ்த் தெஞ்சு முறைகொண்டு.
ஓங்குயிரோ டுள்ளமுடல் ஐந்தெழுத்துப் போற்றிமறை
ஈங்கெச்சம் செந்நெறிக்கென் றெண்.

இவற்றுள் சம்பந்தப்பெருமானார் பாடியருளிய திரு அஞ் செழுத்துத் திருப்பதிகம் ஒன்று, நமச்சிவாயத்திருப்பதிகம் ஒன்று. அப்பர் பெருமானார் நமச்சிவாயத் திருப்பதிகம் ஒன்று. சுந்தரர் பெருமானார் நமச்சிவாயத்திருப்பதிகம் ஒன்று ஆகத் திருப்பதி கங்கள் நான்குள்ளன. நாம் சிவஞ்செய்யவேண்டிய பொழுதும் நான்கு படியும் நான்கு. பொழுது நான்கு, காலை, கடும்பகல், மாலை, வீங்கிருள். படிநான்கு சீலம், நோன்பு, செறிவு, அறிவு; இம் முறையில் சம்பந்தப்பெருமானாரருளிய "**துஞ்சலுந்**" எனத் தொடங்குந் திருப்பதிகம் காலைப் போதிற்கும் சீலப்படியினுக்கு மாம்; அப்பர் பாடியருளிய "**சொற்றுணை**" எனத் தொடங்கும் திருப்பதிகம் கடும் பகலுக்கும் நோன்பிற்குமாம். வன்றொண்டர்

பாடியருளிய **"மற்றுப்பற்று"** எனத் தொடங்கும் திருப்பதிகம் மாலைக்கும் செறிவுக்குமாம். சம்பந்தப்பெருமான் பாடியருளிய **"காதலாகிக்கசிந்து"** எனத் தொடங்கும் திருப்பதிகம் வீங் கிருளுக்கும் அறிவுக்குமாம்.

பொழுதும் படியும் வருமாறுணர்க :

" காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு."

—11. அம்மை, அற்புதம்-65.

" விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே."—தாயு.

" சீல மின்றி நோன்பின்றிச் செறிவே இன்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்துகிடப் பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக்
கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே."

—8. ஆனந்தமாலை-3.

சீலந்துஞ்சல் காதலறி வரம்நோன்பு சொற்றுணையாம்
ஏல்செறிவு மற்றுப்பற் றெண்.

அப்பர் பெருமானார் பாடியருளிய போற்றித் திருத்தாண்டகம் ஐந்து. இவவைந்தும் முறையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் திருத் தொழில்கள் ஐந்தினுக்கு முரிய சிவத்திருவருட் கோலங்களை அருச்சித்து வழிபடுவதற் குரியனவாகும். அத்திருக்கோலங்கள் முறையே 1, படைப்பு—பிள்ளையார், 2 காப்பு—முருகன், 3. துடைப்பு—ஆலமர்செல்வன் 4. மறைப்பு—அம்மை, 5. அருளல்—சிவக்குறி—சிவலிங்கம்.

இவற்றிற்குரிய தாண்டகத் திருப்பதிகங்களின் பாட்டு முதல் நினைப்பு வருமாறு :

1. பிள்ளையார்—"பொறையுடைய பூமி நீ" 2. முருகன்—"எல்லாஞ்சிவனென்ன" 3. ஆலமர்செல்வன்—"பாட்டான நல்ல" 4. அம்மை—"வேற்றாகி விண்ணாகி" 5. சிவக்குறி..."கற்றவர்க ளுண்ணுங்" 6. இவ்வைந்து திருத் தொழில்களும் ஒரு திருக் கோலத்தின்கண் காணவிருப்பது கூத்தப்பெருமான் திருப்பாடிமம்–"போற்றித் திருஅகவல்" (திருவாசகம்) 7. அடியார்—"தரிக்கி லேன்காய வாழ்க்கை" (திருவாசகம்) இவ்வேழினையும் ஞாயிறு முதலாக ஒரு கிழமைக்குரிய ஏழு நாட்களுக்கும், நாளொன்றுக்கு ஒவ்வொன்று ஓதிவருதல் வேண்டும். இவ்வடியாருக்கு வகுத்த திருப்பதிகமே நந்தியங்கடவுள், ஆனேறு, சண்டேசுரர் ஆகியோ ருக்கும் அமைத்துக்கொள்க. ஏனைத் திருமுறைகளிலும் வரும் போற்றித் தொடர் மந்திரங்களையும் ஏற்றபெற்றி ஓதி மலர்தூவி அருச்சிக்க. அருச்சனை பாட்டேயாம்.

அஞ்செழுத்துத் திருப்பதிகங்களும் போற்றித் திருப்பதிகங் களும் நீங்க ஏனைத் திருமுறைத் திருப்பதிகங்கள் அனைத்தும் புகழ்ந்து தொழவும், விண்ணப்பிக்கவும் வேண்டுகோள் புரியவும், வாழ்த்தவும் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

வாழ்த்துத் திருப்பாட்டு வருமாறு :

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினை யேன் நெடுங்காலமே." —6-60-7.

"பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே." —5. 88-1.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

—12. பாயிரம்-1.

மேலோதிய எழுவகைத் திருக் கோலங்களையும் வழிபடுவோர், அவ்வத் திருக்கோலங்களைக் குறிக்கும் திருத் தேவாரம் ஒன்றும், அதுபோல் போற்றித் திருத்தாண்டகம் ஒன்றும், திருத்தொண்டர் புராணம் ஒன்றும் ஆகிய மூன்று திருப் பாடல்களையும் ஓதிக் கொள்ளுதல் வேண்டும் அவற்றிற்குரிய திருப் பாட்டுக்களின் முதல் நினைப்புகளை ஈண்டுத் தருகின்றோம்:

1. பிள்ளையார்—"பிடியதன் உருஉமை", "அண்டமே மூன்று கடந்தாய் போற்றி" "எடுக்கும் மாக்கதை".
2. முருகன்—"நங்கடம்பனைப்", "முக்கணா போற்றி", "பயில் வடுப் பொலிந்த".
3. தென்முகக் கடவுள்—"ஆலின்கீழ் அறங்க", "அதிராவினைகள்," "ஆலின்கீழ் நால்வர்க்"
4. அம்மை—"பந்துசேர் விரலாள்", "இமையாதுயிராது", "கொய்த பன்மலர்"
5. சிவக்குறி—"செங்கணானும்", "சங்கரனே நின்பாதம்", "காணாத அருவினுக்கும்"
6 கூத்தப்பெருமான்—"குனித்த புருவமுங்", "நஞ்சுடைய கண்டனே", "ஆதியாய்நடுவு"
7, அடியார்—"பத்தராய்ப்", "முடியார் சடையின்", "மூவேந்தர்"

சண்டேசுரர்—"தழைத்ததோர்", "பண்ணின் இசையாகி", "அண்டர் பிரானும்"

ஆனேறு—"வம்படுத்த", "உரியாய் உலகினுக்குத்", "உள்ளுந் தகைமை

அம்மையப்ப பிள்ளை—"செல்வியைப்", "மலையான் மடந்தை", "கொன்றை வேணி"

சாத்தனுர்—"பார்த்தனுக் கருளும்", "சேரர் காவலர் விண்ணப் பஞ் செய்த"
காலபயிரவர்—"விரித்தபல் கதிர்கொள்", "அஞ்சுவான்கரத்து"
கொடிமரம்—"கொடியாரிடபத்தர், "கொடிமாடம்"
பலிபீடம்—"மலிவிழா வீதி", "பணிந்தெழுந்துகை"

திருக்கோவிலுக்குச் செல்வார் திரு எல்லையை வணங்குதல் வேண்டும். அதுபோல் திருவாயில், திருவீதி, கோபுரம், திருமுற்றம், திருஅணுக்கன் திருவாயில் ஆகிய ஆறிடங்களில் எட்டுறுப்பும் நிலத்தே படும்படி வீழ்ந்தெழுந்து வணங்குதல்வேண்டும் அப்பொழுது ஓதவேண்டிய பாட்டு "அங்கத்தை மண்ணுக்காக்கி" "நீடுகோபுர" திருவூர்வணக்கம் "சித்தந் தெளிவீர்காள்" "மின்னார் செஞ்சடையண்ணல்".

எல்லையொடு வாயில் எழில்வீதி கோபுரம்
வல்லமுற்றம் மன்னணுக்கன் வாயில் எனச்—சொல்லுமிரு
மூன்றிடமும் வீழ்ந்தெழுந்து முன்னருளால் தான்தொழுக
ஆன்ற திரு மாமுறையாலங்கு,

இங்ஙனம் வணங்கற்குத் திருத்தொண்டர் புராணத்துள் பல திருப்பாட்டுக்கள் காணலாம். சில வருமாறு சம்பந்தர் புராணம், 1135 முதல் 1140 முடிய ஆறு திருப்பாட்டுக்கள், வணங்குங்கால் மலர் தூவி வணங்கும் வாய்மை வருமாறு :

"சித்தந் தெளிவீர்காள், அத்தன் ஆரூரை
பத்தி மலர் தூவ, முத்தியாகுமே."—1,

"நீடு கோபுர முன்பிறைஞ்சி நிலாவு தொண்டரொ டுள்ளணைந்
தாடல் மேவிய அண்ணலாரடி போற்றி அஞ்சலி கோலிநின்
றேடு லாமலர் தூவி எட்டினொடைந்து மாகும் உறுப்பினல்
பீடு நீடு நிலத்தின் மேற்பெரு கப்பணிந்து வணங்கினர்."

—12. ஏயர்கோன்—68.

"முந்நீர் வலங்கொள் மறைக்காட்டு முதல்வர் கோயில்
சென்றிறைஞ்சிச்
செந்நீர் வாய்மைத் திருநாவுக் கரசும் புகலிச் சிவக்கன்றும்
அந்நேர் திறக்க அடைக்கவெனப் பாடுந் திருவாயிலையணைந்து
நன்னீர் பொழியும் விழியினராய் நாயன்மாரை நினைந்
திறைஞ்சி."

—12, கழறிற்—86.

செந்நெறிச் செல்வர்கள் திருமுறைவாயிலாகச் சிவதீக்கை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். தீக்கையில்லா வழிபாடு கைச் சாத்தில்லாச் சீட்டோடொக்கும். தீக்கையில் முதன்மை திருநீறிடுதல், தொடுமிடந் தொடுதல் சிவஞ்செய்தல் என மூன்றும். இவற்றிற்கு முறையே திருநீற்றுப் பதிகம், திரு அங்கமாலை, திரு அஞ்செழுத்துப் பதிகங்கள் மூன்றும் முற்றுகக் கடைப்பிடித்தல் வேண்டும். இவற்றிற்கு வேண்டுவன எளியேனுல் திருமுறை வழித் தொகுக்கப்பெற்றுக் கழகவழிவெளிவந்துள்ள "**சிவதீக்கை**" என்னும் நூலிற் காண்க. திருக்கோவிலை வலம் வருங்கால் திருவங்கமாலையினை அன்புடன் ஓதிக்கொண்டு வலம் வருதல்வேண்டும். தீர்த்த நீரில் முழுகுங்கால் அந் நீரை "பைங்குவளைக்கார் மலரால்" என்னும் திருப்பாட்டை ஓதி வணங்கிக்கொள்க. பின் "அத்தா வுன்னடியேனை", "ஏய்ந்த அடிமை" இவ்விரண்டு திருப்பாட்டுக் களையும் ஓதி மூழ்குதல்வேண்டும்.

அருச்சனை தொடங்குங்கால் திங்கள், நாள், கிழமை, நாழிகை, நினைப்பு முதற்கண் ஓதிக்கொள்ளுதல் வேண்டும். **திங்களுக்கு** "மட்டிட்ட புன்னையங்கானல் எனத் தொடங்கும் திருமயிலாப்பூர் திருப்பதிகம் புரட்டாசிமுதல் ஆனி முடிய பத்துத் திங்களுக்கும் பத்துப் பாட்டு. ஆவணிக்குப் "பாவண மேவுசொன்" ஆடிக்கு "ஆடினய்நறு" என்றும் இரண்டு பாட்டுக்கள். **நாள்** முப்பத் தொன்றுக்கும் "சிந்திப்பார்" "மனத்தான்" எனத் தொடங்குந் திருக்குறுந்தொகைத் திருப்பதிக்கத்தில் அகரவரிசைப்பாட்டுக்கள் முப்பத்தொன்றுமாம். அவற்றுள் இருபத்தேழாம் நாளுக்கு "சிந்திப்பார் மனத்தான்" முப்பதாம் நாளுக்கு "ஈறில் கூறையனு"

என்பனவாம். **கிழமை** ஞாயிறுமுதல் சனி முடிய ஏழு நாளுக்கும் பிள்ளையார்முதல் அடியார் முடிவாகக் கூறப்பட்டுள்ள போற்றித் தாண்டகங்கள் ஏழுமாம், **நாழிகை** முப்பதுக்கும் நமச்சிவாயத் திருப்பதிகங்கள் மூன்றுமாம். சம்பந்தர் பதிகத்தில் வரும் பதினோராவது பாட்டைப் பத்தாவது பாட்டொடு சேர்த்துக்கொள்ளுதல்வேண்டும். **நினைப்பு** "பொன்னும் மெய்ப்பொருளும்" என்னும் பாட்டை ஓதிக்கொள்க.

> திங்களொடு நாள்கிழமை நாழிகையே நன்நினைப்புப்
> பொங்குதிரு மாமுறைகள் போற்று.

அருச்சனைத் தொடக்கத்தில் ஓதவேண்டுவன, "ஆக்கையாற் பயனென்", "செழுந்தண்மால்வரை", "போற்றிசைத்துப்".

அருச்சனை முடிவில் திருவருட்கொடை வழங்குங்கால் ஓதவேண்டுவன; "சினமலிகரியுரி", "தெருளு மெய்க்கலை விளங்கவும்"·

திருவிழாவின் போது ஓதவேண்டுவன; "முத்து விதானம்", எனத் தொடங்கும் திருப்பதிகமுற்றும் "மட்டிட்ட புன்னையங்" திருப்பதிகம், "சித்தம் நிலாவும்".

இங்கே குறிக்கப்படுகின்ற முதல் நினைப்புத் திருப்பாட்டுக்கள் அனைத்தும் திருமுறைக்கண் காணப்படுவனவே. திருமுறைகளை நோக்கிக் கண்டுகொள்க.

திருக்கோவில்

உலகமும் உடலும் ஒப்புமையுள்ளன. இவற்றை அண்ட பிண்ட சமம் என்ப. உலகத்தின் கண்ணும் உடலின்கண்ணும் சிவபெருமான் ஒப்ப நின்றருள்கின்றனன். உடலமைப்புப்போன்று திருக்கோவிலமைப்புங் காணப்படும். அதனைச் சிறிது காண்பாம் :

திருக்கோவில்கள் இருவகைப்படும். ஒன்று உடல் உருவகமாகிய சரீரப் பிரத்தாரம். மற்றொன்று நெஞ்சுருவகம் எனப்படும் இருதயப்பிரத்தாரம். திருக்கோவிலிலுள்ள இறைநிலையெனப்படும்

15-ல், அறைநிலை, பெருநிலை, முழுக்குநிலை, ஒப்பனை நிலை, அவை நிலை என அறுவகைப்படும். இவை முறையே கருப்பக்கிருகம், அருத்தமண்டபம், மகாமண்டபம், நானமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் எனவுங் கூறுப. இவ்வாறும் உடம் பகத்துக் காணப்படும் ஆறிடங்களாகும். அவை மூலம், கொப்பூழ், மேல்வயிறு, நெஞ்சு, மிடறு, புருவநடு என்பனவாம். இவற்றை முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தம், ஆக்ஞேயம் எனவுங் கூறுப.

சுற்றுகள் ஐந்தும் ஐவகை உடம்புகளையும் குறிக்கும். ஐவகை உடம்புகள் வருமாறு: உணவுடம்பு, உயிர்ப்புடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு என்பன.

இவற்றை ஐங்கோசம் எனவுங் கூறுப, அவை வருமாறு:

“ மருவா னந்தம் விஞ்ஞானம் மனோபி ராணன் அன்னமயம்
உருவாந் தன்மை யுண்டாயமுன் ஒன்றுக்கொன்று சூக்குமமாய்
வருமாம் அன்ன மயம்பற்றி மாயை முதற்காரணமாகும்
அருவாய் ஆன்மா ஐங்கோசத் தார்ப்புண்டவற்றின் அகம்புறமாம்.”

—சிவஞானசித்தியார். 4-2-18.

முதல் சுற்று கண்ணுக்குப் புலனும் அன்னமய கோசத்தையும், இரண்டாம் சுற்று செய்தற்கருவிகளும் உயிர்மூச்சும் கூடி நிற்பதாகிய பிராணமய கோசத்தையும், மூன்றும் சுற்று அறிதற் கருவிகளும் மனமுங் கூடிய மனோமய கோசத்தையும், நான்காம் சுற்று அறிதற்கருவியும் இறுப்பு என்று சொல்லப்படும் புத்தியும் கூடிய விஞ்ஞானமய கோசத்தையும், ஐந்தாம் சுற்று அகப்புறக் கருவியாகிய அந்தக்கரணத் தொழிலும் இன்பமுங்கூடி ஆனந்தமய கோசத்தையும் குறிப்பனவாம். சுற்று—பிரகாரம்.

ஏழு சுற்றுக்கள் உள்வேல் அவற்றை வருமாறு உணர்க: சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, என்பு, மூளை, வெண்ணீர்

என்பனவாம். இவற்றை முறையே இரசம், இரத்தம், மாமிசம், மேதசு, அத்தி, மச்சை, சுக்கிலம் எனவுங் கூறுப. திருக்கதவுகள் காப்பிட்டுள்ளபோது மறைப்பையும், திறந்துள்ளபோது அருளை யுங் குறிப்பன. அரசமன்றம், தேவமன்றம், கூத்து மன்றம், பொன்மன்றம், ஓவியமன்றம் ஆகிய மன்றங்களைந்தும், உண வுடம்பு முதலிய ஐவகை உடம்புகளையும் குறிப்பனவாகும்.

தூபி அல்லது மேன்முகட்டுக்குடம் நெஞ்சத்தாமரையாகும். கீழிடம் நிலமெய் மேல்நாளம் இருபத்துமூன்று மெய்கள், நாளத்தி லுள்ள முட்கள் அம்ரேசன் முதல் சிகேதன் முடிவாகிய எழுபத் திரண்டு உலகங்கள், எட்டிதழ் எட்டு மெய்கள். கலை அறுபத்து நாலு கேசரங்கள் ஈசுரம் சதாசிவம் பூநுனி, அடிமுடிச்சு மாயை, பொகுட்டுசத்தி, ஐம்பத்தொருவிதை சிவமெய், கலசங்கள் சத்தி! நெஞ்சத்தாமரையில் சிவன் வீற்றிருந்தருளும் குறிப்பு.

உடம்பின் உச்சித்துளை (பிரமரந்திரம்) வடக்குக்கோபுரவாயில், காற் பெருவிரலின் முடிவும், கையின் நடு விரல்களின் முடிவும், எருவாய்த்தொளையும், தெற்கு கோபுரவாயில் புருவநடு நடுக்(அந்த ராள) கோபுரவாயில், உந்தி பலிபீடம், நெஞ்சம் கொடிமரம், ஐவகை யுடம்பு அகப்புறக்கருவி நாலு ஆள் ஒன்று, மிடறு நந்தி, கொடிமரத்தினை நடுநாடி என்ப. குண்டலிசத்தி எனவுங் கூறுப. திருவாசி ஓங்கார வடிவம், ஓங்காரம் அனைத்துத் தேவர்களுக்கும் பிறப்பிடம். ஆனல் சிவபெருமானுக்கு இருப்பிடம் திருக்கோவிற் றிருவலகிடல் மனமாசகற்றல், மெழுக்கிடல் தத்துவஞானம் சாணம் அன்பு நீராகக்கொண்டு உள்ளத் தூய்மை செய்தல் அறிவுவெளிச் சிவக்குறி நன்கு விளங்கும். திருவிளக்கிடல் உடம்பு திருக்கோவில், உள்ளம் தகளி, உணர்வு நெய், உயிர் திரி மூதறிவு தீப்பொருத்தி விளக்கிடல் இவ்வொளி சிவவொளி போக்கப்படுவது ஆணவ வல்லிருள் திரை மாயை. திருவருளால் போக்கிச் சிவக்குறியினைக் காண்டல். "ஆலயந்தானும் அரனெனத்தொழும்" என்னுந் தனித் தமிழ் முறைப்படி திருக்கோவிலைச் சிவனெனவே உள்கி வழி படுவதாம்,

திருவிழா

நாடொறுஞ் செய்யும் வழிபாடு பூசனை எனப்படும். பூசுதல் என்பது அழகுபடுத்தல். முன்னுள்ள அழுக்ககற்றித் தூய்மைப் படுத்தி அழகு தரும் பொருளை அணிதல். அஃது ஒருவர் முழுகித் திருநீறணிதல் இதற்கொப்பாம். விழா வென்பது விழைந்து செய்யப்படும் சிறப்புப் பூசையைக் குறிக்கும். விழைதல் விரும்புதல். "சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு." என்னும் செந்தமிழ்ப் பொதுமறையான் திருவிழாவுண்மை தெளிக.

சிவபெருமானைச் சீலம் நோன்பு எனப்படும் சரியை கிரியை நிலையினில் நிற்போர் முறையே வெளிப்படத்தோன்றும் உருவத் திருமேனியையும், அருவுருவத்திருமேனியாகிய சிவக்குறியினையும் வழிபடுவர். செறிவினராகிய யோகியர் அகத்தே தோன்றும் ஒளிவண்ணத்தை வழிபடுவர். அறிவுநிலையினராகிய ஞானியர் மெய்யுணர்வின் வாயிலாக எங்குமாய்க்கண்டு வழிபடுவர். இந்நிலை கேட்டுப் படித்தல், பார்த்துப் படித்தல். பாராது ஒப்புவித்தல், தாமே பாடுதல் என்னும் நிலைகளோ டொக்கும்.

திருமுழுக்கின் வகைகளும் பயனும்: மாக்காப்புச் செய்தோர் பதினெண்வகைக் கூலமிகு செல்வரராவர். கூலம்–தானியம், திருமஞ்சனம் - பெருஞ்செல்வம், பால் - அமைதி, தயிர் - வல்லுடல், நெய் - நல்லின்பம், தேன் - இசைவன்மை, சருக்கரை - நூல்வன்மை, இளநீர் - மக்கட்பேறு, பழவகை - ஈர்ப்புநன்மை, ஐங்கூட்டமிழ்து - நெடுவாழ்நாள், சந்தனம் - நூறக்க இன்பம், தூயநீர் - வானவர் கோனின்பம் முதலிய பேறுகளை முறையே எய்துவர். உலகனைத்துமே கானநீரெனக் கண்டு தெளியும் மெய்யுணர்வே திருமஞ்சனம் எனலுமாம்.

அகவழிபாட்டில் தம்மையொரு நறுமணமாலையாக சாத்துதலாம். மேலும் கொல்லாமை ஐந்தடக்கல் கொள்பொறுமை யோடிரக்கம், நல்லறிவு மெய்தவம் அன்பு ஆகிய எட்டுப் பண்புகளும் மலராகக் கொண்டு வழிபடுதலாம். திருக்கோவில்களில்

முழங்கும் இன்னியங்களின் ஒலிகள் அகத்தவ முயற்சியால் ஆறு நிலைகளுக்கு மேலாய் உச்சித்துளையில் காணப்படும் திங்கள் மண்டலத்தினின்றுருகப்பாயும் அமிழ்த வெள்ளம் பத்து நாடிகளில் நிறையுங்கால் எழும் ஒலிகளைக் குறிக்கும். அவை வருமாறு: சதங்கையொலி, சிலம்பொலி, கண்டாமணியொலி சங்கொலி, யாழொலி, குழலொலி, பேரிகையொலி, மத்தள வொலி, மேகவொலி, தாளவொலி என்பன. அழைத்தல் ஆவா கனம். நுழைத்தல் தாபனம். இழைத்தல் சந்நிதானம். ஆவா கனம் ஆவி திருவருளால் சிவபெருமான் பேரொளியிலடங்குதல் தாபனம் அடங்கியதில் அழுந்தல். சந்நிதானம் சிவனிறைவால் ஆவியின் அறிவு ஒற்றித்தல். சந்நிரோதம் சிவத்துடன் எக்காலத்தும் ஆவியின் உணர்வு ஒற்றித்தல். பாத்தியம் சிவ பெருமானின் அன்பறிவாற்றல்களாகிய ஒளி நிழலிற் சேர்தல். ஆசமனியம் திருவருட்டன்மைமிக்க திருமுகத்தில் பொருந்துதல் அருக்கியம் அருளைக்கழலும் திருவடியிற் பொருந்துதல். இம் மூன்றினையும் முறையே அடிநீர் குடிநீர் முடிநீர் மூன்றும் அடியன் பறிவாற்றலாம்.

நறும்புகை மலமகற்றும் அறிவாற்றற் குறிப்பு. உறும் ஒளி திருவடியுணர்வின் புணர்ப்படையாளம். இவற்றை முறையே தூபதீபம் என்ப. படைப்பு தற்போத நீக்கமாகும். சிவஞ் செய்தல் (செபித்தல்) சிவம்தானும் வண்ணம் பயிலுதல் கருப்பூர வொளி—ஆவி சிவத்துடன் எஞ்சாது கருப்பூரம் தீயிற்கலத்தல் போல் கலத்தல். பூதங்கள் ஐந்தின்வகையா ஐவகை முகமன்கள் அன்புடனளித்தல். முகமன்—உபசாரம். நிலம்: பூ, சோறு, கூறை முதலியவைகள், நீர்: நீர், பால், தயிர், நெய் முதலியவை. நெருப்பு: பொன், வெள்ளி, அணிகள், தீபம், கண்ணாடி முதலியவை, உயிர் (காற்று) நறும்புகை, கவரிமயிர்ச்சாமரம், விசிறிமுதலியவை, விசும்பு: மணியோசை, மந்திரம் முதலியவை, கொடி ஏற்றம்: ஆணவமும் அதன்படையாகிய காமம் வெகுளி மயக்கங்களும் தோற்றோடும்படி திருவருளாட்சி திகழ்தல். திருவிழா: முதல்நாள்—பருவுடலின் வேறு ஆமி என்னும் உண்மை குறிப்பதாகும். இரண்டாம் நாள்–நுண்ணுடலின் வேறு ஆவிஎன்

றல் மூன்றும் நாள்—மூவினை முக்குணம் மும்மலம், முக்குற்றம். முப்பிறப்பு முதலானவை நீங்குதற்குறிப்பாம். நான்காம் நாள்: அகப்புறக்கருவி (அந்தக்கரணம்) நான்கு, தோற்றம் நான்கு நீங்குவதாம். ஐந்தாம்நாள்—ஐம்பொறி, ஐந்தவத்தை, ஐம் மலங்கள் நீங்குவதாம் ஆறும்நாள்—அகப்பகை ஆறு, வழி ஆறு, கன்மமலம் ஆறு, வழிப்பேறு ஆறு நீக்கமாம் ஏழாம்நாள் எழுவகை பிறப்பு, தாவா மாயை மெய் ஏழு, அறியாமை, பொய், மறதி மருள், பாழ், பொறுமை, அச்சம் மாயாமல நீக்கம். எட்டாம் நாள்—சிவபெருமான் எட்டுக்குணங்களையும் குறிக்கும். ஒன்பதாம் நாள்—சிவபெருமானின் நவந்தருபேதம் நாட்டுவதாம். பத்தாம்நாள்—பேரின்பப் பெருங்கடலில் திளைத்துமாறு இன்ப மெய்துதல்.

முதல்நாள் மரநிழற் சேவையானது படைப்புத் தொழிலைக் குறிக்கும் பண்பாகும். இரண்டாம் நாள் ஞாயிறு திங்கள்களின் ஒளிவடிவக்காட்சி, இது காப்பாகும். மூன்றும் நாள் நந்தி பூத ஊர்தி. இவற்றுள் காவல் நந்தி (அதிகாரநந்தி) திருமால் நந்தி, விடை நந்தி, என்பவற்றுள் காவல் நந்தி மேல் வருகாட்சியும் பூதவூர்திமேல் வருகாட்சியும் துடைப்படையாள மாகும். நான்காம் நாள் ஐம்முகவூர்தி மறைப் படையாளம் ஐந்தாம் நாள் குறிவடிவாகிய ஆனேற்றூர்தியின் மேல் வருகாட்சி அருள லடையாளமாகும். ஆறும்நாள் யானை ஊர்தி ஒடுக்கமுறை (லயக்கிரமம்) செய்தருளும் கோலம். ஏழாம் நாள் திருத்தேர்க் காட்சி திரியும் முப்புரம் நகையின் எரிசெய்த திருக்கோலம் எட்டாம் நாள் பரிமாவூர்தி மெய்கள் முப்பத்தாறையும் இவர் தந்தாரும் இறைவன் திருக்காட்சி. இவர்தந்தூர்தல் மேலேறிச் செலுத்துதல். ஒன்பதாம் நாள் பலிக்கெழு கோலம் ஆவியும் உடலும் உடையெல்லாமும் மேவிய சிவன்பால் ஒப்புவித்தடிமை யாதலே தாவிலா நற்றவம் என்னும் நற்குறிப்பு. பத்தாம் நாள் திருக்கூத்துக் காட்சி மெய்யடியார்கள் பால் மேவியுள்ள பந்தங் களனைத்தும் நொந்தொழிய அகற்றும் நுண்ணருட் காட்சி. அம்முறையால் இக்காட்சி **பந்தம்பறி** யெனவும் பகரப்படுகின்றது. பதினொராம் நாள் பெருவள்ளற் பிழம்பாகிய தியாகராச மூர்த்தி

யின் திருக்காட்சி. இது சிவபெருமானின் திருவடியில் திருவருளால் உள்ளமாகிய ஆருயிர் பெருமிதப் புணர்ப்பாய்ப் புணர்ந்து மீளா ஆளாய்ப் பேரின்பந் துய்க்கும் பேரருட் குறிப்பு. இதன் மேலும் விழாக் குறிப்புக்கள் வேண்டுவனவேல் இதுபோல் உய்த்துணர்ந்து கொள்க. திருவூர் தோறும் திருவிழாக்கள் சிறிது வேறுபட்டுக் காணப்படினும் இம்முறை கொண்டு அவற்றையும் எளிதின் உய்த்துணர்ந்து கொள்க.

திருவிழாச் சிறப்பினையும் இன்றியமையாது செய்தல் வேண்டும் என்னும் உண்மையினையும் சம்பந்தப் பெருமானர் அருளிய திருமயிலாப்பூர் "மட்டிட்ட புன்னையங் கானல்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தானும், அப்பர் பெருமானர் அருளிய "முத்துவிதானம்" எனத் தொடங்கும் திருவாரூர்த் திருப்பதிகத்தானும் உணரலாம். இவ்விரண்டு திருப்பதிகங்களையும் திருவிழாக் காலங்களில் திருக்கோவில்களில் இன்றியமையாது எல்லாரானும் ஓதப்படுதல் வேண்டும். கொடியேற்றும் பொழுது மெய்கண்ட நூல்களில் ஒன்ருகிய கொடிக்கவி என்னும் நூலில் நான்கு திருப்பாட்டுக்கள் உள்ளன. அவை முறையே ஒருபுடை யொப்பாகச் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நான்கையும் குறிப்பனவாகும். அவற்றை இன்றியமையாமதாதிக் கொடி ஏற்றுதல் வேண்டும்.

பழங்கதையாகிய புராணங்களைப் பத்தியுடன் ஓதுவதாலும், ஓதக் கேட்பதாலும் அனைவர்களும் திருவருள் வலத்தால் நலமெலாம் எய்திவாழ்வர். அங்ஙனம் வாழ்வதற்கு வழிகாட்டியாகத் திகழ்வது புராணங்களே. அத்தகைய புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்தும் சிவ புண்ணியப் பேறு எல்லா நலங்களுக்கும் உறைவிடமாகிய திரு. N. K. மாரிமுத்து முதலியாரவர்கட்குத்திருவருளால் வாய்ந்துள்ளது. அவர்கள் குடும்பத்தார்கட்குத் திருவருள் எழின் மலர்மகள், கலைமகள், செயமகள், புகழ்மகள் வாயிலாகப் பொருளும் ஞானமும் போகமும் என்றும் அளித்தருளுமாக.

இவ்வரியதொண்டில் அடியேனுக்கு வரைதல் பணியைத் தந்து பங்குகொள்ளச் செய்வித்த அப்பெரியார்க்கு எளியேனின் நன்றியும் வணக்கமும் உரியவாகுக. புராணங்களில் சிற்சில புனைவுகள் காணப்படுவன உண்மையுணர்த்தக் கதைவாயிலாக அமைத்துள்ள உருவகங்களேயாம். இதன்கண் சிவனெறியாளர் கடைப்பிடித்தொழுக வேண்டிய எல்லாவற்றிற்கும் போதுமான அளவு குறிப்புக்கள் கொடுத்துள்ளேன். அவற்றைச் சிறுச்சிறு வெளியீட்டுவாயிலாக இப்பெரியாரவர்கள் வெளியிடத்திருவருள் புரியும். எளியேன் வரைந்தவற்றில் குற்றங் காணப்படின் உலகு பொறுத்தருளுமாக.

சென்னை, அன்புள்ள,

24-6-1964. திருவள்ளுவரகம், **ப. இராமநாதன்.**

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர் தல தேவாரங்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண்-பஞ்சமம் 3-திருமுறை

திருச்சிற்றம்பலம்

விடையவன் விண்ணுமண்ணுந் தொழநின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலித்தோ லுடை கோவணம் டல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்கவெண்டோ
டுடையவன் னூனமில்லி யுறையும்மிட மொற்றியூரே (1)

பாரிடம் பாணிசெய்யப் பறைக்கட் செறுபல்கணப்பேய்
சீரொடும் பாடலாட லிலயஞ்சிதை யாதகொள்கைத்
தாரிடும் போர்விடையன் றலைவன்றலை யேகலனா
ஊரிடும் பிச்சைகொள்வா னுறையும் மிடமொற்றியூரே (2)

விளிதரு நீருமண்ணும் விசும்போடனல் காலுமாகி
அளிதரு பேரருளா னரனாகிய வாதிமூர்த்தி
களிதரு வண்டுபண்செய் கமழ்கொன்றையினோ டணிந்த
ஒளிதரு வெண்பிறை யானுறையும் மிடமொற்றியூரே (3)

அரவமே கச்சதாக வசைத்தானலர் கொன்றையந்தார்
விரவி வெண்ணூல்கிடந்த விரையார் வரைமார்பனெந்தை
பரவுவார் பாவமெல்லாம் பறைத்துப்படர் புன்சடைமேல்
உரவுநீ ரேற்றபெம்மா னுறையும் மிடமொற்றியூரே (4)

விலகினார் வெய்யபாவம் விதியாலருள் செய்துநல்ல
பலகினார் மொந்தை தாளந் தகுணிச்சமும் பாணியாலே
அலகினால் வீசிநீர்கொண்டடி மேலல ரிட்டுமுட்டா
துல கினரேத்த நின்றானுறையும் மிடமொற்றியூரே (5)

கமையொடு நின்றசீரான் கழலுஞ்சிலம்பு மொலிப்பச்
சுமையொடு மேலும்வைத்தான் விரிகொன்றையுஞ் சோமனையும்
அமையொடு நீண்ட திண்டோளழ காயபொற்றோடிலங்க
உமையொடுங் கூடிநின்ரு னுறையும் மிடமொற்றியூரே (6)

நன்றியால் வாழ்வதுள்ளம் முலகுக்கொரு நன்மையாலே
கன்றினர் மும்மதிலுங் கருமால்வரையே சிலையாப்
பொன்றினர் வார்சுடலைப் பொடி நீறணிந்தாரழலம்
பொன்றின லெய்த பெம்மானுறையும்மிட மொற்றியூரே (7)

பெற்றியாற் பித்தனெப்பான் பெருமான் கருமானுரிதோல்
சுற்றியான் சுத்திசூலஞ் சுடர்க்கண்ணு தன் மேல்விளங்கத்
தெற்றியாற் செற்றரக்கன்னுடலைச் செழுமால் வரைக்கீழ்
ஒற்றியான் முற்றுமாள் வானுறையும்மிட மொற்றியூரே (8)

திருவினர் போதினனுந் திருமாலுமொர் தெய்வமுன்னித்
தெரிவினற் காணமாட்டார் திகழ்சேவடி சிந்தைசெய்து
பரவினற் பாவமெல்லாம் பறையப்படர் பேரொளியோ
டொருவனுய் நின்ற பெம்மானுறையும்மிட மொற்றியூரே (9)

தோகையம் பீலிகொள்வார் துவர்க்கூறைகள் போர்த்துழல்வார்
ஆகமசெல் வனுரையலர் தூற்றுதல் காரணமாக்
கூகையம்மாக்கள் சொல்லைக் குறிக்கொள்ளன்மி னேமுலகும்
ஓகைதந்தாளவல்லா னுறையும்மிட மொற்றியூரே (10)

ஒண்பிறைமல்கு சென்னியிறைவன்னுறை யொற்றி யூரைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ்ஞான சம்பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும் பரவிப்பணிந் தேத்தவல்லார்
விண்புனை மேலுலகம் விருப்பெய்துவர் வீடெளிதே (11)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனர்

திருநேரிசை **4-திருமுறை**

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச் சடையில்வைத்த வேதகீதன்றன் பாதம்
மெள்ளத்தானடைய வேண்டின் மெய்தரு ஞானத்தீயால்
கள்ளத்தைக் கழியநின்ருர் காயத்துக் கலந்துநின்று
உள்ளத்து ளொளியுமாகு மொற்றியூ ருடையகோவே (1)

வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா வானவரிறைவனின்று
புசிப்பதோர் பொள்ளலாக்கை யதனெடும் புணர்வுவேண்டில்
அசிர்ப்பெனு மருந்தவத்தாலான்மாவி னிடமதாகி
உசிர்ப்பெனு முணர்வுமுள்ளா ரொற்றியூ ருடையகோவே (2)

தானத்தைச் செய்துவாழ்வான் சலத்துளே யழுந்துகின்றீர்
வானத்தை வணங்கவேண்டில் வம்மின்கள் வல்லீராகிவ்
ஞானத்தை விளக்கையேற்றி நாடியுள் விரவல்லார்
ஊனத்தை யொழிப்பர்போலு மொற்றியூருடைய கோவே (3)

காமத்திளழுந்தி நின்று கண்டராலொறுப்புண்ணுதே
சாமத்து வேதமாகி நின்றதோர் சயம்புதன்னை
ஏமத்து மிடையிராவு மேகாந்தமியம்பு வார்க்கு
ஓமத்துளொளிய தாகுமொற்றி யூருடைய கோவே (4)

சமயமே லாறுமாகித் தானொரு சயம்புவாகி
இமையவர் பரவியேத்த வினிதினங்கிருந்த வீசன்
கமையினை யுடையராகிக் கழலடி பரவுவார்க்கு
உமை யொருபாகர் போலுமொற்றியூ ருடையகோவே (5)

ஒருத்திதன்றலைச் சென்ருளைக் கரந்திட்டா னுலகமேத்த
ஒருத்திக்கு நல்லனுகி மறுப்படுத்தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம்வைத்தா னுணர்வினுலைய முண்ணீ
ஒருத்திக்கு நல்லனல்ல னொற்றியூருடைய கோவே (6)

பிணமுடை யுடலுக்காகப் பித்தராய்திரிந்து நீங்கள்
புணர்வெனும் போகம்வேண்டா போக்கலாம் பொய்யைநீங்க
நிணமுடை நெஞ்சினுள்ளா னினைக்குமா நினைக்கின்றார்க்கு
உணர் வினோடிருப்பர் போலுமொற்றியூடைய கோவே (7)

பின்னுவார் சடையான்றன்னைப் பிதற்றிலாப் பேதைமார்கள்
துன்னுவார் நரகந்தன்னுட் டொல்வினை தீரவேண்டில்
மன்னுவான் மறைகளோதி மனத்தினுள் விளக்கொன்றேற்றி
உன்னுவாருள்ளத் துள்ளா ரொற்றியூருடைய கோவே (8)

முள்குவார் போகம்வேண்டின் முயற்றியாலிடர்கள் வந்தால்
எள்குவாரெள்கினின்றங்கிது வொருமாய மென்பார்
பள்குவார் பத்தராகிப் பாடியுமாடிநின்றும்
உள்குவா ருள்ளத்துள்ளா ரொற்றியூருடையகோவே (9)

வெறுத்துகப் புலன்களைந்தும் வேண்டிற்று வேண்டுநெஞ்சே
மறுத்துகவார் வச்செற்றக்குரோதங்களான மாயப்
பொறுத்துகப் புட்பகத்தேருடையானையடரவூன்றி
ஒறுத்துகந் தருள்கள் செய்தாரொற்றியூ ருடையகோவே (10)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை **4-திருமுறை**

திருச்சிற்றம்பலம்

ஓம்பினேன் கூட்டைவாளா வுள்ளத்தோர் கொடுமைவைத்துக்
காம்பிலா மூழைபோல கருத்திற்றே முகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபலநினைக் கின்றேனை
ஓம்பிநீ யுய்யக்கொள்ளா யொற்றியூ ருடையகோவே (1)

மனமெனும் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணு
துனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே (2)

திருச்சிற்றம்பலம்

செற்றுக்களிற்றுரி கொள்கின்றஞான்றுசெருவெண் கொம்பொன்
றிற்றுக் கிடந்ததுபோலு மிளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக்கிடந்தது கிம்புரிபோலச் சுடரி மைக்கும்
நெற்றிக் கண்மற்றதன் முத்தொக்குமாலொற்றி யூரனுக்கே (1)

சொல்லக்கருதிய தொன்றுண்டு கேட்கிற்றொண்டா யடைந்தார்
அல்லற்படக்கண்டு பின்னென் கொடுத்தியலை கொண்முந்நீர்
மல்லற்றிரைச்சங்க நித்திலங் கொண்டு வம்பக்கரைக்கே
ஒல்லைத் திரைக்கொணர்த் தெற்றொற்றி யூருறையுத்தமனே (2)

பரவைவருதிரை நீர்க்கங்கை பாய்ந்துக்க பல்சடைமேல்
அரவமணிதரு கொன்றை யிளந்திங்கள் சூடியதோர்
குரவநறுமலர் கோங்க மணிந்துகுலாய சென்னி
உரவு திரைகொணர்ந் தெற்றொற்றி யூருறையுத்தமனே (3)

தானகங் காடரங்காக வுடையது தன்னடைந்தார்
ஊனக நாறுமுடை தலையிற்பலி கொள்வதுந்தான்
தேனக நாறுந்திரு வொற்றியூருறை வாரவர்தாம்
தானக மேவந்து போனகம் வேண்டியுழிதர்வரே (4)

வேலைக்கடனஞ்ச முண்டுவெள் ளேற்றொடும் வீற்றிருந்த
மாலைச் சடையார்க் குறைவிடமாவது வாரிகுன்ற
ஆலைக் கரும்பொடு செந்நெற்கழனி யருகணைந்த
சோலைத் திருவொற்றியூரை யெப்போதுந் தொழுமின்களே (5)

புற்றினில்வாழு மரவுக்குந் திங்கட்குங் கங்கையென்னும்
சிற்றிடையாட்குஞ் செறிதரு கண்ணிக்குஞ் சேர்விடமாம்
பெற்றுடை யான்பெரும் பேச்சுடையான் பிரியாதென்னையாள்
விற்றுடையா னொற்றியூருடையான் றன்விரிசடையே (6)

இன்றரைக் கண்ணுடையா ரெங்குமில்லை யிமயமென்னும்
குன்றரைக் கண்ணன்குலமகட் பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங்கொடுத்து மையாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண்டீ ரொற்றியூருறை யுத்தமனே (7)

சுற்றி வண்டியாழ்செயுஞ் சோலையுங்காவுந் துதைந்திலங்கு
பெற்றி கண்டான்மற்றி யாவருங்கொள்வர் பிறரிடைநீ
ஒற்றி கொண்டாயொற்றி யூரையுங்கைவிட் டுறுமென் றெண்ணி
விற்றி கண்டாய்மற்றிது வொப்பதில்லிடம் வேதியனே (8)

சுற்றிக் கிடந்தொற்றி யூரனென்சிந்தை பிரிவறியான்
ஒற்றித் திரிதந்துநீ யென்செய்தி யுலகமெல்லாம்
பற்றித் திரிதந்துபல்லொடு நாமென்று கண்குழித்துத்
தெற்றித் திருப்பதல்லா லென்னசெய்யு மித்தீவினையே (9)

அங்கட் கடுக்கைக்கு முல்லைப்புறவ முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச்சுடலைக் களரிபரு மணிசேர்
கங்கைக்கு வேலையரவுக்குப் புற்றுக்கலை நிரம்பாத்
திங்கட்கு வானந்திரு வொற்றியூரர் திருமுடியே (10)

தருக்கின வாளரக்கன் முடிபத்திறப் பாதந்தன்னால்
ஒருக்கின வாறடியேனைப் பிறப்பறுத் தாளவல்லான்
நெருக்கின வானவர்தானவர் கூடிக்கடைந்த நஞ்சைப்
பருக்கின வாறென்செய்கே னொற்றியூருறை பண்டங்கனே (11)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை **5-திருமுறை**

ஒற்றியூரு மொளிமதித் பாம்பினை
ஒற்றியூரு மப்பாம்பு மதனையே
ஒற்றியூர வொருசடை வைத்தவன்
ஒற்றியூர் தொழநம் வினையோயுமே (1)

வாட்ட மொன்றுரைக் கும்மலை யான்மகள்
ஈட்ட வேயிரு ளாடியிடு பிணக்
காட்டி லோரிகடிக்க வெடுத்த தோர்
ஓட்டை வெண்டலைக் கையொற்றி யூரரே (2)

கூற்றுத் தண்டத்தை யஞ்சிக்குறிக் கொண்டின்
ஆற்றுத் தண்டத் தடக்கு மரனடி
நீற்றுத் தண்டத்த ராய்கிளை வார்க்கெலாம்
ஊற்றுத் தண்டொப்பர் போலொற்றி யூரரே (3)

சுற்றும் பேய்சுழலச் சுடுகாட் டெரி
பற்றி யாடுவர் பாய்புலித் தோலினர்
மற்றை யூர்களெல்லாம் பலிதேர்ந்து போய்
ஒற்றியூர் புக்குறை யுமொரு வரே. (4)

புற்றில் வாளர வாட்டி யுமையொடு
பெற்ற மேறுகந்தேறும் பெருமையான்
மற்றை யாரோடு வானவ ருந்தொழ
ஒற்றி யூருறை வானோர் கபாலியே (5)

போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்த மணாளனார்
ஓது வேதிய னார்திரு வொற்றியூர்
பாத மேத்தப் பறையு நம்பாவமே (6)

பலவு மன்னங்கள் பன்மலர் மேற்றுஞ்சும்
கலவு மஞ்சைகள் காரென வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு வொற்றியூர்
நிலவி னானடி யேயடை நெஞ்சமே (7)

ஒன்று போலு முகந்தவ ரேறிற்று
ஒன்று போலு முதைத்துக் களைந்தது
ஒன்று போலொளி மாமதி சூடிற்று
ஒன்று போலுகந் தாரொற்றி யூரரே (8)

படைகொள் பூதத்தர் வேதத்தர் கீதத்தர்
சடைகொள் வெள்ளத்தர் சாந்தவெண் ணீற்றினர்
உடையுந் தோலுகந் தாருறை யொற்றியூர்
அடையு முள்ளத் தவர்வினை யல்குமே (9)

வரையி னாலுயர் தோளுடை மன்னனை
வரையி னார்வலி செற்றவர் வாழ்விடம்
திரையினார் புடை சூழ்திரு வொற்றியூர்
உரையினாற் பொலிந் தாருயர்ந் தார்களே (10)

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் **6-திருமுறை**

வண்டோங்கு செங்கமலங் கழுநீர்மல்கு
மதமத்தஞ் சேர்சடைமேன் மதியஞ்சூடித்
திண்டோள்க ளாயிரமும் வீசிநின்று
திசைசேர நடமாடிச் சிவலோகனார்
உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதிவேண்டி
யொற்றியூர் மேயவொளி வண்ணனார்
கண்டேனான் கனவகத்திற் கண்டேற்கென்றன்
கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே (1)

ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளேறேறி
யணிகங்கை செஞ்சடைமே லார்க்கச்சூடிப்
பாகத்தோர் பெண்ணுடையா ராணுமாவர்
பசுவேறி யுழிதருமெம் பரமயோகி
காமத்தா லைங்கணையான் றன்னைவீழக்
கனலா வெறிவிழித்த கண்மூன்றினார்
ஓமத்தா லான்மறைக லோதலோவா
வொளிதிகழு மொற்றியூ ருறைகின்றாரே (2)

வெள்ளத்தை செஞ்சடைமேல் விரும்பிவைத்தீர்
வெண்மதியும் பாம்பு முடனேவைத்தீர்
கள்ளத்தை மனத்தகத்தே கரந்துவைத்தீர்
கண்டார்க்குப் பொல்லாது கண்டீரெல்லே
கொள்ளத்தா னிசைபாடிப் பலியுங்கொள்ளீர்
கோளரவுங் குளிர்மதியுங் கொடியுங்காட்டி
உள்ளத்தை நீர்கொண்டீ ரோதலோவா
வொளிதிகழு மொற்றியூ ருடையகோவே (3)

நரையார்ந்த விடையேறி நீறுபூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகையேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
வெம்மடிக ளும்மூர்தா னேதோவென்ன
விரையாதே கேட்டியேல் வேற்கண்நல்லாய்
விடுங்கலங்க ணெடுங்கட லு ணின்றுதோன்றும்
திரைமோதக் கரையேறிச் சங்கமூருந்
திருவொற்றி யூரென்றார் தீயவாறே (4)

மத்தமா களியானை யுரிவைபோர்த்து
வானகத்தார் தானகத்தா ராகிநின்று
பித்தர்தாம் போலங்கோர் பெருமைபேசிப்
பேதையரை யச்சுறுத்திப் பெயரக்கண்டு
பத்தர்கடாம் பலருடனே கூடிப்பாடிப்
பயின்றிருக்கு மூரேதோ பணியீரென்ன
ஒத்தமைந்த வுத்திரநா டொர்த்தமாக
வொளிதிகழு மொற்றியூ ரென்கின்றாரே (5)

கடிய விடையேறிக் காளகண்டர்
கலையோடு மழுவாளோர் கையிலேந்தி
இடிய பலிகொள்ளார் போவா ரல்ல
ரெல்லாந்தா னிவ்வடிகள் யாரென்பாரே
வடிவுடைய மங்கையுந் தாமுமெல்லாம்
வருவாரை யெதிர்கண்டோ மயிலாப்புள்ளே
செடிபடுவெண் டலையொன் றேந்திவந்து
திருவொற்றி யூர்புக்கார் தீயவாறே (6)

வல்லராய் வானவர்க ளெல்லாங்கூடி
வணங்குவீர் வாழ்த்துவார் வந்துநிற்பார்
எல்லையெம் பெருமானைக் காணோமென்ன
வெவ்வாற்றா லெவ்வகையாற் காணமாட்டார்
நல்லார்க ளான்மறையோர் கூடிநேடி
நாமிருக்கு மூர்பணியீ ரடிகேளென்ன
ஒல்லைதான் றிரையேறி யோதமீளு
மொளிதிகழு மொற்றியூ ரென்கின்றாரே (7)

நிலைப்பாடே நான்கண்ட தேடிகேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள்வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலக்கநோக்கிக்
கலந்துபலி யிடுவே னெங்குங்காணேன்
சலப்பாடே யினியொருநாட் காண்பேனாகிற்
றன்னுகத் தென்னுக மொடுங்கும்வண்ணம்
உலைப்பாடே படத்தழுவிப் போகலொட்டே
னொற்றியூ ருறைந்திங்கே திரிவானையே (8)

மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை
யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை
பிறிதல்லை யானுயும் பெரியாய்நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீமையல்லை
யுணர்வரிய வொற்றியூ ருடையகோவே (9)

மருவுற்ற மலர்க்குழலி மடவாளஞ்ச
மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்துநோக்கிச்
செருவுற்ற வாளரக்கன் வலிதான்மாளத்
திருவடியின் விரலொன்று லலறவூன்றி
உருவொற்றி யங்கிருவ ரோடிக்காண
வோங்கினவவ் வொள்ளழலா ரிங்கேவந்து
திருவொற்றி யூர்நம்மூ ரென்றுபோனர்
செறிவளைக ளொன்றொன்றாச் சென்றவாரே (10)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனர்

பண்-தக்கேசி 7-திருமுறை

திருச்சிற்றம்பலம்

அழுக்கு மெய்கொடுன் றிருவடியடைந்தே னதுவுநான்
படப்பால தொன்ருனல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள் பிழைப்பனுகிலுந்
திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லான் மற்றுநா னறியேன்
மறுமாற்றம்
ஒழுக்க வென்கணுக் கொருமருந்துரையா யொற்றியூரெனு
மூருறைவானே (1)

கட்டனேன் பிறந்தே னுனக்காளாய்க் காதற் சங்கிலி காரணமாக
எட்டினுற் றிகழுந்திரு மூர்த்தீ யென்செய்வா னடியே னெடுத்
துரைக்கேன்
பெட்டனுகிலுந் திருவடிப் பிழையேன் பிழைப்பனுகிலுந்
திருவடிக் கடிமை
ஒட்டினே னென்னைநீசெய்வ தெல்லா மொற்றியூரெனு மூருறை
வானே (2)

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே கட்டியே பலர்க்குங்
கனிகண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடையமுதே யத்தா வென்னிடரார்க்
கெடுத் துரைக்கேன்
சங்கு மிப்பியுஞ் சலஞ்சலமுரல வயிரமுத்தொடு பொன்மணி
வரன்றி
ஒங்கு மாகட லோதம்வந் துலவுமொற்றியூரெனு மூருரைவானே(3)

ஈன்று கொண்டதோர் சுற்றமொன்றன்ரு லியாவராகிலெ னன்
புடையார்கள்
தோன்ற நின்றருள் செய்தளித்திட்டாற் சொல்லுவாரை யல்லா
தன சொல்லாய்

மூன்று கண்ணுடையா யடியேன் கண்கொள்வதே கணக்கு
வழக்காகில்
ஊன்று கோலெனக் காவதொன் றருளா யொற்றியூரெனு
மூருறைவானே (4)

வழித்தலைப் படுவான் முயல்கின்றே னுன்னைப்போ லென்னைப்
பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீ ரதுபோலச் சுழல்கின்ற தென்னுள்ளம்
கழித்தலைப் பட்டநாயதுபோல வொருவன் கோல்பற்றிக்
கறகறவிழுக்கை
ஒழித்து நீயருளாயின செய்யா யொற்றியூரெனுமூருறைவானே 5

மானைநோக்கியர் கண்வலைப்பட்டு வருந்தி யானுற்ற
வல்வினைக்கஞ்சித்
தேனையாடிய கொன்றையினா யுன்சீலமுங் குணமுஞ் சிந்தியாதே
நானுமித்தனை வேண்டுவதடியே னுயிரொடுங் நரகத்தழுந்தாமை
ஊனமுள்ளன தீர்த்தருள் செய்யா யொற்றியூரெனு மூருறை
வானே (6)

மற்றுத் தேவரை நினைந்துனை மறவே னெஞ்சினாரொடு வாழவு
மாட்டேன்
பெற்றிருந்து பெறுதொழிகின்ற பேதையேன் பிழைத்திட்டதை
யறியேன்
முற்றுநீ யெனைமுனிந்திட வடியேன்கடவதென் னுனைநான்
மறவேனேல்
உற்றநோயுறு பிணிதவிர்த் தருளாயொற்றியூரெனு
மூருறைவாலே (7)

கூடினாய்மலை மங்கையை நினையாய் கங்கையாயிர முகமுடையாளைச்
சூடினாயென்று சொல்லிய புக்காற் றெழும்பனே னுக்குஞ்
சொல்லலுமாமே
வாடிநீயிருந் தென்செய்தி மனனே வருந்தியானுற்ற வல்வினைக்
கஞ்சி
ஊடினாலினி யாவதொன் றுண்டே யொற்றியூரெனு
மூருறைவானே (8)

மகத்திற் புக்கதோர் சனியெனக்காணுய் மைந்தனே மணியே
மணவாளா
அகத்திற் பெண்டுக ளுனென்று சொன்னு லழையேற்போ
குருடா வெனத்தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன் முக்கணு முறையோ
மறையோதீ
உகைக்குந் தண்கட லோதம்வந் துலவு மொற்றியூரெனு
மூருறைவானே (9)

ஓதம் வந்துலவுங் கரை தன்மே லொற்றி யூருறை செல்வனை
நாளும்
ஞாலந்தான் பரவப்படுகின்ற நான்மறை யங்கமோதிய நாவன்
சீலந்தான் பெரிதும் மிகவல்ல சிறுவன் வன்றொண்ட
னூரனுரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப் பரகதி திண்ண
நண்ணுவர்தாமே (10)

பண்-குறிஞ்சி **7-திருமுறை**

திருச்சிற்றம்பலம்.

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைக டீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
ஒட்டுந் திரைவா யொற்றி யூரே (1)

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் மடிக ளிறைவர்க் கிடம்போல்
உந்துந் திரைவா யொற்றி யூரே (2)

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றி னுரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல்
உகளுந் திரைவா யொற்றி யூரே (3)

என்ன தெழிலு நிறையுங் கவர்வான்
புன்னை மலரும் புறவிற் றிகழும்
தன்னை முன்ன நினைக்கத் தருவான்
உன்னப் படுவா னொற்றி யூரே (4)

பணங்கொ ளரவம் பற்றிப் பரமன்
கணங்கள் சூழக் கபால மேந்தி
வணங்கு மிடைமென் மடவா ரிட்ட
உணங்கல் கவர்வா னொற்றி யூரே (5)

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைக ளறுப்பா னென்னை
உடையா னுறையு மொற்றி யூரே (6)

சென்று புரங்க டீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் னரையே
ரென்றை யுடையா னொற்றி யூரே (7)

கலவ மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப் படியான்
உலகி னுள்ளார் வினைக டீர்ப்பான்
உலவுந் திரைவா யொற்றி யூரே (8)

பற்றி வரையை யெடுத்த வரக்கன்
இற்று முரிய விரலா லடர்த்தார்
எற்றும் வினைக டீர்ப்பா ரோதம்
ஒற்றுந் திரைவா யொற்றியூரே (9)

ஒற்றி யூரு மரவும் பிறையும்
பற்றி யூரும் பவளச் சடையான்
ஒற்றி யூர்மே லூர னுரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே (10)

திருச்சிற்றம்பலம்.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

கரிய முகில் போலு மிருளள கபார
கயல் பொருத வேலின் விழிமாதர்
கலவிகளில் மூழ்கி ம்ருகமத படீர
களப முலை தோய அணையூடே
விரக மதுவான மதன கலையோது
வெறிய னென நாளு முலகோர்கள்
விதரண மதானவகை நகைகள் கூறி
விடுவதன் முன் ஞான அருள்தாராய்
அரிபிரமர் தேவர் முனிவர் சிவ யோகர்
அவர்கள் புகழோத புவிமீதே
அதிக நடராஜர் பரவு குருராஜ
அமரர் குலநேச குமரேசா
சிரகரக பாலர் அரிவை யொருபாகர்
திகழ் கனக மேனி உடையாளர்
திருவளரு மாதி புரியதனில் மேவு
செய முருக தேவர் பெருமாளே

சொருபப் பிரகாச விசுவருபப் பிரமாகஙிச
சுகவிப்பிர தேசரச சுடமாயா
துவியப்பிர காசமத சொலியற்றர சாசவித
தொகை விக்ரம மாதர்வயி றிடையூறு
கருவிற்பிற வாதபடி யுருவிற்பிர மோதவடி
களைஎத்திட ராகவகை அதின்மீறிக்
கருணைப்பிர காசவுன தருளுற்றிட ஆசில்சிவ
கதிபெற்றிட ரானவையை ஒழிவேனோ
குருகுக்குட வாரகொடி செருவுக்கிர ஆதபயில்
பிடிகைத்தல ஆதியரி மருகோனே
குமரப்பிர தாபகுக சிவசுப்பிர மாமணிய
குணமுட்டர வாவசுரர் குலகாலா
திருவொற்றியு ருமருவு நகரொற்றியுர் வாரிதிரை
அருகுற்றிடு மாதிசிவன் அருள்பாலா
திகழுற்றிடு யோகதவ மிகுமுக்கிய மாதவர்க
ளிதயத்திட மேமருவு பெருமாளே

ஓம்
திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்ப் புராணம்

உரை நடை

"கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் னுள்ளமும் யானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே."
—4—100—6

அன்பறி வாற்றல்களாகிய இச்சாஞானக்கிரியைகள் மூன்றும் விளக்க முறுவதற்குத் துணையாக நிற்குந் திருவூர்கள் முறையே திருவொற்றியூர், திருவாலவாய் திருவாரூர் என்ப.

பிள்ளையார் காப்பு

எற்றிசையுந் தமிழ்மறையின் இயல்மணமே நனிவீச, எழில் நற்சைவத்
துற்றவறி ஞர்களன் புடனே செய் சிவவொளியே மிகுஞ்சீர் வாய்ந்த
ஒற்றிநகர் மாண்பதனை யேயுரைத்து வினையனைத்து மோச்சுதற்கு
நற்றிறஞ்சேர் குணலயகுஞ் சரன்றுணை நாள்நாளு நாடு வேனால்.

நூல்

நைமிச வனச் சருக்கம்

பேரருட் பெருஞ் செல்வமாகிய கண்ணுதற் பெருமான் திருவடிகளைக் கனவினும் மறவாத சிவமுனிவரின் தலைவர்கள் நைமிச வனத்தின்கண் நன்கு வாழ்ந்து வந்தனர். அவர்கள் நாளும் சிவபூசையினை விடாது செய்வர். சிவ விரதங்களை மேற்கொண்டொழுகுவர். சிவ யோகத்தைப் பயில்வர். சிவ நிட்டையில் இருப்பர்.

இவர்கள் இவ்வாறிருப்ப ஒரு நாள் சூத முனிவர் அங்கு எழுந்தருளினர். அவர் வரும்போது சிவ சிவ என்னும் செந் தமிழ் மந்திரத்தை ஓதிக்கொண்டு வந்தனர். அவர்தம் திரு மேனி முழுவதும் திரு வெண்ணீறு சண்ணித்திருந்தது. சிவ மணியாகிய உருத்திராக்கம் கொத்துக் கொத்தாக அணியப் பட்டிருந்தன. இவையே சிவ வேடப் பொலி வென்னும் உண்மையை விளக்கின.

சூதமாமுனிவரின் வருகையைக் கண்ட முனிவர் குழு வினர் சிவபெருமானைக் கண்ணுரக் கண்டதுபோல் மகிழ்ந் தனர். எழுந்து உச்சி மேற் கைகுவித்தனர். எட்டுறுப்பும் நிலத்தே படும்படி விழுந்து வணங்கி நின்றனர். எட்டுறுப் பாவன ; கைகள் இரண்டு, கால்களிரண்டு, காதுகளிரண்டு, யார்பொன்று, தலையொன்று, என்பன. அம்முனிவர் கூட்டங் களைச் சூதமாமுனிவர் வாழ்த்தி அமரும்படி ஆணையிட்டனர்.

அம்முனிவர் கூட்டங்கள் சூதமா முனிவரின் திருமுன் இருந்து சில வினுக்களை விண்ணப்பித்தனர். அவைவருமாறு: சைவமுனிவர்கள் அனைவர்கட்கும் தலைமணி போன்றவரே ! மறைமுறைகளின் நுண்மைப் பொருளுணர்ந்தவரே, தேவரீர் சில நாட்களுக்குமுன் கற்பகஅம்மையுடன் கபாலீசுரர் எழுந்த ருளியிருக்கும் திருமயிலாப்பூரின் மாண்புகளை மொழிந்தருளி னீர். அப்போது திரு மயிலாப்பூருக்கு வடபக்கம் உள்ளது திருவொற்றியூர் என்னும் திருவூர் என்று அருளினீர். அத் திருவொற்றியூரின் சிறப்புக்களைக் கேட்க மிகவும் வேட்கை யுள்ளோம். அவற்றை அன்புடன் மொழிந்தருள வேண்டு மென்றனர். இதனைக் கேட்ட சூதமாமுனிவர் நெஞ்சமுருகினர் மயிர்க்கூச்செறிந்தது. இன்பக்கண்ணீர் பெருகிற்று. இன்ப வயப்பட்டனர். முனிவர்களே ! நான் திருவொற்றியூர் மாண்மைக் கூறவேண்டுமென்று நீங்கள் என்னிடம் வின வியது என்னுடைய பெரும்புண்ணியமாகும். நான் திருவொற் றியூரை நினைந்தபோது என்னுடைய வினைகளெல்லாம்நீங்கின. அதன் சிறப்பை நான் கூறும் பொழுது என்னுடைய இப் பிறப்பிற்குமேல் இனிப்பிறப்பு வாராது. "திருவொற்றியூர் ! திரு வொற்றியூர் !" என்று உள்ளன்புடன் ஒருவர் ஓவாது சொல்லிக் கொண்டு இருப்பாராஞல் அவர்க்கு மறுபிறவி கிடையாது. கிடையாதாகவே இருவினைக்கீடாக மேலும் மேலும்,பிறப்பினை

எடுக்கும் உயிர்களுக்கு இறப்பினைச் செய்யும் கூற்றுவன் வருவான் என்னும் அச்சம் அவர்க்குஉண்டாவதில்லை.மேலும் 'திருவொற்றியூர்' என்னும் சொல் ஐந்தெழுத்துக்களால் அமைந்தது. அதனால் அது திருவைந்தெழுத்து மந்திரத்தோடு அடுத்த தாகும். மெய்யடியார்களின் திருப்பெயர்களும், திருக்கோவில் திருப்பெயர்களும், திருவூர்களின் திருப்பெயர்களும் தனித் தமிழ் மந்திரங்களேயாம். திருவொற்றியூருக்குப் போக வேண்டுமென்று உண்மைக் காதலுடன் தன் வீட்டிலிருந்து ஒருவர் புறப்பட்டவுடனே அவர் முன் பிறப்பில் செய்த பாவங்கள் வெளிச்சம் வர இருள் நீங்குவது போல் நீங்கும். திருவொற்றியூர் எல்லையினை எய்தி நிலமுற வீழ்ந்து கும்பிட்டவுடன் அதற்கு முன்னுள்ள பிறப்பின் பாவங்கள் ஒழியும். திருவொற்றியூரில் நுழைந்து திருக்கோவிலிற் புகுந்து பேரன்புடன் தியாகராசப் பெருமானைத் திருமுறையோதி வழிபட்ட–தும் மறுபிறப்பு உண்டாக மாட்டாது. இஃது உண்மை என்றனர்.

திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் எழில் மிகு பச்சிளங் கொடியாகிய வடிவுடை நாயகியாரைக் கண் குளிரக் கண்டு கைகூப்பித் தொழுது தலைவணங்கிக் கும்பிட்டு வழிபட்டவர்கட்கு இம்மையில் நல்ல மனைவியும், நல்ல கணவனும், நல்ல மக்கட்பேறும், வளமுறு செல்வங்களும், வாழ்நாள் பெருக்கமும், பிறவும் இடையறுது குறைபாடின்றி எய்தும். மறுமையில் திருக்கைலாபத்தையடைந்து சிவத்தொண்டுகள் புரிந்து இன்புற்றிருப்பர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த திருவொற்றியூரின்கண் முற்செய்த சிவபுண்ணியப் பேற்றால் ஆவி நீங்கப்பெறின் அவர்கள் வானவர்கோனாகிய இந்திரன், படைப்போனாகிய நான்முகன், காப்போனாகிய திருமால்இவர்கள் வாழும் நிலையில் லாத உலகங்களுக்கு மேற்பட்ட நிலைத்த திருவடிப் பேற்றிற்கு அணுக்கப்படியாகிய முப்பத்தாறும் மெய்யென்று சொல்லப் படும் சிவ உலகத்தையடைவர்.

இத்திருவூரில் ஆருயிர்கள்மாட்டு உள்ளன்பும், ஆண்டவன் மாட்டுப் பூண்ட பத்தியும், சிவத்தொண்டும் உடைய மெய்யடியார்கட்கும், உழைத்துண்ணும் ஆற்றலும், உழைக்

கப் பெருவேட்கையும், உடையவர்கட்கு உழைப்புக்கிட்டாமை யானும் உழைப்புக் கிடைத்தும் வருவாய் போதாமையானும் சிலர் வருந்தி வறுமையுறுவர். அத்தகைய மானஞ்சேர் வறிய வர்கட்கும், ஆதரிப்பாரற்று அல்லற்படும் இளையர் முதியவர் கட்கும், கற்கும் மாணவர்கட்கும், உறுப்புக்குறைபாடுடையார் கட்கும், நோயுற்றூர்கட்கும், திருவிழாக்காண வந்து வழிபாடி யற்றும் தெய்வபத்தி மிக்க வையத்து வாழ்வாங்கு வாழும் சிவநேயர்கட்கும் நால்வகையுண்டி அறுவகைச் சுவையுடன் அன்புடனளிக்கும் சோற்றுக் கொடையாளர் விரும்பின் வான வர்கோன் நிலையினையடைவர். பொரு வரும் திருவிழாச் செய்துவப்போர் படைப்போனாகிய நான்முகன் உலகினை யடைவர். திருக்கோயில் திருப்பணி செய்விப்போர் திருமால் உலகினையடைவர்.

இத்திருவூரில் ஒருவர் தம் முன்னோர்களில் இறந்து போனவர்களுள் யாரை நோக்கி நன் முயற்சியுடன் "மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை, ஆழாமே – யருள் அரசே போற்றி" என்னும் திருவாசகத்தனித் தமிழ்மந்திரம்மொழிந்து எள்ளுந்தண்ணீரும் இறைப்பார்களாயின் அப்பிதிரர்கள் சிவ உலகத்தினை அடைவர். இறந்து போய முன்னோர்களைப் பிதிரர்களென்பர்.

எல்லாத் திருவூர்களையும் வழிபட்டுத் திருவொற்றியூரை மட்டும் வழிபாடு செய்யாது விட்டுவிட்டால் அவர்கள் வீடு பேற்றினை அடையமாட்டார். இது காலாண்டு, அரை யாண்டுத்தேர்வுகளில் தேறியும் முழு ஆண்டுத் தேர்வு எழுதா விட்டால் தேர்வுப்பயன் இல்லாதது போன்றாகும். எல்லாத் திருவூர்களையும் கண்டு கும்பிடாது திருவொற்றியூரை மட்டும் கண்டு கும்பிடும் பேறுபெற்றவர்கள் வீடு பேற்றை அடைவர். இது காலாண்டு அரையாண்டுத்தேர்வுகள் எழுதும் வாய்ப்புப் பெறாமல் முழு ஆண்டுத் தேர்வு மட்டும் எழுத வாய்ப்புப் பெற்று வெற்றி பெற்றார் தன்மையோடொக்கும். அறிந்தோ அறியாமலோ திருவொற்றியூரின் மேம்பட்ட திருவூர் ஒன்று உண்டென்று யாராவது நினைத்தால் அவர்கள் இன்னாவுலகம் புகுவர்.

திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும்பெருவள்ளலாகிய தியாகராசப் பெருமானின் திருக்கூத்தினைத் திருவருள் துணை யால் கண்டு கும்பிட்டோர் வேறு திருவூர்க்குச் செல்ல மனங் கொள்ளார். இது தூய ஆவின் நெய்யினை யுண்டவர் வேறு நெய்யினை யுண்ண விரும்பாமையோடொக்கும். திருவூ ரெனினும் திவ்வியத்தல மெனினும் ஒன்றே. தலத்தைச் சேத்திரம் எனவுங் கூறுப.

திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் உலகன்னையா ராகிய வடிவுடை நாயகியாரைக் காணும் பேறுபெற்ற கண் களே பயன் பெற்ற கண்கள். மற்றையவர்கள் கண்கள் பிற பொருள்களைக் காணினும் புண்களேயாம். திருவள்ளுவ நாய ரும் கல்லாதார் கண்களைப் பொல்லாத புண்களென்று புகன்றருளினர். அது வருமாறு.

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். "—திருக்குறள்.

வானவர் கோனாகிய இந்திரன் தேவ உலகத்தை யடைந் ததும், நான்முகனாகிய பிரமன் சத்திய உலகத்தை யடைந்ததும் மாயோனாகிய விட்டுணு வைகுந்தத்தை அடைந்ததும் திரு வொற்றியூரைக் கண்டு கும்பிட்ட பெரும் பாக்கியமேயாகும். இத்திருவூரிலுள்ள கற்களெல்லாம் சிவலிங்கமே. மரங்க ளெல்லாம் மாண்புமிகு கற்பகதருக்களே. நீரெல்லாம்தூய கங் கையே. இத்திருவூரில் வாழ்ந்து உண்ணும் உணவெல்லாம் தூய தேவர் அமிழ்தமே. இவ்வூரில் உலாவி வருதல் உலகை வலம் வருதலாகும்.

இவ்வூரிற் சொல்லும் சொற்களெல்லாம் மறைமொழிகளா கிய வேதங்களே. இவ்வூரில் உறங்கும் உறக்கமெல்லாம் திரு வருள்வலத்தால் ஒரு மனப்பட்டுச் சிவபெருமானுடன் ஒன்றி உடனாக நிற்கும் மாறா நிட்டையேயாம். இங்ஙனமெல்லாம் இவ்வூர் சிவமயமாகக் காணப்படுதலின் இத்திருவூரே சிவ உலகமாகும்.

நான்மறை உணர்ந்தோராயினும், ஐவகை வேள்வி ஆற்றினோராயினும், எண்வகையோகம் இயைந்தோராயி னும், தவமும் தானமும் சால்புறப் புரிந்தோராயினும் திரு

வொற்றியூரைக் கண்டு கும்பிடும் பேறிலாதவர் வீடுபே றெய்தமாட்டார். இது பெருவேந்தற் கீழ் வேலைபார்க்கும் அமைச்சர் முதலாக அகம்படிக்குற்றேவலர் ஈருக அவரவர் பெறும் மாசப்படியேயன்றிப் பிறிதின்மையோ டொக்கும். திருவொற்றியூரைக் காணும்பேறு பெற்ருர் பெறுவது தீந் தமிழ்ச் செல்வப் புலவராய், பொய்யா நாவின் மேலோராய் வையம் உய்ய வாழும் மதிநலச் சான்ருேர் அவ்வேந்தரையும் ஆந்துணையும் நல்வழிப்படுத்தும் அறிவும் அறமும் செறிந்த பாப்புனைந்து பொன்னும் பொருளும் பெறுவதுடன் பொன் ருப்புகழும் பொருவில் மதிப்பும் பெறுவரன்ருே? அந்நிலையோ டொக்கும்.

தேவ உலகத்தில் வாழும் தேவர்களும் இத்திருவொற்றி யூரில் புழுவாகவேனும் பிறப்பது நலமென்று பேரவாக் கொள்கின்றனர். காரணம், இங்குவாழ்வார் ஒருயிரையுங் கொல் லாதவராய், கொலையால் வரும் பெரும் பாவத்துக்குக் காரண மாயுள்ள ஊன் தின்ருதவராய்ச் சிவனை மறவாச் சிந்தையராய் தவவொழுக்கமிக்க மேலோராய்ச் சார்ந்தாரைக்காக்கும் தலைவ ராய் இருக்கின்றனர். அதனுல் புழுவுக்கும் ஒரு தீங்கும் நேரிடா தென்பதேயாம். மேலும் சிவமுழக்கமும் சிவனடியார் காட்சி யும் எங்கும் நிறைந்திருப்பதால் குறைவிலா நிறைவே கிட்டும் என்பதுமாகும்.

ஒரு கொடியின் வேரில் நீர் வார்த்தால் அந்நீரால் அக் கொடியும், அதன் இலைகளும், பூக்களும் தண்ணென்னு குளிர்ச்சியை நண்ணும். அது போல் திருவொற்றியூரில் குற்ற மில்லாமல் சிவபூசைமுதலான தெய்வ வழிபாடுகள் முட்டின்றி நடக்குமாளுல் காசி முதலிய எல்லாத் திருவூர்களிலும் பூசை நடந்ததாகும். இத்திருவொற்றியூரில் பூசை நடவாவிட்டால் மற்றைய திருவூர்களில் பூசை நடந்தாலென்ன? நடவாவிட்டா லென்ன ? பயன் ஏதும் இல்லை.

திருவொற்றியூரைக் கண்டு வழிபடாதவர் உலகோர் உரைக்கும் உயர்ந்த குலத்தாரேயாயினும், தாழ்ந்த குலத்தாரே யாவர், குணத்தாலும் பொல்லாரேயாவர். அவர்கள் உயிரோடி ருந்தாலும் பிறவிப்பயன் எய்தாமையின் இறந்தாரேயாவர்.

இங்கு வீற்றிருந்தருளும் உலகெலாம் பெறுதுபெற்றெடுத்த பெருந்தாயாராகிய வடிவுடை நாயகியாரைக் கண் குளிரக்கண்டு மனமாரநினைந்து, வாயாரவாழ்த்தி, தலையார வணங்கிப் பொருள்சேர்புகழ்மறை நிறைந்த திருமுறை மந்திர மொழிந்து, போற்றித் தொடர்புகன்று பூத்தூவி எவர் வழிபடுகின்றனரோ? அவர்கள் தூயவராவர். அவர் தம் உள்ளத்து எண்ணிய எண்ணமெல்லாம் இம்மியும் வழுவாது உள்ளங்கை நெல்லிக்கனியென உடனே கைகூடும். இதற்கு ஐயம் ஏதுமில்லை; முக்காலும் ஆணை.

திருவொற்றியூரின் திருவருட்பெருமையனைத்தையும்பெரு நிலந்தாங்கும் ஆயிரம் படங்களையுடைய ஆதிசேடன் என்னும் பாப்பரசாலும் பல்லூழி சென்றாலும் பகரமுடியாதாகும். அவ்வாறிருக்க அடியேனின் சிறுபுன்நா வொன்றினால் எப்படிச் செப்பமுடியும். ஆயினும் எனது சிற்றறிவுக்குத் தெரிந்த வரையில் ஒரு சிறிது உங்கட்கு இன்று சொல்லப் போகின்றேன், நீங்கள் யாவரும் மனவொருமையுடன் சிவனினைவுடன் இருந்து மிகுந்த பத்தியுடன் கேட்பீராக.

என் ஆசிரியர் வியாச முனிவர் முற்காலத்தில் எனக்குச் சொல்லியவண்ணம் உங்கட்குச்சொல்லத்தொடங்குகின்றேன்; என்று சொல்லித் திருநீற்றுப் பையினின்றும் திருநீற்றையெடுத்துச் 'சிவசிவ' என்னும் செந்தமிழ் மந்திரமொழிந்து நெற்றியிலணிந்து வடிவம்மையையும், படம்பக்க நாதரையும் நன்கு அழுத்தமாய் நினைந்துகொண்டு சொல்லத் தொடங்கினார்.

நைமிச வனச்சருக்கம் முற்றும்

அருவுருவத் திருவுருத் தோற்றச்சருக்கம்

[இலிங்கோற்பத்திச்சருக்கம்]

"காலாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீளாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாளாது நேடியாமால் நான்முகனுங் காண நடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய."

—கஉ, சாக்கியநாயனார்,

சிவமெய்யுணர்ந்த நற்றவத்தர்களே! இந்த வராககற்பத்தின் முன்னர்ச் சென்றது பதுமகற்பம். வராககற்பம்—பன்றியூழி. பதுமகற்பம்—தாமரையூழி. அப்பதுமகற்பத்தில் இவ்வுலக முழுவதும் பெருவெள்ளத்தால் மூழ்கிற்று மீண்டும் பழையபடியே இவ்வுலகத்தை உண்டாக்குவதற்குப் படைப் போனுகிய பிரமனைப் படைக்க வேண்டும். அதன் பொருட்டு அளவிடப்படாத சிறப்பும் உண்மை அறிவு இன்பப் பிழம்பும் ஆகிய பரமசிவக் கடவுளை ஒருமை யுள்ளத்தில் ஓவாது உள்கிக் கொண்டும் மறைமூலமந்திரமாகிய திருவைந் தெழுத்தினை நாவினில் நன்கனம் நவின்று கொண்டும் திருப்பாற் கடலில் அரவணை மீது அரி அறிதுயிலமர்ந்தனன்.

கண்ணுதற் பெருமானின் பெருந் தண்ணளியாகிய கருணையினுல் அந்த அரியின் உந்தியிலிருந்து ஒரு தாமரை தோன்றிற்று. அத்தாமரையினின்றும் நான்முகன் தோன்றினன். அந்நான்முகனுகிய பிரமன் உலகத்தைப் படைக்க கருதி மூலாதாரத்தில் கீழ் நோக்கிய முகமாகக் கண்களை முகிழ்த்துப் பெரிய குண்டலி சத்தியாகிய வட்டமிட்டுக் கொண்டிருக்கும் பாம்பினை, அடக்குதலாகிய கும்பித்தலைச்செய்யும் உயிர் மூச்சாசாகிய பிராண வாயுவால் தீமண்டலத்தினை மூட்டி எழுப்பி மூலாதார முதல் நெற்றிப்புருவ மாகிய ஆணை யெனப்படும் ஆக்கினை யீருகவுள்ள ஆறு ஆதாரங்களிலுமுள்ள தெய்வங்களைக் கண்டு திங்கள் மண்டலத்தினின்றும் ஒழுகும் அமிழ்த வெள்ளத்தை உள்ளே நிரப்பி வாயால் நிறைய மடுத்து, அங்குத் தோன்றும் விளக்கொளியும், மின்னலும் தீப்பந்தமும் கதிரும், மதியும் போன்ற ஒளியினைக் கண்டு இவை யெல்லாவற்றையுங் கடந்த அழிவில்லாத சிவ அருட் பேரொளியைக் கண்டுகண் குளிர அகங்குளிரக்கண்டு கும்பிட்டுமாற்றம் மனங் கழிய நின்ற விழுமிய முழுமுதற் கடவுளை உள்குதலாகிய தியானத்தைப் புரிந்த மாத்திரத்தில் மானும், மழுவும் நான்கு திருத் தோள்களும், திருநீல கண்டமும், முக்கண்ணும் உடையவராய் உலகன்னையாகிய வடிவுடைய நாயகியை இடப் பக்கத்தே பொருந்த வைத்து விடையின்மேல் வீற்றிருந்து கொண்டு சிவகணங்கள் புடைசூழ அனைத்துடைமையும் தன்னதாகக் கொண்டுள்ள சிவபெருமான் திருக்காட்சி கொடுத்தருளினன்.

திருக்காடசியினைக் கண்ட நான்முகன் எழுந்து பலமுறை கீழ்விழுந்து வணங்கிப் பேரருட்கடலே! சலமகள் தங்கும் திருச்சடையாய்! கறைமிடற்றோய்! காமனைவென்றோய், கால காலா, கைலைவாழ்கடவுளே, திருவருள் புரிவாயாக. அடியேனுக்கு நின்திருவடியல்லால் வேறு புகலில்லை, என்று போற்றிப் புகழ்ந்து, கண்கள் இரண்டிலு நின்று நீர்இடையறுது சொரிய நின்று ஐயனே! அடியேனை ஆதரிக்க வந்த அருட்பெருங்கடலே நான் மானிடனுயும், தேவனுயும், நாகனுயும், பறவையாயும், விலங்காகியும் மற்று முண்டான பல பிறப்புக்களாகியும் பிறந்து பிரமனுக அடுத்தடுத்துத் திருமாலின் உந்தித்தாமரையிற்றோன்றி இறக்கின்றேன்.

இனிப் பிறந்தும் இறந்தும் இளைக்கமுடியாது. இப்பிறப்பினை யொழித்துத் துன்பத்தைத் தீர்த்து அடிமை கொண்டருள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டனன். சிவபெருமான் நான்முகனை நோக்கி, அன்பனே பிறந்தநாள் தொடங்கி எல்லையில்லாதகாலம் அளவில்லாத துன்பத்தினை அடைந்தாய். இனிமேல் நலத்தைப் பொருந்தி முதன்மையாக வாழ்வாய், அஞ்சாதே என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர்.

சிவபெருமான் மறைந்தருளலும், பிரமன் அளவிறந்த துன்பமடைந்தனன். பேரருள் வள்ளலாகிய சிவபெருமானை மீண்டுங் கண்டு கும்பிட வேண்டுமென எண்ணி ஐம்புலன்களையும் அடக்கி உயிர் மூச்சினை வலப்பால் நாடியாம் பிங்கலை வழியாக அடக்கி நடுநாடியாகிய சுழுமுனையின்கண் பொருத்தமுற நிறுத்தி ஆருதாரப் படிகளையும் கடந்து மேலாம் சிவபரஞ்சுடருடன் தன் ஆவியினைக் கூட்டித்தன் உடம்பை மூலத்தீயாலே கழித்தனன்.

நான்முகன் இவ்வகையாகச் செய்த சிவயோக வலிமையால் அவருடைய மூலத்தீயானது இதுவே உலக முடிவென்று சொல்லும்படி உலக முழுவதையும் உண்டது. அப்பொழுது சிவபெருமானின் திருவருளிப்பாட்டினுல் அவ்வூழித்தீமுடிவில் சிறு வெள்ளமாகத்திரண்டு தங்கியது. தங்கியவுடனே அம் மூலத்தீயினுல் ஆகிய வெள்ளத் திரட்சியின் மத்தியில் சதுர வடிவமாகிய சித்திரப் பலகையொன்று உண்டாயிற்று. அந்த ஓவியப் பலகை சிவலிங்கவண்ணமாய் அமைந்துள்ளது.

இச்சிவலிங்கத்தின் வடகீழ் (ஈசான) திசையில் அவ்வெள்ளத் திரட்சி ஒரு சிறந்த தீர்த்தமாயிற்று. இதில் சிவபெருமான்மாட்டு மெய்ப்பத்தியுடையராய், உள்ளும்புறம்புந் தூயராய்த் திருவைந்தெழுத்தை யோதித்தீர்த்தமாடுவார்க்கு அஃது இம்மை இன்பங்களையும் நல்வாழ்வையுந்தந்து முடிவில் வீடு பேற்றையுந்தரவல்லஒரு தெய்வத் தடாகமாய்த் திகழ்கிறது.

அச்சிவலிங்கமோ, பொன்னுமன்று, வெள்ளியுமன்று நவமணியுமன்று, மந்திரவடிவமுமன்று, ஞாயிறுமன்று, திங்களுமன்று, விண்மீன் (நட்சத்திரம்)களுமன்று, மின்னலுமன்று, திசைகளுமன்று, வானமுமன்று, நிலமுமன்று, கல்லுமன்று, ஆகையால், அஃது இன்னவடிவுடையதென்று மனத்தால் நினைத்து, வாயால் மொழிந்து அளவிடக் கூடியதன்று. அத்தகைய வியக்கத்தக்க வடிவமான இயற்கைத்தான் தோன்றியான (சுயம்பு) பலகை வடிவான சிவலிங்கத்தினின்றும் அளவில்லாத மங்களக்குணமும், எங்கும் நீக்கமற நிறைந்துள்ள வியாபகத்தன்மையும் உடைய சிவபெருமான் வெளிவந்தருளினன்.

வெளிவந்து அம்மூலத்தீயைக் குளிரும்படி திருவுள்ளங் கொண்டருளினன். உடனே அத்தீயும் நன்றுகக் குளிர்ந்தது. குளிர்ந்து ஒரு யோசனை (நூறு கல் தொலைவு.) தொலைவுமேலோங்கியும் எங்கணும் நெருங்கிய நானூற்றுத் தொண்ணூற்ருறடியளவு தன்னைச் சூழ்ந்திருக்கும்படியும் அமைந்தது. மேலும் அம்மூலத்தீ குளிர்ந்து ஒருவர்க்கும்புலப்படாமல் ஒரு தீக் (வன்னியங்) கோயிலாக விளங்கியது பேரருட்பிழம்பாகிய சிவபெருமான் அவ்வன்னியங்கோயிலில் அருவத்திருமேனியாய்த் தீண்டாத் திருவுருவாய் எழுந்தருளியிருந்தனர்.

இப்பெருமானை என்றும் விட்டுப்பிரியாத தாதான்மியசத்தியாகிய அம்மை வடிவுடை நாயகி என்னும் அருமைத்திருப்பெயருடன் அப்பெருமானின் இடது திருப்பக்கத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளினர். உலக மனைத்தையும் பரந்த பெருவெள்ளத்தைச் சிவபெருமான்? ஒற்றும்படி செய்தருளினமையால் ஒற்றியூரென்னும் திருப்பெயர் வழங்குவதாயிற்று.

பின்பு பலகைவடிவாகச் சிவலிங்கம் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் படம்பக்கநாதர் எனப் பெயர்பூண்டனன். அப்படம்பக்கநாதரை பிரமதேவன் விடாநினைவுடன் தியானஞ் செய்து நிட்டைகூடினன். அதனையுணர்ந்த சிவபெருமான் அப்பிரமனுக்குப் படைக்குந்தொழிலை வழி நிலைப்பயனாக அளித் தருளினன். மேலும் முடிவில் தன் திருவடியில் தாடலைபோல் இரண்டறக் கூடுவதாகிய சாயுச்சிய நிலையினையும் கொடுத் தருளினன்.

இத்திருவூர்க்கு பல காரணத்திருப்பெயர்கள் அமைந்துள் ளன. அவை வருமாறு:

சிவகணங்கள் முழுவதும் இத்திருவொற்றியூரில் காவலா கச் சூழ்ந்திருக்கும்படி சிவபெருமான் திருவாணையிட்டரு ளினன். அச்சிவகணங்களும் அங்ஙனமே என்றும் நீங்காக் காவல் புரிந்து வருகின்றன. அதனால் இத்திருவூர் பூலோக சிவலோகம் எனப்படும். ஆதிகாலத்தில் வெள்ளப்பெருக்கி டையே இத்திருவூர் தோன்றினமையால் ஆதிபுரியென வழங் கப்படுகின்றது. அன்றியும் சிவபுரி தாமரை நகர் (பத்மபுரி) மேலாம் நகர் (அவசபுரி) பிரமபுரி, அழியாநகர் (நிரந்தபுரி) என அழைக்கப்படுகின்றன

அன்றியும் இத்திருவொற்றியூரின்கண் வன்னியந்திருக் கோவிலில் வடிவாம்பிகை உடனாய்ப் படம்பக்க நாதர் அரு மறை முடிவின் அகப் பொருளாய் வீற்றிருந்தருளுகின்றனர். மேலும் மறையனைத்தும் மறைத்திட்டுரைக்கும் மாமணியாய் விளங்குகின்றனர். முனிவர் போற்றும் மூவா முதல்வனாய்த் திகழ்கின்றனர். மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் கிடைத் தற்கரிய வீடுபேற்றினை இத்திருவூரினின்று எளிதாகவும் இனிதாகவும் அளித்தருளும் முக்கட்பரமனாய் முன்னிற்கின் றனன். புண்ணிய வடிவப் பொருளாய் நின்றருளுந்தனித்தலை மை ஆண்டா (புருடோத்தம)னாய் கருமமலங்கழிக்குங் கற்பகக் கொழுந்தாய்க் காட்சி கொடுத்தருளுகின்றனன். சிவஞான போதமளித்தருளும் செம்பொருளாய் வீற்றிருந்தருளு கின்றனன்.

அங்ஙனம் வீற்றிருந்தருளிச் சிவனடியார்கள் உய்யும் பொருட்டு நாள் நாளும் நன்மைத் திருவருள் சுரக்கின்றனன்.

ஐந்தொழில் ஆடல் மைந்துடன் புரிகின்றனன். இவற்றிற் கெல்லாம் அரும்பதியாகத்திகழ்வது இத்திருவொற்றியூர். இத்திருவூரை உள்ளம் உருகிக்கள்ளம் ஒழிந்து 'சிவசிவ' என்னும் செந்தமிழ்த் திருமாமறையன்றி வேறொன்றும் எண்ணாது அடிமேல் அடி வைத்து விரைவின்றிப் பைய வலம் வருவோர் இப்பெரிய பூ மண்டலத்தையே வலஞ்சூழ்ந்து வருவோர் பெறும் பயனனைத்தும் பெறுவர். இஃது உண்மையினும் உண்மை. இத்திருக் கோவிலினை மேலோதியவாறு வலம் வருவோர் அடியெடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் நூறு யோகப் பெருவேள்வியினைப்புரிந்த பெரும் பயனடைவர். பிரதோச காலத்தில் சோம சூத்திரமாக வலஞ் செய்பவர் இல்லறநெறியின் கண்ணே இம்மையிற் பெறற் பாலனவாகிய எல்லா இன்பங்களையும் இனிதுறப்பெற்று மறுமையில் சிவஞானத் திருச்சுடராய்த் திகழ்வர். மேலும் அவருடைய சீர்த்தி என்றும் பொன்றாது நின்று நிலவும். சிவபெருமானின் திருவருள் கிடைக்கப்பெற்று அவனுக்கு மீளா ஆளாய் அவன் திருவடி நீழலில் இரண்டறப் பின்னிப்புணர்ந்து பேராயியற்கைப் பேரின்ப முறுவர். இத் திருக்கோவிலின் கண் திருவிளக்கிடுவோர் திருவிளக்கு ஒன்றுக்கு ஓராயிரம் ஆண்டு திருக்கயிலாத்தில் வாழும்பேறுபெற்று இன்புறுவர். "திருவொற்றியூர் திருவொற்றியூர்" என்று இடையறாது ஓதிக்கொண்டிருப்பதே அரியமானுடப்பிறப்பின் பெரிய பயனாய், ஒன்றாலும் போக்க வொண்ணாத பிறவிப்பிணியினை போக்கவல்ல திருவருள் மருந்தாய் அமைவதாகும்.

அருவுருவத் திருத்தோற்றச் சருக்கம் முற்றிற்று

தியாகராசர் திருநடனச் சருக்கம்

சிவனடியின்பம் இடையறாது பெறும் தவமுடைச் செல்வர்களே ! திருவெள்ளி மலையாகிய மாகைலாசத்திலே ஒருநாள் தேவாதிதேவனாகிய சிவபெருமான் அனைத்துலகத்திற்கும் ஒரு பெரும் நாயகியாகிய அம்மையுடன் திருவோலக்கங் கொண்டெழுந்தருளியிருந்தனர். அப்பொழுது சிவபெருமானின் அருள் துணைபெற்ற நந்தியம்பெருமான் பரமேசுரனின் திருமுன் சென்று எட்டுறுப்பும் நிலத்தே படும்படி வீழ்ந்து கும்பிட்டெழுந்து நின்றனர். நின்று கைகளிரண்டையும் உச்சியின்

மேல் ஏறக்குவித்துப் பல செந்தமிழ்ப் பாசுரங்களைப் பண்ணொடுபாடிப் பணிந்து வணங்கி வாய்மொழிகின்றனர். ஐயனே! இன்பமென்னும் அமுதம் நிறைந்த பேரறிவே! அருட்பெருங்கடலே, மறைமுடிவில் விளங்கும் இயற்கை மாசிலா மணியே! முக்குணங்கடந்த எண்குணம் அமைந்த எழில் முதல்வனே! ஒப்புயர்வற்ற ஒருவனே! அடைக்கலம்; அடைக்கலம் எனத்தொழுது வருமாறு விண்ணப்பஞ் செய்தனர்.

அனைத்துயிர்க்கும் அகலா அருள் நிறை அப்பனே! அடியேன் கூறும் குறைபாட்டினிற்கு அடிகள் திருச்செவி சாத்தியருளுதல் வேண்டும். இம்மாப்பெருந்திருக்கயிலாயத்தின் கண் பிரதோச காலத்தில் அடிகளார் செய்தருளிய முடிவிலாச் சிவஞானத் திருத்தாண்டவத்தினைத் திருவருட்டுணையால் அடியேன் கண்டு கும்பிட்டுக் கழிபேருவகை எய்தியுள்ளேன். இது போல் மாதவம் செய்துள்ள தென்றமிழ் நாட்டில் திகழும் ஐவகை மன்றங்களிலும் ஆடியருளும் ஐந்தொழில் அருட்பெருந்திருக்கூத்தினையும், கண்டுகளித்துள்ளேன். ஐவகை மன்றங்களாவன : 1, மணி மன்றம் 2, பொன் மன்றம் 3, வெள்ளி மன்றம் 4, செம்பு மன்றம் 5, ஓவிய மன்றம் என்பன. இவ்வைந்தினுள் மணிமன்றம் திருவாலங் காட்டில் காணப்படும். பொன்மன்றம் திருத்தில்லையில் காணப்படும். வெள்ளி மன்றம் திருக்கூடலாகிய மதுரையின்கண் காணப்படும். செப்பு மன்றம் திருநெல்வேலியில் காணப்படும். ஓவிய மன்றம் திருக்குற்றாலத்தில் காணப்படும்.

மணிமன்றம் தொண்டை நாட்டிலும், பொன் மன்றம் சோழ நாட்டிலும், வெள்ளி செம்பு, ஓவியம் ஆகிய மூன்று மன்றங்களும் பாண்டிய நாட்டிலும் காணப்படும். ஐந்தொழில் அருட்பெருந்திருக் கூத்தினுள் மணி மன்றத்தில் அருளலையும் பொன் மன்றத்தில் படைப்பினையும் வெள்ளி மன்றத்தில் காப்பினையும், செப்பு மன்றத்தில் துடைப்பினையும், ஓவிய மன்றத்தில் மறைப்பினையும் சிறப்பு நிலைக் களனாகக் கொண்டு புரிந்தருள்கின்றனன். இவ்வைவகை மன்றங்களையும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்து முறையான்நோக்கின் "சிவயசிவ" என்னும் மந்திரமாகும். இம்மன்றங்கள் ஐந்தனுள் திருவாலங் காட்டில் மேல் நோக்கிய திருக்கூத்தும், மதுரையின் கண் கால்மாறியாடிய திருக்கூத்துங் காணலாம். இவையெல்லாம் நின்ற திருக்கூத்துக்களாகும்.

ஆனால் இருந்தியற்றியருளும் திருக்கூத்தொன்றினைக் கண்டு கும்பிட்டுக் களிக்கும் பேரார்வமுடையேன். அதற்குத் தேவரீர் திருவுளங் கொண்டருளவேண்டுமென விண்ணப்பித்தனர். பெருந்தண்ணளி குடிகொண்டிருக்கும் பெருமான் திருநந்தி தேவரை நோக்கி அன்பனே! நீ விரும்பியபடியே செய்தருள்வோம், அந்த திருநடனம் உனக்கேயன்றி நிலவுலகத்திலுள்ள நம் மெய்யடியார்கள் அனைவர்கட்கும் பயன் பெறுமாறு வடபெருங்கல்லாகிய பனிமலையின் தெற்கே பாலாறு பாயும் மேலாம் நிலத்தே கிழக்குக் கடற்கரை மருங்கே நமக்கு மிக்க அன்புடையதும், நாம் இயற்கையாகத் திருஉருக் கொண்டு எழுந்தருளியிருப்பதும், கண்டு கும்பிட்டவர்கட்கு உள்ளங்கை நெல்லிக்கனி யென்ன வீடு பேற்றினைக் கொடுப்பதும் நம்மாட்டுக் காதலுடைய அடியவர்கள் என்ன வேண்டினும் அவைகள் அனைத்தையும் வேண்டியாங்குத் தடையறப் பயந்தருள்வதுமாகிய சிறந்த திருவூர் ஒன்றுள்ளது. அதன் திருப்பெயர் திருவொற்றியூர் என்பதாகும் (ஒற்றியூர் என்னும் பெயருண்மையை நோக்கின் சிவபெருமான் உடல் உறுப்பு, உலகம், உண்பொருள்களாகிய மாயா காரியங்களைத் தனக்கு உடைமையாகக் கொண்டுள்ளனன். எல்லாவுயிர்களும் அவனுக்கு நீங்கா அடிமைகள் அவ்வுயிர்கள் உய்தற்பொருட்டு அவன் தன் உடைமைகளை அவைகட்கு நல்கும் பொழுது அவற்றின் உரிமைகளைத் தனக்கே வைத்துக் கொண்டு இரவலாகக் கொடுத்தருள்கின்றனன். ஒரு பொருளின் உரிமையைக் கொடுக்காது. பொருளை மட்டும் கொடுப்பது ஒற்றியெனப்படும்- இம்முறையான் வந்த திருப்பெயராகும்.

எல்லாம் இறையுடைமை எவ்வுயிரும் அவனடிமை
பல்லாற்றான் வாழ்ந்து பயன்பெறவே— நல்லாற்றான்
நாடின் உடைமைகளை நம்பால் இரவலாய்க்
கூடியிடச் செய்யவதொற்றி கூறு

அத்திருவூருக்குச் சென்று வேண்டிய வேண்டியாங்கு எய்தக் கூடிய நற்றவத்தை நீ செய்து கொண்டிரு. அப்படிக் கிருந்தால் நாம் அவ்விடத்தில் நீவிரும்பியவாறு இருந்துசெய் நடனக் காட்சியினை உனக்குத் தந்தருளுகின்றனம் என்று திருவாய் மலர்ந்தருளினர். அதுகேட்ட நந்தியம் பெருமான் பேரின்பப் பேருவகைப் பெருமகிழ்வு கொண்டு சிவ

பெருமானிடத்தில் விடை. பெற்றுத் திருவருளால் திருக்கைலையினின்றும் நீங்கி அந்தண வடிவங்கொண்டு வந்து திருவொற்றியூரை அடைந்தனர். (மன்பதைக்குள் அன்பறிவு ஆற்றல் களாகிய மூன்றும் ஒத்து நிகழச் செயல் புரிவோர் வேளாளராவர். அன்பாகிய இச்சைமிக்கோங்கச் செயல்புரிவோர் வணிகராவர். அறிவுமிக்கோங்க அருந்தவம் புரிவோர் அந்தணராவர். ஆற்றலாகிய கிரியைமிக்கோங்க ஆள்வோர் வேந்தராவர். அம்முறையில் நந்தியம் பெருமானும் அந்தண வடிவங் கொண்டனன்.

அன்பறிவோ டாற்றல் தனித்தனியே மிக்கோங்கின்
இன்வணிகர் அந்தணரே வேந்தரென்ப —துன்பகற்றும்
மூன்றும் முறையொத்து முன்னிகழின் வேளாளர்
ஆன்றதாய் தந்தைஐயன் ஆங்கு

அடைந்து படம்பக்கநாதர் திருக் கோவிலின் வடகீழ்த் திசையில் தன் பெயரால் ஒரு தீர்த்த முண்டாக்கி அதன் அண்மையில் சிவயோகத் திலமர்ந்திருந்தனர். சிவயோகம்–சிவனினைவு.

நந்தியம் பெருமான் திருவொற்றியூரின்கண் இடையறாச் சிவனினைவாஞ் சிவயோகத்திலிருக்கும் இதே நேரத்தில் திருப்பாற் கடலின்கண் அரவணைமீது அறிதுயில்கொள் அரியாகிய திருமால் தன் நெஞ்சினிடத்து இடையறு நினைவால் யேலோங்கிக் குடிகொண்டிருக்கும் "அம்மையப்ப பிள்ளையாகிய சோமாக்கந்தர்" இருந்தியற்றுந் திருக் கூத்தினைக்கண் குளிரக்கண்டு களித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அத்திருவுருவக் காட்சி தீடீரென மறைந்தது. திருமால் மிகவுந்துன் புற்றனர். ஒன்றுந் தோன்றுதவராய் மயங்கினர். மெய்யெல்லாம் வியர்வையுற்றது. பதைபதைத்து நடுங்கினர். பெருமூச்சுவிட்டு அழுது மனந்தளர்ந்தனர். சோர்ந்து பொறுக்க முடியாத பெருங் கலக்க மாயினர். அவர் கண்களிரண்டிலும் நின்று விடாது ஒழுகிய கண்ணீர் அருவி நீர் போற் பெருகிற்று. சொற்கள குழற உதடுகளிரண்டுந் துடித்தன.

எம் பெருமானே! அடியேனுடைய நெஞ்சத் தாமரையில் இது காறும் நின் திருக்கூத்துக் காட்சியினைக் கண்டு வழிபடும் பேற்றினை அருளிக் கொண்டிருந்தாய். அங்ஙனம் இருந்

தருளிய நீ யாது காரணம் பற்றி மறைந்தருளினை. அடியேன் அறிந்தும் அறியாமலும் செய்துள்ள குற்றம் யாது? அப்படி ஏதேனும் இருந்தாலும் அடிகள் மன்னித்தருளுதல் வேண்டும். அடிகளின் திருவடிக்காட்சி காணுது எங்ஙனம் உய்வேன்? மீண்டும் எப்பொழுது அடியேன் நெஞ்சினுள் எழுந்தருள் வீர்? வல்விரைவில் திருவருள் புரிதல் வேண்டுமெனப் பலவகை யாகப் பரவி வாழ்த்திப் புகழ்ந்து பணிந்து விண்ணப்பித்துக் கொண்டனன்.

அப்பொழுது சிவபெருமான் விண்ணப்பித்துக் கொண்ட திருமாலை நோக்கி மெய்யன்பனே! நீ ஊரினுள் ளெல்லாம் சிறந்ததாக அனைவராலும் கருதிப் போற்றப்படும் திரு வொற்றியூரினுக்கு மாசி மாதத்து மக நன்னளில் வருவாயா னல் நமது இருந்தியக்கும் திருக் கூத்தினைக் கண்டு கும்பிட்டுக் களிக்கலாம். அதுவரையில் அத்திருவொற்றியூருக்குச் சென்று நன்னெறி நான்மை நற்றவஞ் செய்து கொண்டிருக் கக் கடவை என வானெலியாக அருளிச் செய்தனர். நன்னெறி —சைவச் செந்நெறி. நான்மை — சீலம், நோன்பு செறிவு, அறிவு என நான்கு. இந் நான்கினையும் முறையே சரியை, கிரியை, யோகம் ஞானம் எனவும் புகல்வர். அது கேட்ட திரு மாலானவர் நனிமிக இன்புற்றனர். ஆனந்தக் கூத்தாடினர். பாடினர்; ஆடினர்; மயிர்க் கூச்செறியப் பெற்றனர். சிவ பெருமான் அருளிப்பாட்டை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர்.

திருமால் அவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கையில் அருகி லிருந்த திருமக (இலட்சுமி)ளானவள் தன்னுயிர்க் கணவனை நோக்கிநாதனே! நீர் சிறிது நேரத்திற்கு முன் மிகுந்த கவலையு டனிருந்தீர். இப்பொழுது அக்கவலை முற்றும் நீங்கிப் பேரின்ப முற்று ஆடிப்பாடிக் களிப்பதற்குக் காரணம் என்ன என விண் ணப்பித்துக் கொண்டனள். இதனைக்கேட்ட திருமாலானவர் மேலே சொல்லப்பட்ட செய்திகளை விளக்கமாக எடுத்து மொழிந்தனர். அதனை உணர்ந்த திருமகளானவள் தானும் கூடவே திருவொற்றியூருக்கு வர இணங்குதல் வேண்டுமென வேண்டிக் கொண்டனள்.

திருமாலும் அதற்கிணங்கித் தன்மனைவியாகிய மாலெட்சு மியுடன் திருவைந்தெழுத்தோதிப் புறப்பட்டுத் திருவொற்றி யூரைவந்தடைந்தனர். திருஎல்லையினை நிலத்தே விழுந்து

வணங்கினர். பின் உட்புகுந்துதிருவீதியினை வணங்கினர். திருக்கோபுரத்தையும் வணங்கினர். முதற்பெரும் வாயிலை யடைந்து முதற்பெருந்தேவராகிய நந்தியங்கடவுளைத்தொழுது கும்பிட்டனர். திருக்கோயில் கருவறையினை அண்மினர். அண்மி படம்பக்கநாதர் திருமுன்சென்று நிலத்தேஎட்டுறுப்பும் படும்படி வீழ்ந்தெழுந்து கும்பிட்டுத் திருமுறைத் திருமந்திரம் ஓதித்தொழுதனர்.

கீழ்த்திசையில் ஒரு தீர்த்தம் உண்டாக்கினர். உண்டாக்கி அதன்கண் நீராடினர். சிவதீக்கை முறைப்படிபதினாறு இடங்களில் திருவெண்ணீறணிந்தனர். சிவமணிபூண்டனர். திருவைந்தெழுத்தெண்ணிச் சிவஞ்செய்தனர், மறவா நினைவாம் தியானத்திலமர்ந்தனர். திருமகளானவள் திருமாலின் தீர்த்தத்தின் பக்கத்தே தென்கீழ் திசையில் ஒரு தீர்த்தம் உண்டாக்கினள். அதில் தீர்த்தமாடினள். சிவதீக்கைமுறைப்படி திருவெண்ணீறணிந்தனள். சிவமணியாகிய உருத்திராக்க மாலையினை அணிந்தனள். திருவைந் தெழுத்தினைக் கணித்துச் சிவஞ்செய்தனள். மறவாநினைவால் அகத்தவம் புரிந்து கொண்டிருந்தனள்.

இவ்விருவர் நிலையினையும் கேள்வியுற்ற நற்றவமிக்க உரோமச முனிவர் தானும் அத்திருக்கூத்தினைக் கண்டு கும்பிடப் பெருவிழைவுற்றனர். ஆதிபுரியென்று சிறப்பித்துச் சொல்லப்படும் திருவொற்றியூரையடைந்தனர். முன்மொழிந்த முறைப்படி தொழுதுதிருக்கோவிலுள் சென்று நந்தியம் பெருமானை வணஙகிப் படம்பக்கநாதர் திருமுன் சென்றனர். சென்று பலமுறை எட்டுறுப்பும் நிலத்தே படும்படி விழுந்தெழுந்து கும்பிட்டு வணங்கி மிகுந்த பேரன்போடு கூடிய அச்சத்துடன் ஒரு பக்கத்தில் தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

இஃதிவ்வாருக முன்தவஞ்செய்து கொண்டிருந்த நான்முகன் இறந்தனன். பின்வேருெருநான்முகன் பிறந்தனன். பிறந்து உலகனைத்தையும் உற்று நோககினான். நோக்கி இவ்வுலகினை என்னையன்றிஉண்டாக்கினவர்யார் ? யானல்லவா படைக்கு முதல்வன் ? இவ்வாறு நினைந்து மிகவும் செருக்குக் கொண்டனன். கொண்டு உலக முழுவதையும் சுற்றிப் பார்ப்போமெனக் கருதினன். கருதிப் பூமியில் இறங்கினன்

இறங்கி முதலில் இத் திருவொற்றியூரை யடைந்தனன். அடைந்து அங்குத் தவஞ்செய்து கொண்டிருக்கும் திருமாலைக் கண்டனன். கண்டு அவரை வணங்காது ஓ திருமாலே! இப் பேருலகத்தை என்னையன்றிப் படைத்தவன்யாவன்என்றனன்?

அப்பொழுது திருமாலானவர் நான்முகனின் இறுமாப்பி னைக் கண்டனர். கண்டு வந்த சினத்தை உள்ளடக்கிக்கொண்டு நான்முகனுகிய பிரமனே! நீ சொல்லுவது உண்மையேயாகும். ஆயினும் நம் அண்மையில் நற்றவம் புரிந்து கொண்டிருக்கும் உரோமசமுனிவரிடத்திற் சென்று அவர் கையில் ஓரிடத்தில் உரோமமாகிய மயிர் சிறிதும் இல்லாமலிருப்பதற்குக் காரணம் என்ன எனக் கேட்போம். பின்பு உன்னுடைய செய்தியைப் பற்றி எண்ணலாமென்றனர்.

அங்ஙனமே படைப்போனும் திருமாலும் உரோமசமுனி வரிடம் சென்றனர். ஓ முனிவர் தலைவரே! உமக்கு உடம்பு முழுவதும் மயிர் கெழுமியிருக்கவும், கையில்மட்டும் சிறிது மயிர் உதிர்ந்திருப்பதற்குக் காரணம் யாது என வினவினர்? அப்போது முனிவர் நான்முகனைப் பார்த்துச் சொல்வாரா யினர். ஐய! அனேக சூரியர்களும் சந்திரர்களும் தேவர்களும். இந்திரர்களும், இறந்துபட்டால் ஒருபிரமன் இறந்துபடுவான். பல பிரமர்கள் இறந்து பட்டால் ஒரு திருமால் இறப்பன். பல திருமால்கள் இறந்தால் என் உடம்பிலுள்ள மயிர்களில் ஒரு மயிர் உதிரும். இப்படி எத்துணையோ கோடாகோடி பேர் இறந்தொழிந்ததால் சில மயிர்கள் உதிர்ந்திருக்கின்றன. என்னைப் போன்ற பலர் இவ்வுலகிலுள்ளனர் என்றனர். மயிர் கெழு முனிவர் பலருளரென்னும் உண்மையினை வரும் செந் தமிழ்த்திருமாமறையானுணரலாம்.

'ஒழுகலரி தழிகலியில் உழியுலகு பழிபெருகு வழியை நினையா
முழுதுடலில் எழுமயிர்கள் தழுவுமுனி குழுவினொடு கெழுவு சிவனைத்
தொழுதுலகில் இழுகுமலம் அழியும் வகை கழுவுமுரை கழு
[மல நகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள்
[மொழிதகையவே'.

வானவர்கோன், அயன்மால் உள்ளிட்டதேவர்கள் இறப் பின் கால விழுக்காட்டை வரும் செந்தமிழ் திருமாமறை யானுணர்க :

" நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண் ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே." — 5-100-3

இவ்வாறு உரோமச முனிவர் கூறியதைக் கேட்ட நான்முகன் மிகவும் நடுநடுங்கி அடியேன் செய்த பிழையினைப் பொருத்தருள வேண்டுமென்று திருமால் திருவடியில் வீழ்ந்து வணங்கினன். திருமாலும் நான்முகனும் ஒருங்குசென்று உரோமச முனிவரை வணக்கஞ் செய்தனர். பின்பு அவ்விருவரும் அன்புடனும் அச்சத்துடனும் சென்று திருநந்தி தேவர் திருவடியில் உச்சிக் கூப்பிய கையினராய் வீழ்ந்து வணங்கினர். திருநந்தி தேவர் திருமாலை நோக்கியருளி அன்பனே! இந்தப் பிரமனுக்கு வீடுபேற்றிற் குரித்தாகிய மாமந்திரமாகிய திருவஞ்செழுத்தை உபதேசித்து இத்திருவூரின்கண் தவஞ் செய்து கொண்டிருக்கும்படி செய்வாயாக எனக்கட்டளையிட்டருளினர்.

அங்ஙனமே படைப்போனுகிய நான்முகன் திருமாலினிடம் செவியறிவுறூவாகிய உபதேசத்தைப் பெற்றனன். பெற்றுத் திருவொற்றியூராகிய இத்திருவூரின்கண் வடமேற்கு மூலையாகிய வாயு திசையில் இலைக்குடிலாகிய பன்னசாலையமைத்தனன். வடதிசையில் தன் பெயரால் ஒரு சிவக்குறி நிறுவினன். சிவக்குறியெனினும் சிவலிங்கமெனினும் ஒன்றே. நான்முகன் கீழ்த்திசையிலிருந்து திருவஞ்செழுத்தைக் கணித்துக் கொண்டிருந்தனன். கணித்தல் எனினும் செபித்தல் எனினும் ஒன்றே. வடகீழ்த்திசையிலிருந்து தவஞ் செய்து கொண்டிருந்தனன். நான்முகனின் மனைவியாகிய நாமகள் தென்மேற்கு மூலையில் ஒரு தீர்த்தமுண்டாக்கினள். அவள் அதன் கரையில் தவஞ்செய்து கொண்டிருந்தனள்.

இவ்வாருக மாலும் திருமகளும் நான்முகனும் நாமகளும் ஆகிய நால்வரும் இத்திருவொற்றியூரில் பல திசைகளிலும் அமர்ந்து தவஞ்செய்து கொண்டிருந்தனர். மேலும் காலை மாலைகளில் திருக்கோவில் சென்று அன்புடன் படம்பக்கநாதரையும், வடிவம்மையையும் கண்டு கும்பிட்டு வந்தனர். எல்லாச் செல்வமும் குறைவிலா நிறைவாய் இயல்பாகப் பொருந்தியுள்ள சிவபெருமான் திருநடனக்காட்சியினை நமக்கு எப்பொழுது காட்டி

யருளுவனோ என ஆவலுடன் இருந்து கொண்டிருந்தனர். அந்நேரத்துத் தெய்வ வாத்தியங்கள் ஐந்தும் வானத்தில் முழங்கக் கற்பகப் பூமாரி பொழியத் தேவர்கள் ஆரவாரம் புரிய நான்கு மறைகளும் புகழ்ந்துபாடவானத்து இசை வல்லா ராகிய கந்துருவர் இசை மீட்டிப் பண்ணொடு பாடத் திருச் சின்னம் ஊதிவரச் சங்கு முழங்க,சிவகணங்கள் புகழ, முத்தே வர்களும் நத்திநெருங்கிப்பணியப் படம்பக்கநா தர்எழுந்தருளி யிருக்கும் திருக்கோவிலுக்குப் பின்புறத்தில் மேற்குத் திசை யில் அருள்பொழி திருமுக மண்டலமும், திருச்செவிகளில் அளவிலாக் கதிரவர்களின் கதிர் அனைத்துந் திரண்டாலும் ஒப்பாகாதென்று சொல்லும்படியான பேரொளி திகழும்குண்ட லங்களும், வெண் சங்கக் குழைகளும், திருநீலகண்டமும், திருக்கைகளும், மழுப்படையும், மானும், கங்கையும் கொன் றை மாலையும், பாம்புகளும், புலித்தோலும், வெண்கொற்றத் திருக்குடையும், சிறப்பாகத் தோன்றவும், குடையின் அசைவு அடுத்தடுத்து விளங்கவும் மிக அண்மையில் அம்மையும் மூத்த பிள்ளையாரும், இளைய பிள்ளையாரும் அசை நடை காட் டவும் தேவர்க்கெல்லாந் தேவனாய் மாதேவனாய்த் தியாகராச னாய்ச் சிவபெருமான் திருநடனஞ் செய்தருளினர். நந்தியம் பெருமான் முதலியோர் கண்டு பெரும் பொலிவுற்றுத் தம்மை மறந்து வியப்புக் கொண்டு பேரின்பப் பெருவெள்ளத்து மூழ்கி மாறிலா மகிழ்ச்சியிற்றிளைத்தார்.

"விளங்கு மென்மா சடையானே விறுமலமா சடையானே
வியனுரனற் கோவுடையானே விழையும்
மனக்கோ வுடையானே
துளங்கும் பணிக் குழையானே துன்னுங் காதிற்குழை
யானே
தோன்றும் அம்மைக் களத்தானே
தொடியாரம் மைக் களத்தானே
தளங்கொ டாமத் தொடையானே தாவுமரவத் தொடை
யானே
தாக்கி னுரிவை வரையானே தரும வரிவை வரையானே
நளங்கொள் வீரக் கழலானே நன்மை யொளிர் பொங்கழ
லானே
நாடு மாதி புரியானே நண்ணு மிழைமுப் புரியானே."

என்று சொல்லும்படியான பலபொருள்சேர் புகழ்ப்பாடல்களை ஓதினர். அனைத்துலகங்களுக்கும் புகலிடமாகக் காணப்படும்

பேரருட்கடலே ! எல்லா நன்மையும் திரண்ட ஒரு வடிவமே தியாகராசப் பெருஞ்செல்வரே! அடியேங்கள் பல பிறப்பிடைச் செய்த சிவபுண்ணியப் பேற்றால் அடிகள் காட்டியருளிய இத்தகைய பேரறிவுப் பெருங்கூத்தினை இவ்வுலகமெல்லாம் உய்யும்பொருட்டு இத்திருவூரின்கண் எந்நாளும் இயற்றியருளுதல் வேண்டும். அதனால் தேவரீர் இத்திருவூரிலேயே வீற்றிருந்தருளுதல் வேண்டும் என விழுந்தெழுந்து தொழுது வேண்டிக் கொண்டனர். அங்ஙனமே அவர்கள் வேண்டுகோளைத் திருச்செவிசாய்த்தருளினன். அவர்கள் வேண்டுகோளின்படி இத்திருவொற்றியூரில் வீற்றிருந்தருள்கின்றனன். திருக்கூத்துப் புரிந்தருளுகின்றனன். இத்தியாகராசப் பெருமானுர் புரிந்தருளும் இன்பத்திருக்கூத்தினை அமாவாசை முதலிய புண்ணிய காலங்களில் யாவர்களும் அன்புடனே கண்டு கும்பிடுதல் வேண்டும். அவ்வாறு கும்பிடும் மெய்யன்பர்கள் இம்மையில் பெரும் பொருட்செல்வத்தையும் மறுமையில் சிவனருளாந்திருவினையும் எய்தி நீங்கா இன்பத்துடன் வாழ்வர். இஃது ஆண்டானின் திருவாணையேயாம்.

உமைப் பிராட்டியாரின் வினாச்சருக்கம்

சைவ நன்னெறிக் கொள்கைகளை மேற்கொண்டு ஒழுகும் சீலர்களே ! பண்டை நான்மறையில் திருவிளையாடல் புரியும் இயல்பாகவே மலங்களினின்று நீங்கிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருவெள்ளி மலையெனப்படும் திருக்கயிலாயம் திருவருளே வடிவமாகவுள்ளது. பேரொடுக்கப் பேரூழிக் காலத்து உலகிலுள்ள எல்லா மலைகளும் அழியும். அங்ஙனம் அழியும்போது திருக்கயிலாயமலை வானத்தை நோக்கி வளரும் இயல்பினையுடையது. எண்ணிறந்த வானவர் தலைவர்களாகிய பலகோடி இந்திரர்களும், பலகோடி பிரமர்களும், பலகோடி நாராயணர்களும் சிவபெருமானின் திருவுருப் பெற்று அவ்வெள்ளிமலையை இடைவிடாது சூழ்ந்து கொண்டிருப்பர்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருவெள்ளிமலையின் மீது சிவபெருமான் எழுந்தருளியிருந்தனர். அப்பொழுது ஒருநாள் மலைவளர் காதலியாகிய சிவபெருமாட்டியார் எழுந்து சிவபெருமானின் திருவடியைத் தொழுது வணங்கி ஐயனே ! இக்கலியுகத்தில் உலகின்கணுள்ள கோடிக்கணக்கான ஆருயிரினங்கள் சிற்றறிவும் சில்வாழ் நாளும் உடையவராய் இருக்கின்றனர்.

இந்நிலையில் இருந்து கொண்டு இருவினையால் மொத்துண்டு இறப்பிலும் பிறப்பிலும் கட்டுப்பட்டு அடையவேண்டிய உயிர் ஊதியத்தை அடையமாட்டாமல் துன்புறுகின்றனர். வீடுபேறென்னும் திருவடிப் பெருவாழ்வினைப் பற்றிச் சிறிதும் தெரிந்து கொள்ளாமலுமிருக்கின்றனர்.

இவர்களோ அரிய பெரிய தவத்தைச் செய்யுந்தன்மையர் அல்லர். இத்தகைய மாந்தர் தேவரீர் திருவடியை அடைந்து பேரின்பநுகர்வது எப்படி? அவர்கட்கு எந்த முறையினால் திருவடிப்பேறு கிட்டும்? பெருந்தண்ணளிபுரிந்து திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென வினவினர். இவற்றைத் திருச் செவி சாத்தியருளிய சிவபெருமான் புன்னகை புரிந்து உமையே! நீ வினவிய வினாவானது அனைத்துலகத்துமுள்ள ஆருயிர்களின் நன்மைக்கு வேண்டும் உதவியின் பொருட்டே யாகும். அதனால் யாம் அதற்குரிய வழிவகைகளைக் கூறு வோம், கேட்பாயாக.

இவ்வுலகத்தின்கண் அளவிடப்படாத திருவூர்களுண்டு. அத்திருவூர்கள்தோறும் யாம் அன்புடனே எழுந்தருளியிருக் கின்றோம். அத்தகைய திருவூர்களில் மிகவும் சிறப்பானவை அறுபத்தெட்டாகும். இவ்வறுபத் தெட்டில் ஏதாவது ஒரு திருவூரில் சென்று அங்கு நன்றாக அமைந்திருக்கும் சிவதீர்த் தத்தில் நினைந்துகொள்ள வேண்டிய விதிமுறைகளின்படி நினைந்து (சங்கற்பஞ் செய்து) கொண்டு திருவைந்தெழுத்தை எண்ணிக் கொண்டு நீராடுதல் வேண்டும். நீராடிச் சிவதீக் கையின்படி திருநிற்றுத் திருப்பதிகத் திருப்பாட்டுகளை ஓதிக் கொண்டு உடம்பில் உச்சிதொட்டுப் பதினாறு இடங்களில் திருநீறணிதல் வேண்டும். திருவங்கமாலையை ஓதித்தொடு மிடந் தொடுதல் வேண்டும். பின் "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" எனத் தொடங்கும் திருவஞ்செழுத்துத் திருப்பதி கத்தினை ஓதிக்கொள்ளுதல் வேண்டும. பின் 'சிவயநம' என் னும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்து மாமந்திரத்தினை இயன் றளவு சிவஞ்செய்தல் வேண்டும்.

பின் திருக்கோவில் சென்று வழிபடுதல் வேண்டும். அதன் பொருட்டு முதலில் திரு வெல்லையில் நிலத்தே வீழ்ந் தெழுந்து வழிபடுதல் வேண்டும். எல்லையென்பது திருவூரின் எல்லைக்கல் நாட்டி யிருக்குமிடம். எல்லைக்கல் இல்லாத இடங்

களில் திருக்கோபுரம் கண்ணிற்படும் இடமே திருவெல்லை யாகும். திருவீதியினையும் வணங்குதல் வேண்டும். திருக் கோபுரத்தடியில் வணங்குதல் வேண்டும். உட்சென்று பலி பீடத்தின் அருகே நிலத்தில் எட்டுறுப்பும்படும்படி வீழ்ந் தெழுந்து வணங்குதல் வேண்டும்.

பின் 1. மூத்த பிள்ளையார், 2. இளைய பிள்ளையார் 3. தென் முகக் கடவுள், 4. அம்மை, 5. சிவக்குறி (சிவலிங்கம்,) 6. கூத்தப் பெருமான் ஆகிய அறுவரையும் போற்றித் திருத் தாண்டகம் ஐந்தும், திருவாசகத்திலுள்ள போற்றித் திருவக வல் ஒன்றும் ஆக ஆறும் ஓதிப்பூத்தூவியருச்சித்து வழிபடு தல் வேண்டும். பின் ஊர்தி நந்திக்கும் திருவடியார்க்கும் திரு வாசகத்திலுள்ள 'தரிக்கிலேன் காய வாழ்க்கைத் திருப்பதிகம் ஓதிப் போற்றி மந்திரம் புகன்று பூத்தூவி வழிபடுதல் வேண் டும். இத்திருப்பதிகத்தின்கண் போற்றி மந்திரம் ஐம்பத் தாறு காணப்படும். போற்றித்திருவகவலின்கண் நூற்றைம் பத்தொன்பது போற்றி மந்திரம் காணப்படும். "மறையோர் கோல நெறியே போற்றி" என்பதோடு நூற்றெட்டு முற்றும். அம் "மறையோர் கோல நெறியே போற்றி" என்பதிலிருந்து இறுதிவரையுங்கொண்டால் போற்றி மந்திரம்ஐம்பத்திரண்டு வரும். "தரிக்கிலேன் காய வாழ்க்கை" ஐம்பத்தாறுங்கூட்ட நூற்றெட்டாகும். இவற்றை நந்தியங்கடவுட்கும் அடி யார்க்கும்அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

நம்மை அருச்சனை செய்து மெய்யன்புடன் வழிபட்ட வர்கள் மும்மலங்களும் நீங்கப்பெற்று நம்முலகமாகிய சிவ வுலகத்தைச் சேர்வர். கிரகண முதலிய புண்ணியகாலங் களில் நம்மை வழிபட்டவர்கள் பலபிறவிகளிலும் செய்துள்ள பாவமனைத்து மொழிந்து திருவடியுணர்வாகிய சிவஞானம் கைவரப் பெற்றுச் சிவவுலகம் எய்துவர். இத்திருவூர்களில் சிவ குருவின் வழியாகத் திருவைந்தெழுத்து மந்திரத்தைக் கேட்டு கொண்டவர்கள் மூதறிவு கைவந்த நல்லவாராகவே திகழ்வர். மூதறிவு—சிவஞானம்.

இத்திருவூர்களுள் மிகவும் முதன்மையான திருவூர் ஒன்று உண்டு. உலகத்தில் பாவங்களைச் செய்கின்றவர்

களும் சிறந்த புண்ணியமாகிய நம்முடைய மெய்ப்புகழ்களை எடுத்து மொழியாதவர்களும் பிறப்பு இறப்புக்களாகிய பெருந்துன்பத்தினின்று நீங்கி வீடுபேற்றையடையும்படி முற்காலத்தில் நம்மால் உண்டாக்கப்பட்டது. ஆதிபுரியாகிய திருவொற்றியூரென்று சிறப்பித்துச் சொல்லப்படுந்திருவூர். அதில் சுயம்பு என்று சொல்லப்படும் தான்தோன்றியாக வீற்றிருந்தருளுகின்றோம். இத்திருவூரில் படைப்போனாகிய பிரமனுடைய மூலத்தியே திருக்கோவிலாகக் காணப்படும். அதனகத்துத்தான் யாம் வீற்றிருக்கின்றோம். அப்பதியிலுள்ள பிரமதீர்த்தத்தை ஒருவர் கண்ணாரக் கண்டவுடன் அவருடைய பாவங்கள் முற்றும் நீங்கும். அதில் முறைப்படி திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டு முழுகுவாராயின் மேனிலை வாழ்வு கைகூடும். மேலும் அவர்கட்கு அயன் அரி ஆகிய பிரம விட்டுணுக்களின் வாழ்க்கையில் விருப்பமுண்டானால் அதுவுங் கைகூடும்.

நம்முடைய சுயம்புலிங்கத்தைக் கண்டு கும்பிட்டவர்கள் பலகோடி குதிரை வேள்விகளைச் செய்த பயனைப் பெறுவர். இத்திருவூரில் நான்முகன் வழிபட்டமையின் பொன்னுலகம் எனப்படும் சொர்ணபூமியெனவும்,நாராயணன்பூசித்தமையால் நாராயணபுரியெனவும், மறைகள் வழிபட்டமையால் வேதபுரியெனவும், இத்திருவூரை அன்பர்கள் அழைப்பர்.

நாம் எப்பொழுதும் நான் மறைகளின் முடியிலும் இத்திருவொற்றியூரிலும் திருநடஞ் செய்துகொண்டிருப்போம். அதனால் இத்திருவூர் மிகவும் மேலானதாகும். காசியிலிறந்தால் வீடுபேறுண்டாம். தில்லைத்திருச் சிற்றம்பலத்தைக் கண்டு கும்பிட்டால் வீடுபேறுண்டாம். திருவாரூரின் கண் பிறந்தால் வீடுபேறுண்டாம். திருவண்ணாமலையென மொழிந்தால் வீடுபேறுண்டாம். திருவொற்றியூரென நினைந்தால் வீடுபேறுண்டாம். உலகங்கள் அனைத்தும் அழிந்தாலும் இத்திருப்பதியொன்று மட்டும் என்றும் அழியாது.

இத்திருவூரிலுள்ள பிரம தீர்த்தத்தில் விதிப்படி ஒருமுறை முழுகிச் சிறந்த சிவனடியார்கட்கு ஆடை, பொன், அமுது, பசு, புத்தகம், கரகம் (கமண்டலம்), யோகதண்டு, இவைகளில் ஏதாவதொன்றை உள்ளன்புடன் தானஞ் செய்யின் ஐம்

பெருந்தீமையால் வரும் பாவங்களும் நீங்கும். எக்காலத்திலும் பொய் சொல்லாது மெய்யே சொல்லி மேன்மையுடன் ஒழுகி வரும் ஒருவன் இத்தீர்த்தத்தில் முழுகினால் மூப்பு நீங்கி இளமை எய்துவன். கங்கை முதலாகச் சொல்லப்படும் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் இதில் படிந்து தூய்மை எய்தும். கிரகண காலங்களிலும் அமாவாசையிலும், பருவத்திலும், மாதப்பிறப்பிலும் இதில் மெய்யன்புடன் முழுகினால் சிறப்புயிராகிய சீவன்மூத்தராவர். வளர்பிறை எட்டாம் பிறையிலும், தேய்பிறை பதின்நான்காம் பிறையிலும், தைப் பூசத்திலும், மார்கழித் திருவாதிரையிலும் தீர்த்தமாடினால் நனிமிகத் தூயராவர். மாசி மாதத்தில் தீர்த்தமாடித் திருவெண்ணீறும் சிவமணியும் பூண்டு நம்மைக் கண்டு கும்பிட்டால் இம்மையில் எல்லாவகையான செல்வங்களும் எய்தி யின்புறுவர். அம்மையில் திருவடிப் பேறெய்தி இறவாத இன்புறுவர்.

ஞாயிற்றுக்கிழமை வைகறையில் அந்தண்மைப் பண்பு வாய்ந்தோரென்று அழைக்கப்பெறும் சான்றோராகிய அந்தணரும் ஏனையோரும் இதில் தீர்த்தமாடினால் நன்மை எய்துவர். உச்சிக்காலத்தில் தீர்த்தமாடினால் பெரும்பயனுண்டாம். திங்கட்கிழமை வைகறையில் துறவிகள் தீர்த்தமாடுதல் சிறப்பு. செவ்வாய்க்கிழமை மாதர்கள் தீர்த்தமாடுதல் மாண்பு. புதன்கிழமை தேவர்கள் வந்து தீர்த்தமாடுவர். வியாழக்கிழமை கன்னிப்பெண்கள் தீர்த்தம் ஆடினால் அவர்கட்கு வல்விரைவில் திருமணம் நிகழும். வெள்ளிக்கிழமை மணம் ஆகிய பெண்கள் தீர்த்தம் ஆடினால் எல்லாவகையான நற்பேறுகளும் எய்துவர். மேலும் அவர்கள் சனிக்கிழமை தீர்த்தம் ஆடினால் நன்மக்கட்பேறு உண்டாகும். கைம்பெண்கள் தீர்த்தமாடின் தவப்பேறெய்துவர். ஏழு நாட்களிலும் முறைப்படி தீர்த்தமாடி நம்மை வணங்கித் தொழும் மெய்யடியார்கட்கு நினைத்தவெல்லாம் நினைத்தபடியே கைகூடும்.

இத்திருவொற்றியூரில் ஓராண்டு உறைந்து மெய்ப் பத்தியுடையவராயிருப்பின் முன்பு செய்துள்ள பாவங்களனைத்தும் நீங்கி அன்புநிறை சுற்றத்தாருடன் பேரின்பம் எய்துவர். இத்திருவூரில் திருவருள் நினைப்புடன் துயில் கொள்ளும்

மெய்யன்பர்கள் நிலை, நிட்டைபுரியும் நற்றவத்தோர் நிலையோடு ஒக்கும். இங்கு வாழ்ந்து நடமாடினால் திருக்கோவிலை வலம் வருதலோடொக்கும். வாய்மையுடன் பேசினால் சிவபுராணம் படித்ததோடொக்கும். ஏதாவதொன்றைப் பத்தியுடன் நினைத்தால் சிவவேள்வி செய்தலோடொக்கும்.

இப்பதியின்கண் நமக்கு (சிவபெருமானுக்கு)ப் பயனும் பண்பும் மிக்குடைய பசுக்களைத் தானம் புரியின் அப்பசுக்களின் ஒவ்வொரு மயிரின் எண்ணுக்குத் தக்கவாறு ஒவ்வொரு கற்பகாலம் நம்முலகின்கண் நலமுடன் இன்புற்று வாழ்வர். இறந்தவர்களின் எலும்பை ஒருசிறு மட்குடத்திலிட்டு வாய் மூடித்திருமகள் தீர்த்தம் என்று சொல்லப்படும் இலட்சுமி தீர்த்தத்திற்கு அண்மையில் புதைத்துவைத்தால் அவ்வெலும்புக்கு உரியவர் திருவடிப் பேறெய்துவர். இத்திருவொற்றியூரைவிட நமக்கு அன்பான சிறந்த இடம் வேறொன்றும் இல்லை. ஒவ்வொரு அமாவாசையிலும் நந்திமுன்பாக நாம் செய்யும் திருநடம் போன்று வேறு எந்த உலகத்திலும் யாம் செய்வதில்லை. இத்திருக்கூத்தைக் கண்டு கும்பிடும் பேறு இல்லாதவர்கள் எத்தகைய ஞானிகளாயினும் பெரும்பாவியே யாவர். கண்டு கும்பிட்டவர்கள் எத்தகைய பாவிகளாயிருப்பினும் புண்ணியவான்களே யாவர்.

உமை கேள்விச் சருக்கம் முற்றும்.

வேததூய்மைச் சருக்கம்

மெய்யுணர்வு கைவந்த நற்றவத்தோர்களே! முன்னம் ஒரு தாமரை ஊழியில் திருமாலானவர் அனைத்துலகும் தினைத்தனையும் இடமின்றிப் பெருவெள்ளம் மூடிக்கிடந்தது கண்டனர். அவர் அவ்வெள்ளத்தின் மீதிருந்து சிவவுள்கு (தியானம்) தலோடு அறிதுயில் கொண்டனர். அவருடைய கொப்பூழிலிருந்து ஒரு தாமரை உண்டாயது. அத்தாமரையினின்று நான்முகன் தோன்றினன். அவனுடைய நான்கு முகங்களிலிருந்து பண்டை நான்மறைகள் உண்டாயின. அவன் நெஞ்சிலிருந்து பழமை எனப்படும் புராணங்கள் உண்டாயின.

அவைகள் (வேதபுராணங்கள்) அந்நான்முகன்முன்வந்து விளங்கி நின்றன. அவைகளை அந்நான்முகனுகிய பிரமன் கண்டு அளவிலா இன்பங் கொண்டனன். அந்நேரத்துச் சிவபெருமான் தன் பேரருட் பெருந்தண்ணளியால் அந்நான்முகன் உள்ளத்து உலகத்தை உண்டாக்குந்தன்மையை உண்ணின்று உணர்த்தியருளினன். உடனே நான்முகன் முதற்கண் தேவர்களை உண்டாக்கினன். பின்பு அசுரர்களைப் படைத்தனன். இவர்களிருவரும் யாதொரு காரணமுமில்லாமல் ஒருவரோடொருவர் போர் செய்யத் தொடங்கினர். அப்பொழுது தேவர்கள் வேதமந்திரங்களையே படைக்கலமாகக்கொண்டு அவர்களைவென்று தோற்றேடச்செய்தனர்.

இதைக்கண்ட அசுரர்கள் ·தேவர்கட்கு வேதமந்திர வன்மையிருந்ததினுல் நம்மைத் தோற்கடித்தனர். அதைப்பறித்துக்கொள்ளுதல் வேண்டுமென்று எண்ணினர். அவர்களுள் மது, கைடவன் என்னும் அசுரர்கள் இருவரும் மாயையைத் துணை சேர்த்துக்கொண்டுசென்றனர். சென்று வேதத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். அவ்வேதத்தைப் பல துண்டங்களாக்கி நடுக்கடலிலே கொண்டு சேற்றில்புதைத்துவிட்டனர். வேதத்தை இழந்த தேவர்கள் செய்ய வேண்டிய நாட்கடமைகளைத் தவறி விட்டனர். வேதம் ஓத வழியில்லாமல் ஊமைகள் போல் வாளா இருந்தனர். திகைப்புற்றுப் பிரமனிடஞ் சென்று தேவர்கள் முறையிட்டனர். நான்முகனும் தன் படைப்புத் தொழில் செய்வதை மறந்து வருந்தினன். வருந்தி அவன் திருமாலினிடஞ்சென்று முறையிட்டனன். இதனைக் கேட்ட திருமால் சிறிது நேரம் எண்ணமிட்டனர்.

எண்ணமிட்டவர் உடனே கருடன் மீதேறி அசுரர் முன் சென்று தேவயாண்டு ஐயாயிரயாண்டு கடும் போர் செய்தனர். திருமால், அவர்களை வெல்லமுடியாமல் அல்லலுற்றனன். அல்லலுற்று எல்லா நலங்களும் குறைவின்றி நிறைவாகவுடைய சிவபெருமானை அகத்தவமாகிய யோக முறையில் உள்ளத்தே உள்கினன். சிவபெருமானும் அவனது வழிபாட்டிற்கிரங்கிக் காட்சிதந்தருளினன் சிவபெருமான் திருவருளால் திருமால் அவ்வசுரர்களையெல்லாம் தன்மாயை வன்மையால் மயக்குதல் செய்தனன். செய்துபின் தன் ஆழிப்படையால் அவ்வசுரர்களையெல்லாம்கொன்று குவித்தனன். உடனே திருமால்கீழுலக

மாகிய பாதாளத்தே சென்று வேதங்களைத் தேடினன். அங்குக் காணவில்லை பின் கடலருகே நின்று வேதங்களை நோக்கி ஓ மறைகளே! நீங்கள் முற்றுணர்வும் முடிவிலாற்றலுமுடைய முழுமுதற் சிவபெருமானின் திருமொழியன்றோ? உங்களைக் கொண்டன்றோ படைப்புத்தொழிலை நான்முகனும், காப்புத் தொழிலை யானும், துடைப்புத்தொழிலை அரனும் கற்றுக் கொண்டோம்.

முத்தேவர்களாகிய நாங்கள் நடப்பதும் உங்களுடைய கட்டளைப்படியன்றோ? உங்களுடைய திருமுடியாகிய உச்சியிலன்றோ எங்களை ஆட்கொண்டருளும் எல்லாம் வல்ல பரசிவக்கடவுள் வீற்றிருந்தருளுகின்றனர். அவருடையமாண்புகளனைத்தும் உங்களாலன்றோ எங்கட்குத் தெரியவந்தது. நீங்கள் மறைந்துவிட்டால் நாங்கள் உய்வது எப்படி? நீங்கள் இருக்குமிடம் எங்கேயோ என்று எனக்குத் தெரியவில்லை? எனதுமுன் மிகவும் தயவுபுரிந்து வாரீரோ? என்று புகழ்ந்து போற்றினன்.

போற்றவே வேதபுருடன் திருமாலின் புகழுரைகளைக் கேட்டு ஏ, திருமாலே! எங்களைத் தீய அசுரர் கடல் நடுவில் வைத்திருக்கிறுர்கள். விரைவில் வந்துகொண்டுபோகக்கடவை என்றனன். இவையனைத்தையும் ஓமொழிக்குரலால் வேதங்கள் சொல்லின. இதையுணர்ந்ததிருமால் மகரமீன் வடிவுகொண்டு கடலுட்புகுந்து அதனைக் கலக்கினன். கலக்கி வேதங்களை வெளிக்கொணர்ந்தனன். கொணர்ந்து இத்திருவொற்றியூரில் வீற்றிருந்தருளும் படம்பக்கநாதர் திருமுன்னில் வைத்து வணங்கினன்.

வணங்கவும் பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமானுர் தம்திருக்கண்ணுல் நோக்கித் தூய்மைப்படுத்தியருளினன். திருமாலைப்பார்த்து மிகவும் மகிழ்ந்து அன்பனே, நீ என் அடியவர்களுள் சிறந்தவன். நீ இவ்வேதங்களை மீட்டுக்கொண்டு வரும்வகையில் மிகவும் பெருமுயற்சியெடுத்துக்கொண்டாய். நீ நலமாக உன் மனைவியுடன் கூடி இன்துயில் செய்து கொண்டிருக்கக் கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளினர்.

திருமாலானவர் எம்பெருமானே! நிகழ்ந்தனவற்றுள் சிறிதும் எளியேனுல் நிகழ்ந்ததாகாது. அடிகளே! நும்திருவடியில்

பெரும் பத்திவைத்து வழிபட்டுவரும் சிவனடியார்தம் திருவடிக்கு அடியேன் புரிந்துவரும் அன்புமிக்க பணி விடைப் பாக்கியத்தால் எத்தகைய பெருங்காரியங்களையும் மிகவும் எளிதாகவும் இனிதாகவும்செய்து முடிக்கும் வன்மை பெறுகின்றேன். பண்டு அடியேன் என்னுடையகண்களில் ஒன்றை நும்முடைய திருவடியில் சாத்திப்பூசைசெய்த பேற்ருலும், திரியும் முப்புரத்தை சிரித்து எரித்தகளத்தில் நும்திருவடியை விடையாயிருந்து தாங்கிய புண்ணியத்தாலும்தேவரீர் பொன்மலையை வில்லாகக்கைக்கொண்டருளிய காலத்துக்கணையாகஅமைந்த கடமையாலும், அடிகளே நுமக்கு வைப்பாற்றலெனப்படும் பரிக்கிரக சத்தியாக இருத்தலிஞலும் அடிகளே! தேவர்கள் மதிக்கும் தகுதியுடன் வாழுகின்றேனேயன்றி எளியேனுக்கெனத் தனியுரிமை யாண்டுளது? எனப் பலவாறு புகழ்ந்து வழுத்தினன். வழுத்திச்சிவபெருமான் பால் பிரியாவிடை பெற்றுத் திருப்பாற்கடலை அடைந்து அறிதுயிலிலமர்ந்தனன் திருமால் விடையானவுண்மையை வரும் திருமாமறை முடிபான் உணர்க!

' கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேருதே
இடபமுகந் தேறியவாறெனக்கறிய இயம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடப மதாய்த் தாங்கினன் திருமால்காண்சாழலோ "—அ. சாழல்

வேதத்தூய்மைச் சருக்கம் முற்றும்.

பாணினி வியாகரணம் செய்த சருக்கம்

சிவனுர் செந்தமிழ்த் திருவைந் தெழுத்தினை விடாது கணிக்கும் நாவினர்களே! பாணினியென்று அந்தணரொருவர் தோன்றினுர். அவர் தமக்கு வேதவுணர்ச்சி முற்றும் தோன்றும் படி நான்முகனை நோக்கி நீண்டநாட்களாகக் கடுந்தவங்கள் செய்து கொண்டிருந்தனர். அவர் தவத்திற்கு மனமிரங்கிய நான் முகக்கடவுள் அவர் முன்னே தோன்றி நின்னுடைய தவத்தினுக்கு மிகவும் வியந்தோம். நீ விரும்பியவண்ணம் முடிதற்கேதுவாகிய சூழ்ச்சிகளைச் சொல்லுகின்ருேம் கேட்பாயாக.

கல்விக்குரிய தெய்வம் கண்ணுதற் பெருங்கடவுள். அக் கல்வியாலாகிய வேதங்களைத் தொன்மையில் திருவாய் மலர்ந்தருளியவன் தேவாதி தேவனாகிய சிவபெருமானவர். அப்புண்ணிய வடிவினனாகிய இயற்கைத்தூயோன் மிகுந்த விருப்பமுற்றுஎழுந்தருளியிருக்கும்திருவூர் தென்றமிழ்நாட்டுத் திருவொற்றியூராகும். ஆயிரம் ஆண்டுகள் பிறதிருவூர்களில் தவஞ்செய்ததனால் உண்டாகும் பயன் இத்திருவூரில் ஒருநாள் செய்யும் தவத்தினாலேயே சித்தியாகும். இத்திருவூர்க்கு மேற்பட்டதிருவூர் மூன்று உலகங்களிலும் இல்லை. அத்திருவூர்க்குச் சென்று வடிவம்மையுடன் வனப்புறவீற்றிருந்தருளும் படம்பக்கநாதரை அன்பும் அச்சமும் ஆர்வமும் பூண்டு பணிவாயாகில் உன்னுடைய காரியம் எவ்வகைத் தடையுமின்றிச் செவ்விதின் முடியுமென்று கட்டளையிட்டருளினன்.

இதனைக் கேட்டுணர்ந்த பாணினி அளவில்லாத பேரின்பமுற்றுத் திருவொற்றியூரெனப்படும் ஆதிபுரியை வந்தடைந்தனர். எல்லையை மிதித்த அளவானே எட்டுறுப்பும் நிலத்தே படும்படியாகக் கீழ் விழுந்து எழுந்து இரண்டு கைகளையும் உச்சியின் மேற்குவித்துக் கொண்டு உட்புகுந்து பிரமதீர்த்தத்தில் திருவைந்தெழுத் தோதிப் படிந்தனர். படிந்தெழுந்து திருவெண்ணீற்றினைத் திருமுறைப்படி பதினறு இடங்களில் நீரிற்குழைத்து நிரல்பட இட்டனர். சிவமணியினைத் தவ முதல்வரெனும்படி பூண்டுகொண்டனர். திருவைந்தெழுத்தினை உருவேற்றி உள்ளூர உருகிக்கொண்டனர். உள்குதல் என்பது தியானித்தல் உள்கியவண்ணமே மாடவீதியைவலம் வந்தனர்.

வந்து திருக்கோவிலினுள் பெருமகிழ்வுடன் நுழைந்தனர். நுழைந்துநந்தியம் பெருமானாகிய பெரிய தேவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டனர். நந்தியங்கடவுள் திருவாணை பெற்றே உட்செல்லுதல் வேண்டும். அவ்வுண்மையினை வரும் திருமுறைத்திருப்பாட்டுக்களான் உணர்க ;

“ வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
விண்ணவர் எண்ணிலார் மற்றும்
காதலான் மிடைந்த முதற்பெருந் தடையாம்
கதிர்மணிக் கோபுரத் துள்ளான்
பூதவே தாளப் பெருங்கண நாதர்

போற்றிடப் பொதுவில் நின்றாடும்
நாதனர் ஆதி தேவனர் கோயில்
நாயகன் நந்தியெம் பெருமான்.''—12. திருமலை—10

"நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேற் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில்சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்.''— ,, ,, 11.

"அங்க ணெய்திய திருஅணுக் கன்திரு வாயிலி னடற்சேரர்
தங்கள் காவலர் தடையுண்டு நின்றனர் தம்பிரா னருளாலே
பொங்கு மாமதம் பொழிந்தவெள் ளானையினும்பர்போற் றிடப்
[போந்த
நங்கள் நாவலூர் காவலர் நண்ணினா ரண்ணலார் திருமுன்பு.,'

"நின்ற வன்தொண்டர் நீரணி வேணிய நின்மலர்க் கழல்சாரச்
சென்று சேரலன் திருமணி வாயிலின் புறத்தினன் எனச்
[செப்பக்
குன்ற வில்லியார் பெரியதே வரைச்சென்று கொணர்கென
[அவரெய்தி
வென்றி வானவர்க் கருளிப்பா டெனஅவர் கழல்தொழ விரைந்
[தெய்தி.''—12. வெள்ளானை—41, 44:

விடைபெற்று உட்புகுந்தனர். மூத்த பிள்ளையாராகிய யானைமுகக் கடவுளையும், இளைய பிள்ளையாராகிய ஆறுமுகக் கடவுளையும் வணங்கினர், பின் படம்பக்கநாதர் திருமுன் சென்றனர். சென்று பலமுறை கீழ் விழுந்து எழுந்து போற்றித் தொடரும் புகழ்மொழியும் பல புகன்று வணங்கினர். பச்சிளங்கிள்ளை போன்ற வடிவுடை நாயகியையும் அம்முறையே வணங்கினர். கண்டு கும்பிட்டுக்கொண்டு வெளி வந்தனர். வெளி வந்து இரவு முழுவதும் நிட்டை கூடியிருந்தனர். பகல் முழுவதும் முன்னோதிய முறைப்படி பூசை பண்ணிக் கொண்டிருந்தனர். இம்முறையாக வழிபட்டுக் கொண்டு வருகையில் ஒருநாள் தீண்டாத் திருமேனியாகிய பலகை வடிவமைந்த சிவக்குறியினின்றும், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் உண்மையறிவின்பப் பிழம்பாகிய சிவபெருமான் சிவகுரு வடிவாய் வெளிப் போந்தருளினன்.

வந்து பாணினியை நோக்கித் தலைமையந்தணனே! வேதங்களின் கருத்தனைத்தும் உன் உள்ளத்தினுள்ளே விளங்கும்படி செய்தருளினோம். அதனை அடிப்படையாகக் கொண்டு வடமொழிக்குச் சிறந்ததோர் வியாகரண மெனப் படும் பேரிலக்கணம் செய்யக் கடவை எனத் திருவாணை புரிந் தருளினன். புரிந்து அவ்விலக்கணம் எஞ்ஞான்றும் எமக்கு இணையில்லாத நனிமிகு விருப்பம் அமைந்த தொன்மையும் நன்மையும் மிக்க தென்றமிழ் மொழிக்கண் ஒப்புயர்வின்றி விளங்குவதான இலக்கணமாம் அகத்தியம்போன்று எங்கும் விளங்குவதாக என்றருளினன்.

இதோ உனக்கு முன்னதாக வேதமுறை வழுவாத வகையில் பதினன்கு சூத்திரம் ஒரு தொகுதியாக நிறுவினோம். இதனைக்கொண்டு மிகவும் விரிவாக இலக்கணஞ் செய்யக் கடவாய் எனத் திருவாணையருளித் திருவுருக்கரந்தருளினன். பாணினி எழுந்து மகிழ்ச்சி மேலீட்டால் ஆடினர். அருந் தமிழ்ப் பாமாலை பாடினர். தன் வயமிழந்து சிவவயப்பட்டுத் திகழ்ந்தனர். திருவருட்டுணையால் தெளிவுற்றனர். பின் படம்பக்கநாதர்பால் பிரியாவிடைபெற்று வடநாடு சென் றனர். அங்குச் சிவனினைவுடன் இருந்து கொண்டு அவன் திருவாணைப்படி வடமொழி வியாகாரணம் வனப்புறவகுத்து தமை நிகரில்லாத் தவத்தோராயிருந்து இன்புடன் வாழ்ந்து வந்தனர்.

பாணினி வியாகரணஞ் செய்த சருக்கம் முற்றும்.

வரன்மீக முனிவர் அழியரத்தன்மை அடைந்த சருக்கம்

தூய வெள்ளைநீ றணிந்து சிவபெருமான் திருவடியையே தொழும் தலைமையும், தாயனைய தண்ணளியும் வாய்ந்த தவத்தோரே!

மழைக்கடவுளின் தவ ஆற்றலாற் பிறந்தவர் வான்மீக முனிவர். இவர் எண்ணெணுத் தண்ணளிப் பெருங்கடலாகிய சிவபெருமானுடைய திருவடியிணையே சிந்திக்குந்திறலினர். ஆணவமலத் தொடர்புடைய இவ்வுலக வாழ்வில் சிறிதும் பற்றில்லாதவர். மறைமுறை பழங்கதை வரலாறு முதலிய (வேதாகமபுராண இதிகாசங்கள்) மெய்ந்நூல்களையே விடாது

படித்துக் கொண்டிருப்பவர். பிறவிப் பெரும்பிணிக்குப் பொருவரும் அருமருந்தாயுள்ள திருவருள் வடிவாய்த் திகழ்கின்ற திருவெண்ணீற்றினையே மங்காது பூசி மகிழும் பொங்கு மனத்தினர். திருவெண்ணீற்றின் பெருமையினை வரும் தனித்தமிழாகமத்தானுணர்க :

"கங்காளன் பூசங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வரே யாமாகிற்
றங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே."—10.

சிவமணியெனப்படும் உருத்திராக்க மாலையினை நற்றவ அடையாளமாக நாளும் அணியும் நலத்தினர். திருமாமறைகளின் சீரிய உயிராகிய திருவைந்தெழுத்தினையே திட்பமொடு கணித்துவரும் செந்நெறிச் செல்வர். செந்நெறியின் உயிரொக்கும் திருவைந்தெழுத்து. உடலொத்துத் திகழ்வது திருவெண்ணீறு. உடையொத்துப்பொலிவது சிவமணி. இதனை வருமாறு நினைகூர்க :

ஐந்தெழுத்தே ஆவியுடல் நீரும் சிவமணியும்
முந்துடையாம் செந்நெறிக்கிம் மூன்று.

ஆக்கையாற்பயன் பூக்கையாலட்டிப் போற்றிமறை புகன்று மெய்ப் பொருளை வழிபடுதல். அம்முறையில் சிவபெருமானை நாளும் தங்கையால் போற்றி போற்றியென மறைமொழிந்து பூத்தூவி வழிபட்டு வரும்புண்ணியர். இந்நெறியொழுகும் சிவனடியாராகிய அம்மெய்த்தவ முனிவர் ஒரு நாள் சிவத்திருப்பதிகளை யெல்லாம் கண்டு கும்பிட்டு வழிபடும் கருத்துக் கொண்டனர். அவ்வார்வ மேலீட்டால் வடபுலஞ்சென்று கங்கைநீராடினர். காசி விசுவநாதரை வழிபட்டனர். பின் மாளுவதேசம், குச்சர தேசம் முதலியவற்றிலுள்ள சிவத்திருப்பதிகளைப் பணிந்தனர். திருப்பருப் (ஸ்ரீ சைலம்) பதத்தை வணங்கினர். யானையும், பாம்பும், சிலந்தியும் வழிபட்ட திருக்காளத்தியை அடைந்தனர். கண்ணப்பர் வழிபட்ட விண்ணவரமிழ்தினுமேலாம் புண்ணிய முதல்வரைப் பணிந்தனர்.

மயிலியற்சாயல் மலைமகள் வழிபட்டு முப்பத்திரண்டறங் களையும் தப்பின்றிப் புரிந்தருளிய கல்விக்குக் கரையிலாத ஒப்பில் செல்வத் திருக்காஞ்சியினைக் கண்டு வழிபட்டனர். அயனும் அரியும் மயலாற் காணவொண்ணு நிலையில்சிவபெருமான் தீப்பிழம்பாய்த் தோன்றியருளிய திருவண்ணுமலையினையண்மி வழிபட்டனர். திருக்கோவலூர், திருமுதுகுன்றம். திருமுட்டம், திருமயிலாடுதுறை, திருவழுவையூர், திருவீழிமிழலை, திருவிடைமருதூர், திருவையாறு, திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, இரத்தினகிரி, திருவாலவாய், திருநெல்வேலி, திருக்குற்ருலம், இராமன் தனக்குக் கொலையால் நேர்ந்த பெரும்பழி நீங்க வழிபட்டுய்ந்த திரு இராமேச்சுரம் முதலிய திருவூர்களை முறையுற வழிபட்டனர்.

பின் திருமறைக்காடு வந்து சேர்ந்தனர். அங்கோர் இலைக் (பர்னசாலை) குடிலமைத்தனர். அங்குச் சிலநாள் தங்கி வாழ்ந்தனர். கிழக்குக் கடலோரத்தில் திருமாலானவர் ஒரு காலத்தில் அசுரரையெல்லாம் வென்று கோதண்டத்தை முகவாய்க் கட்டையில் ஊன்றிக் கொண்டு நின்றனர். சில அசுரர்கள் செல்லுருக் கொண்டுவந்து அக்கோதண்ட வில்லின் நாணை அறுத்துவிட்டனர். உடனே திருமாலின் தலை வேருய் நீண்ட தொலைவிற் சென்று விழுந்தது. அதனைத் திருமகள் கண்டு நடுநடுங்கி ஓடோடியும் வந்து திருவாரூரிற் சென்று புற்றிடங் கொண்டருளிய புண்ணிய முதல்வனை வழிபட்டனள். அவர்தம் திருவருளால் திருமால் முன்புபோல் தலைபெற்றனர். திருமகளை மாமலராள் எனவும் இலட்சுமியெனவுங் கூறுப. திருமகள் வழிபட்டுக் கணவன் தலைபெற்ற உண்மையினை வரும் சேக்கிழாரடிகள் திருமொழியானுணரலாம்:

''சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்.''—12. திரு ஆ—1.

வான்மீக முனிவர் திருமறைக் காட்டினின்றும் மேற் கூறிப் போந்த திருவாரூர்க்கு வந்து வழிபட்டனர். அங்கு நின்றும் திருவிற்குடி, திருச்செங்காட்டங்குடி, திருக்கடவூர்,

திருவெண்காடு, சீகாழி முதலிய திருவூர்களை வழிபட்டனர். எல்லையில் புகழ் தில்லை நகரை வந்து கண் குளிரக் கண்டு வழிபட்டு மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தனர்.

பின் திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கழுக்குன்றம், திருஇடைச்சுரம், திருமயிலை, திருவலிதாயம், திருவேற்காடு, முல்லைவாயிலை வணங்கிப் பின் திருவொற்றியூர் அடைந்தனர். இத்திருவூரைவிட்டு நீங்கச் சிறிதும் மனங்கொள்ளாமையால் பல நாட்கள் இங்கேயே நனிமிக விழைந்து தங்கினர். தங்கித் திருத்தொண்டு பல புரிந்து வந்தனர். அங்ஙனமிருக்கையில் ஒருநாள் மூவர்க்கும் முதல்வனாகிய விழுமிய முழுமுதற் சிவ பெருமான் வெளிப்பட்டருளினன். வெளிவந்து முனிவனே. உன்னுடைய தொண்டினுக்கு மிக வியந்தோம். உனக்கு வேண்டிய வரம் யாதென வினவியருளினர். முனிவர் சிவ பெருமானை நோக்கிப் பெருமானே! அடியேனுடைய இரு கைகளாலும் கடவுளே உம்முடைய திருக்கோலத் திருவுரு வினைத் தொட்டுப் பூசிக்கும்படித் திருவருள் புரிய வேண்டு மெனப் பணிவன்புடன் விண்ணப்பித்துக் கொண்டனர். கடவுள், முனிவனே! அயன் அரி முதலிய தேவர்களே என்னைத் தொட்டுப் பூசிக்கத்தக்கவர். வேறு எவராலும் அங்ஙனம் செய்வது இயலாததாகும்.

ஆயினும், உன்னுடைய அன்பான விருப்பம் முற்றும்படி ஒன்று சொல்லுகின்றேன் கேட்பாயாக. நம்மெய்யடியார் ஒரு வர்க்கு மாணிக்கம் கொடுக்கும்படிச் சென்று ஒரு திருவிளை யாடலைப் புரிந்தனம். அத்திருவூர் இதற்குத் தெற்கேயுள்ளது அங்கும் நாமே எழுந்தருளியிருக்கின்றனம். அத்திருவூரில் திருப்பாற்கடல் கடைந்த தெய்வ அமிழ்தத்தையே சிவக்குறி யாக்கித் தேவர்கள் அங்குப் பூசித்தனர். அங்கு நீ சென்று உன் உள்ளத்தின் விருப்பப்படி பூசை செய்து கொண்டிருப் பாயாக வென்று கட்டளையிட்டருளி மறைந்தருளினர்.

சிவபெருமான் திருவாணையைத் தலைமேற்கொண்டு அமுத புரியை அடைந்து மருந்தீசரைப் பணிந்து தானே சிவ லிங்கப் பெருமானைத் திருமுறை (ஆகமம்)யின் வழியாகப் பல ஆண்டுகள் பூசை பண்ணிக்கொண்டு வந்தனர். அங்ஙன

மிருக்கையில் ஒருநாள் சிவபெருமான் தண்ணளிபுரிந்து வெளி வந்தருளினன். அன்பனே! உன் அன்பு நிறைந்த பூசையை ஏற்றருளினம். நீ இத்திருவூரின் கண்ணே ஊழிகால முடியும்வரை வழிபட்டுக் கொண்டிருப்பாயாக. பின் நம் திருவடியில் எப்போதும் நீங்கா அழிவில் பேரின்பப் பேற்றை எய்தி இன்புற்றிருப்பாயாக வென்று திருவருள் புரிந்தனர். இந்நாள் முதல் இத்திருவூர் உன் பெயரால் **வான்மியூர்** என வழங்கக் கடவது என்று அருள் சுரந்து மொழிந்து மறைந் தருளினன். அதுமுதல் வான்மீக முனிவர் திருவான்மியூரிலும் திருவொற்றியூரிலும் சிவபெருமானைத் தவருது கண்டு கும்பிட்டு வழிபட்டுக் கொண்டின்று மிருக்கின்றனர்.

"உள்ளம் உ.ள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ள முள்ளவ ழிக்கசி வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே."—5. 62—4.

கடிய விடையேறி காளகண்டர் கலையோடு மழுவாளோர்
கையிலேந்தி, இடிய பலிகொள்வார் போவாரல்லர்
எல்லாந்தாம் இவ்வடிகள் யாரென்பாரே, வடிவுடைய
மங்கையுந்தாமு மெல்லாம்
வருவாரை யெதிர்கண்டோம் மயிலாப்புள்ளே, செடிபடுவெண்
தலையொன்றேந்தி வந்து
திருவொற்றி யூர்புக்கார் தீய வாறே.

வான்மீக முனிவர் அழியாத் தன்மை அடைந்த சருக்கமுற்றும்.

வாசுகிச் சருக்கம்

பக்தி மிகுந்த பரமனடியவர்களே! கீழ்த்திசைப் பாதாளத்தில் நாகமன்னர்கள் எண்மரில் வாசுகி என்பவனும் ஒருவன். அவன் அறநூலின்படி செங்கோலோச்சி ஆண்டு கொண்டு வந்தனன். அறமுறை தவருதவன். பற்பல நாகர்கள் தற்சூழ நாடொறும் சிவ வழிபாடியாற்றுவன். பத்தி முதிர்ந்த சிவனடியார்களால் பாராட்டப்பட்டு வந்தனன். இவனும் மிக்க பத்தி நிறைந்த தலைமணியாகவும் இருந்தனன். காமனைக் கண்ணழலாற்காய்ந்த கண்ணுதலோன் திருப்படி மத்தினை விடாது பூசனை புரிவதில் தன் கைகளைப் பயன்

படுத்துவன். அங்ஙனமன்றி வேறு வகையில் பயன்படுத்து வானல்லன். அப்பெருமான் திருவருடியிணையின் பெரும்புகழ் களைப் பேசுவதே யன்றி வேறு எப்பொருள் பற்றியும் தப்பியும் பேச உடன்படான்.

இங்ஙனம் வாழ்ந்து வருங்கால் ஒருநாள் தனக்குள்ளேயே எண்ணுவானாயினன். இவ்வுலகத்தில் அடுத்தடுத்துப் பிறப் பதும் இறப்பதும் தொழிலாக இருக்கின்றேனே அன்றி இதற் கொரு முடிவு காண்கிலேன். முழுமுதல்வனாகிய சிவபெரு மானை நினையப் புகுந்தால் அப்போது மறைப்பு நிகழுகின்றது உலகப் பொருள்களை நுகரும் இன்பத்தில் நோக்கஞ் செல்லு கின்றது. நிலையாத பொய்ப் பொருள்களை நிலைக்கும் மெய்ப் பொருள்களெனவும், அதுபோல் மெய்யைப் பொய்யெனவும் உறுதி செய்யும்படியான உள்ளத்துணிவும் உண்டாகின்றது. எப்பொழுதும் அழிவின்றி நின்று நிலவி வாழ்வோமென்னும் எண்ணமே ஓவாது வந்துகொண்டிருக்கின்றது. அடுத்த நொடிப் பொழுதினுள் இறப்பு வருமே என்னும் எண்ணம் இம் மியும் ஏற்படக்காணோம்.

கண் கூடாக உலகத்தில் ஒவ்வொரு நொடியிலும் கோடிக் கணக்கான உயிர்கள் இறந்து கொண்டிருக்கும் இயல்பினையும் காண்கின்றோம். கண்டும் நமக்கு இறப்பு வருமே என்னும் எண்ணம் சிறிதும் உண்டாகவில்லை. இஃதென்ன முறை கேடான பெருங்கொடுமையாக விருக்கின்றது? இச்செயல்கள் மாயை செய்யும் கண்கட்டு வித்தைகளாகவன்றோ இருக் கின்றன. இம்மாயை மறைந்து செய்யும் மயக்கினை யாவரே வெல்லுவர் ? அம்மம்ம அரி அயன் உள்ளிட்ட பெருந்தேவர் களும் இம்மாயை மயக்கிற் சிக்குண்டு மொத்துண்டுழல்வர். அங்ஙனமாயின் அடியேன் எத்துணைச் சிறியேன். என்னை அருமையாகப் பெற்று வளர்த்த தாய் தந்தையர் எங்கே? காணோமே! யானும் ஒரு நாளில் மடியவேண்டியவனன்றோ ?

இவ்வுலகில் முடிமன்னராய்ப் படி முழுதும் அரசாண்ட எண்ணிலா மன்னர்கள் எங்கேயோ சென்று மறைந்தனரே! ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு ஊழிகாறும் தேவருள்ளிட்ட எல்லாரையும் அடிப்படுத்தி அரசாண்ட சூர

பன்மனும் ஒரு நொடியில் மாண்டு மடிந்தனனே ! இருவினை யிற் கட்டுப்பட்டுழலும் இவ்வுடலையும் நிலையுடையதென நம்பும் பித்தரும் உளரோ? சீச்சீ இப்பிறப்பும் மதிக்கத் தகுந்த ஒரு பிறப்பு ஆமோ? உற்று நோக்குகையில் ஒன்றும் நிலையுடைய தாகாது. தகர ஆகாயமாகிய அருட்பெரும் வெளியில் விளங்குபவனாகிய தற்பரன்றன் திருவடி நினைவால் அடையப்பெறும் சிவப்பேரின்பப் பெருவாழ்வே என்றும் பொன்ரு நிலைபேருயுள்ளது. இதனையடைவதற்கே முயற்சி செய்தல் வேண்டுமென்று பலவாருக எண்ணினன்.

எண்ணவே இருவினையொப்பு, மலபரிபாகம், திருவருள் வீழ்ச்சி வந்து எய்தின. எய்தவே மனமும் ஒரு வழிபட்டது. இதற்கென்செய்வது என நாடினன். வான்மீக முனிவர் அழியாநிலைமை பெற்ற தென்றமிழ் நாட்டிலுள்ள சீர் சிறப்புமிக்க திருவெற்றியூரையே பொன்ருப் புகலிடமாக நன்ருகக் கொள்வதெனத் தன் தூயவுள்ளத்தின்கண் வாய்மைபுற உறுதி கொண்டனன். தன் ஆட்சியினைத்தன் அருமை மகன்பால் ஒப்புவித்தனன். ஒப்புவித்து அவனுக்கும் அன்பகலாச் சுற்றத்திற்கும் வேண்டிய இன்ப நிறை அறிவுரைகளையும் நெறிமுறையாகக் கூறினன்; கூறித் தன் கருத்தையும் வெளியிட்டனன். வெளியிட்டு நிலவுலகம் வருவானுயினன். வரும் வழியில் நந்தனமலையில் நற்றவஞ் செய்து கொண்டிருந்த உபமன்னிய முனிவரைக் கண்டு நிலத்தே எட்டுறுப்பும் படும்படி வீழ்ந்தெழுந்து வணங்கினன். வணங்கித் தன்னுடைய எண்ணம் முழுதையும் விண்ணப்பித்துக் கொண்டனன். மேலும் தவஞ்செய்தற்கேதுவாகிய தன்மைகளை அருளிச்செய்ய வேண்டுமென வேண்டிக்கொண்டனன்.

உபமன்னிய முனிவர், வாசுகியை நோக்கி மன்னனே நீ கொண்ட எண்ணமும் உனது பற்றறுதியாகிய திண்மையும் வியக்கத்தக்கதே. ஆயினும் ஒருபயனை அடைய வேண்டின் அதற்குரிய பயிற்சி செய்தாலன்றி அடையமுடியாது. நீ மேற்கொண்ட நோன்பு கைகூடுதல் வேண்டுமாயின் நால்வகைத் தீக்கை பெறுதல் வேண்டும். தீக்கை இல்லாமல் யாரும் வீடுபேறு எய்துதல் முடியாது என்றனர். இதைக் கேட்ட வாசுகி மன்னன் உபமன்னிய முனிவர் திருவடியின் வணங்கி அடியே

னுக்கு அடிகளே சிவ தீக்கையினைச் செய்தருள வேண்டு மென்று வேண்டிக்கொண்டனன். முனிவரும் மனங்கசிந்து நால்வகைத் தீக்கையினையும் செய்வித்தருளினர். நால்வகைத் தீக்கை என்பது "சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம்" என்பன.

தீக்கை பெற்றுக்கொண்டபின் வாசுகி அம்முனிவர் கோமானுக்கு நெடுங்காலம் தொண்டு செய்து கொண்டிருந்த னன். பின் அவரிடம் பிரியா விடைபெற்றுத் திருவொற்றி யூரை வந்து சேர்ந்தனன். பிரமதீர்த்தமெனப்படும் நான்முக னால் ஆக்கப்பட்ட நற்குளத்தில் படிந்தனன். படிந்து படம்பக்க நாதரையும் வடிவம்மையாரையும் முறையுறத் தொழுதனன். நாடொறும்பூசித்துக்கொண்டிருந்தனன். அவ்வாறிருக்கையில் ஒருநாள் அனைத்துலகிற்கும் நீங்காப் புகலிடமாகிய சிவ பெருமான் வெளிவந்தருளினன். வந்து அன்பனே! இத் திருவூர்க்கு வடபக்கத்தில் தேவர்களெல்லாம் வண்டுகளா யிருந்து தேனையுண்டு கொண்டிருக்கிற பலாமரத்தடியில் எழுந்தருளியிருக்கும் நம்மைப் பொருவில் செந்தமிழாகமத்தாற் பூசித்து வருவதுடன், நாடொறும் இங்கும் வந்து வழிபட்டு வருவாயாக வென்று பணித்தருளினன்.

சிவபெருமான் அருளிய அத்திருவாணையின்படி வாசுகி மன்னன் திருப்பாலவனத்தினை யடைந்து திருமுறை வழியாகப் பூசைபுரிந்து வந்தனன். ஒவ்வொரு நாளும் திருவொற்றி யூருக்கும் வந்து வணங்கிக் கொண்டிருந்தனன். அங்ஙனம் முட்டின்றி நடந்துகொண்டு வருநாளில் எம்பெருமானாகிய செம்பொருட் சிவபெருமான் பலகை வடிவான சிவக்குறியி னின்றும் வெளிப் போந்தருளி அவ்வாசுகியென்னும் பாம்பினை எடுத்துத் தன் திருவடியில் வைத்து மறைந்தருளினன். இக் காலத்தும் அப்பாம்பு அங்கு வாழ்ந்து வருகின்றது.

"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
 தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
 உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறணியா ராகில்
 அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
 பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே."

உண்பதன்முன் : வண்டுகள் மலரிலுள்ள தேனையுண்ணுமுன்.

வாசுகிச் சருக்கம் முற்றும்.

சேடனும் மதியும் பூ வணக்கம் புரிந்த சருக்கம்

மனமடங்கப்பெற்ற மாந்தர்களே! திருவொற்றியூரில் வாசுகிமன்னன் வீடுபேறெய்திய வியத்தகு செய்தியைப் பாதாள உலகத்துறையும் ஆதிசேடன் கேள்வியுற்றனன். அளவிலா இன்பங்கொண்டனன். தன்னுடைய நந்தனவனத்திலுள்ள நறுமணமிக்க பலவகை மலர்களையுங் கொண்டுவந்து படம்பக்கநாதர் திருமுன்னிலும் வடிவம்மைத் தாயார் திருமுன்னிலும் 'போற்றி போற்றி' என்னும் பொருவில் தீந்தமிழ் மந்திரம் புகன்று அருச்சித்துப் பூசித்து வணக்கம் புரிந்து கொண்டு ஆடிப்பாடிப் பணிந்து பரவிக்கொண்டிருந்தனன். இத்தகைய பூவணக்கம் நாடொறும் நயமுற நடந்துகொண்டிருந்தது.

இதனைக் கேள்வியுற்றுக் குளிர்நிலாப் பரப்புந் திங்களும் நாடொறும் அங்ஙனமே இரவின்கண் திருவொற்றியூரையடைந்து, ஆதிசேடன் அருச்சித்த மலர்களைக் களைந்து தான் கொண்டுவந்த அரிய மணமுள்ள பூக்களைக்கொண்டு அருச்சனை செய்துகொண்டிருந்தனன். அடுத்தநாள் ஆதிசேடன் வழிபட வந்து பார்க்கும்போது தான் முன்னாள் அருச்சித்த மலர்கள் இல்லாமலிருக்கக் கண்டு மிகவும் மனம் வருந்தினன். வருந்தி இத்தகைய தகாத காரியத்தை மிக்க துணிவுடன் செய்பவன் யாவன்? நான் நாண்மலராகிய அன்றலர்ந்த நறுமணமிக்க பூக்களைக் கொண்டுவந்து அருச்சித்துப் பூசித்து வருகின்றேன். யாரோ ஒருவன் இரவில் பூத்த பழைய பூக்களால் பூசித்து வருகின்றனன். அத்தகைய பாவி எவனோ தெரியவில்லையே! அவனைக் கண்டு பிடிக்கலாமென்றாலோ பாதாள உலகம் போகாமல் இங்குத் தங்கவேண்டியதாகின்றது. அங்கு ஆட்சிமுறையில் நானில்லாவிட்டால் குடிகள் மிகுதியுங் கவலைப்படுவார்கள். அவர்கட்கும் மனநிறைவையும் அமைதியையும் உண்டாக்க வேண்டியது என் கடமையாகவுமிருக்கின்றது.

ஆயினும் இத்தீயோனைக் கண்டுபிடித்துத் தக்கவாறு ஒறுத்தல் வேண்டுமென முடிவுபண்ணி ஆங்கோர் பக்கத்தில் ஒளிந்து கொண்டிருந்தனன். அடுத்தநாள் திங்கள் வழக்கப். படி வந்து பூசிக்கத் தொடங்கினன். ஆதிசேடன் கண்டு அடா கள்வா! நீ இங்ஙனம் தகாத காரியம் செய்யலாமா? நான் அருச்சித்த பூக்களைக் களைய நீ யார்? நான் பூசித்து வருகையில் நீ எப்படிப் பூசிப்பாய்? பழைய பூக்களைக்கொண்டு பூசிக்கும்படியாக விதியுண்டா? அதனை நீ எங்குக் கற்றாய்? உன்னை இப்போதே கொன்றுவிடுவேன். நீ களங்கமுடைய வன்; குருபத்தினியைக் கெடுத்தவன்; உனக்கு நல்லறிவேது? ஒரு சிறிதும் இல்லையென்றனன்.

திங்கள் ஆதிசேடனைப் பார்த்து ஆதிசேடனே! நீ என்ன சிறிதும் எண்ணிப்பாராது பேசுகின்றாய். யார் பூசித்தா லென்ன? அன்பே காரணமன்றோ? நம் பேரருட் பெருங் கடலாகிய கண்ணுதற் பெருமான் ஒருவருக்குப்பின் ஒருவ ராகத் திருவருள் புரிவரோ? அப்பெருமான் ஓரிடத்திருக்கும் ஒருபுடை (ஏகதேசி) யரோ? அவர் "அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்" எழுந்தருளியிருக்கும் நிறைவினரல் லரோ? ஒரே நேரத்தில் எண்ணிறந்த கோடி ஆருயிர்கட்குத் தண்ணளி புரியும் புண்ணியரன்றோ? அவர் உனக்குமட்டுந் தான்உரிமை உடையவரோ? மற்றையாருக்கும் உரிமைமெய்ப் பொருள் ஆகாரோ? அன்றி எனக்குமட்டுந்தான் உரியரோ? அவர்நம் யாவர்க்குந் தந்தையரல்லரோ? நாம் அவர்க்கு அடி மைத் தன்மை நீங்கா அன்புநிறை மக்களல்லமோ? அவர் நம் பால் விரும்புவது அன்பேயன்றி வேறில்லையே? அன்பொடு பூசிப்பவர் யாவருக்கும் பேரருள் புரியும் பெருமானன்றோ?

இதைக்கேட்ட ஆதிசேடன் திங்களே! நீ கற்ற கல்வி யெல்லாம் என்னிடத்துப் பேசுகின்றாயா? நீ மிக்க திறலோ னென்று எனக்குத் தெரியும். உன்வாயை அடக்கு. உன்னைச் சிறிதும் விடமாட்டேன். உன்னை இப்போதே என்னுடைய நச்சழலால் கொன்றுவிடுகின்றேன் பார் என்று எழுந்தனன். திங்களும் இதனைக்கண்டு என்ன இவன் மிகவும் முரடனாகி யிருக்கின்றான். நாம் எவ்வளவு இனிமையாக மொழிந்தும் ஒரு சிறிதுங் கேட்கின்றானில்லை. இவனை எங்ஙனமாயினும் அவன்

கொண்டுள்ள செருக்கினை யடக்குவதே நமக்குத் தகுதியென்று தானும் மிகுந்த சின வேகத்துடன் எழுந்தனன்.

இருவருக்கும் மிகுந்த போர் விளையத் தொடங்கிற்று. ஒருவரை யொருவர் சீறி நெருங்குகையில் "யாவருக்கும் மேலாம் அளவிலாச் சீருடைய" படம்பக்கநாதர் இருவருக்கும் நடுவில் தீவண்ணத் திருவுருவினராய் எழுந்து சுடர்விட்டெரிய இருவருங் கண்டு நனிமிக நடுங்கிப் போர் செய்வதைத் தம்மையறியாமலே நிறுத்திவிட்டனர். அளவிலா இன்பங் கொண்டு கூத்தாடினர். இன்பக் கண்ணீர் உகுத்தனர். பொருள்சேர் புகழ் மொழிகளை விடாது புகன்றனர். புகன்று நகைமுகத்தராய்ப் பகைமை யொழிந்து பணிவன்புடன் திரு முக நோக்கி நின்றனர்.

சிவபெருமான் தண்ணளியுடன் இருவரையும் பார்த்தருளினர். நீங்கள் இருவரும் என்பால் வைத்த பொருவருபத்தியின் உறுதிப்பாட்டை யுணர்ந்தோம். ஆதலால் நீங்கள் எண்ணிய படி என்றும் பொன்ரு இயல்பினை (நித்தியத்துவத்தை) உங்கட்கு அருளிச் செய்தோம். பெற்றுக்கொள்ளக் கடவீர்க ளென்று மட்டிலா வரம் நல்கி மறைந்தருளினன். உடனே இருவரும் சிவபெருமான் திருவடியினைப் பத்தியின் பாலராய்ப் பணிந்து தொழுதனர். ஒருவரோடொருவர் கட்டித் தழுவி அளவளாவித் தங்கள் பதிகளிற் போய்ச் சேர்ந்தனர்.

இவ்வரலாற்றைப் பெரிதொத்துக் காணப்படும் பழைய விழைதகு வரலாறென்றை வருந் திருமாமறையானுணர்க:

> " புத்தியினற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
> பொதுப்பந்தர் அதுஇழைத்துச் சருகால் மேய்ந்த
> சித்தியினல் அரசாண்டு சிறப்புச் செய்யச்
> சிவகணத்துப் புகப்பெய்தார் திறலான் மிக்க
> வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
> விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
> பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
> பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே."

இவ்வரலாற்றின் சுருக்கம் வருமாறு :

திருவானைக்காவின்கண் வெண்ணுவலடியில் வீற்றிருந்தருளும் சிவக்கொழுந்தினை ஓர் வெள்ளானை பண்டைச் செய்த மிக்க தவத்தால் ''கைப்பூம் புனலும் முகந்தாட்டிக் கமழ் பூங்கொத்தும் அணிந்திறைஞ்சி, மைப்பூங் குவளைக் களத்தாரை நாளும் வழி பட்டொழுகிற்று''.

இதுபோல் "ஞானமுடைய ஒரு சிலந்தி நம்பர் செம்பொன் திருமுடிமேல், கானல் விரவுஞ் சருகு உதிராவண்ணம் கலந்த வாய் நூலால், மேனூற்றிரு மேற் கட்டி என விரிந்து செறியப் புரிந்துளது.''

மறுநாள் இதனைக் கண்ட வெள்ளானை வாயினூற் பந்தர் குற்றமுடையதென்று கருதி அழித்துவிட்டது. இதனைக் கண்ட சிலந்தி யானையின் கை நீண்டதாதலின் இயல்பாகப் பட்டு அழிந்திருக்குமென்று பொறுத்துக் கொண்டு மறுநாள் மீண்டும் பந்தர் இழைத்தது. அதனையும் யானை முன் போலவே அழித்தது. சிலந்தி சினங்கொண்டு யானையின் துதிக்கையினிற் புகுந்து கடித்தது. யானை கடி பொறுக்க மாட்டாது கையை நிலத்தில் மோதி அடித்தது. இரண்டும் ஒருங்கு மாய்ந்தன. சிவபெருமான் வெள்ளானைக்கு வீடு கொடுத்தருளினன். சிலந்தியைச் சோழர் குலத்தில் கோச் செங்கட் சோழராய்ப் பிறப்பித்தருளினன். கோச்செங்கட் சோழரும் பண்டை நினைவுடன்றோன்றினமையால் எண் டோள் முக்கண் எம்மானுக்கு யானை புகா மாடத்திருக்கோவிலாக எண்பதின் மேலும் எடுப்பித் தருளினன்.

யானையும் சிலந்தியும் முன்னைப் பிறப்பில் மக்களின் மிக்காராயத் தோன்றி நன்னெறி நான்மை நற்றவம் புரிந்த நவலுயிராகும். அவ் விரண்டும் முறையே அறிவின் நோன்பும் அறிவின் சீலமும் புரிந்த உணர்வு நிலைமைய. அப் பேற்றினால் கிடைத்த பேறும் இருவகையவாயின. சிற்றுயிர்கள் சிவனை வழிபடக் காணின் அவை பண்டைப் பிறப்பினின் மக்களிற் பிறந்த மாண்புடைய உயிர்கள் என்று தெளிக.

சேடனும் மதியும் பூ வணக்கம் புரிந்த சருக்கம் முற்றும்.

தருச் சருக்கம்

திருவடியுணர்வு கைவரப் பெற்ற நற்றவத்தோர்களே! ஒரு காலத்தில் தேவர்கள்உலகத்தில் உள்ள ஐந்து தருக்களும் எண்ணத் துவங்கின. என்னவெனில் பொன்னுலகத்தில் நம் தலைவனுகிய புரந்தரனின் பெருஞ் செல்வ வாழ்வினைக் கண்ட ஆசுரர்கள் அடுத்தடுத்து வந்து பெரும் போர் செய்து வென்று நம்மையும் அலைக்கின்றனர். அன்றியும் முனிவர்கள் சபிக்கின்றனர். இவ்வல்லற்பட்டு வருந்துவதைப் பார்க்கிலும் இவ்வுலகத்தினின்றும் நீங்கி விடுவதே தலையாயதாகும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தன.

அவ் வேளையில் அந்த உலகத்திற்கு வந்த சிவனடியார்கள் திருவொற்றியூர்ப் பெருமையினை எடுத்து இயம்பினர். அதனைக் கேள்வியுற்ற ஐந்தருக்களும் திருவொற்றியூர் வந்து திருக்கோவிலில் பல காலஞ் செய்தவம் மேற்கொண்டிருந்தன. ஒருநாள் பச்சிளங்கிள்ளையாகிய பார்வதியாகும் வடிவம்மையுடன் மான்மழுவும் நாற்றோளும் கறைமிடறும், முக்கண்ணும் உடையவராய்ப் படம்பக்கநாதர் அத்தருக்களின் அருகில் எழுந்தருளினர். ஐந்தருக்களே! யாது காரணத்தால் தவஞ் செய்கிறீர்கள் என்று வினவியருளினர்.

உடனே ஐந்து தருக்களும் பணிந்தெழுந்து அடியேங்களை ஆட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளியுள்ள இயல்பாகவே பாசங்களினீங்கிய இறைவனே! எங்கள் வேண்டுகோளை நிறைவு செய்தருளுதல் வேண்டும். நாங்கள் எப்போதும் (நித்தியமாய்) அடிகளின் திருமேனியைத் தொட்டுப் பூசித்துக் கொண்டிருக்கும்படியான பெரும் பாக்கியத்தை அளித்தருள வேண்டுமென விண்ணப்பித்தன. கடவுள் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்புச் சிரித்துத் தெய்வத்தருக்களே! நீங்கள் கொண்ட நினைவு மிசவும் பாராட்டத்தக்கது. ஆயினும் நாம் மொழிவதைக் கேட்பீர்களாக. நாம் இத்திருவூரில் தீண்டாத் திருமேனியாய்த் தான்தோன்றியாய் எழுந்தருளியிருக்கின்றோம். நம்மை ஒருவரும் தீண்டப் படாது.

எம்மைத் தொட்டுப் பூசிக்க வேண்டுமென்னும் மிகுந்த ஆவல் கொண்டுவந்த நம் இளைய பிள்ளையாராகிய மாசிலா மணி (சுப்பிரமணியன்), உருத்திரர் பதினொருவர், கன்னியர் எழுவர், ஆதித்தர் பன்னிருவர், ஆதிசண்டர், கபாலமுனி, வாலி, நிலவோன் (சந்திரன்) மறை, மால், முதலியோர்களையும் திருமயிலைக்குச் செல்லும்படிச் செய்து அவ்விடத்துக் "காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்ச் சேணுரும் தழற் பிழம்பாய்த் தோன்றும் சிவக்கொழுந்தினைத் தீண்டிப் பூசிக் கும்படிச் செய்து அவர்கட்கெல்லாம் வேண்டிய வரங்களைக் கொடுத்தருளியுள்ளோம்.

ஆகையால் உங்கள் தவம் வீணாகாதபடியும் உங்கள் ஆர்வமிக்க உண்மையான உள்ளார்ந்த எண்ணம் நிறை வேறும்படியும் நீங்கள் இவ்விடத்தில் மகிழ மரமாகத் தங்கி இருங்கள். அங்ஙனமிருந்தால் உங்கள் நிழலிலே யாம் நீங்காது பொங்கு மகிழ்வுடன் நீங்காது தங்கி இருப்போம் என்றருளி னர். உடனே ஐந்து தருக்களும் வணங்கிப் பெருமானே, இத் திருக்கோலத்தோடு அடியேங்கட்குக் காட்சி தந்தருள நறுமணமிக்க இளந்தென்றலுடன் எழுந்தருளுதல் வேண்டும். அப்பொழுது யாவர் வந்து உள்ளன்புடன் கண்டு கும்பிடினும் அவர்கட்கெல்லாம் இம்மையில் "பொருளு ஞானமும் போகமும்" குறை வற அருளி அம்மையில் செம்மையாம் உம் திருவடிப் பேரின்பமாகிய வீடு பேற்றினை அளித்தருளுதல் வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டன.

சிவபெருமானும் அங்ஙனமே ஆகக் கடவதெனத் திரு வருள் புரிந்து மறைந்தருளினன். அவ்வைந்து தருக்களும் மகிழ மரமாகித் திருவைந்தெழுத்தினைச் சிறப்புடன் ஓதிக் கொண்டு இன்றும் இருக்கின்றன. இம் மகிழ மரத்தினையே சிவமென மகிழ்வுடன் மதித்துப் பணிவன்புடன் எவர்வணங்கு கின்றார்களோ அவர்களே தேவரின் மிக்க சிவவுலகச் செல்வர் களாவர். அம் மரத்தின் மீது ஏறுகின்றவர்கள் கொடிய நிரயத்தினையடைவர். அம் மரங்களினின்றுந் தானே வீழ்ந்த இலைகளையும், பூக்களையும் கண்களில் ஒற்றிக்கொண்டு தலை யில் அணிபவர் முன்னுள்ள பாவங்களெல்லாம் நீங்கப் பெறு வர். இம்மையில் வறுமை நீங்கி எல்லாச் செல்வங்களும்

பெற்று இன்புற்று வாழ்வர். அம்மையில் சிவபத மடைந்து பேரின்பப் பெரு வாழ்வுற்றுத் துய்த்து மகிழ்வர்.

ஐந்தருக்கள் : 1. சந்தானம் 2. தேவதாரு 3. கற்பகம் 4. மந்தாரம் 5. பாரிசாதம்.

தருச்சருக்கம் முற்றும்

மந்தாரம் பாரிசாத மைந்தரு வருக்கம்". பிங்கலந்தை,

தருச்சருக்கம் முற்றும்

அகத்தியர்க்கு மணவாளக் காட்சிச் சருக்கம்

சிவயோகம் கைவந்த அகத்தவத்தோர்களே! முற்காலத்தில் மலையரையன் மகளாகிய பார்வதியம்மையாரைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு விழுமிய முழு முதல் வனுகிய சிவபெருமான் திருவெள்ளி மலையாய திருக்கைலாயத்தினை நீங்கிப் பனிமலைக்கு எழுந்தருளினர். அவர் உலகுய்ய அங்குச் செய்து கொண்டருளும் திருமணத் திருக்கோலச் சிறப்பினைக் கண்டு களிகூர்ந்து பெருவாழ்வு எய்து தற்பொருட்டு விண்ணுலகத்திலுள்ளவர்களும், மண்ணுலகத்திலுள்ளவர்களும், பாதாளவுலகத்திலுள்ளவர்களும் ஆகிய எல்லோரும் ஒருங்கு கூடிப் பனிமலையாகிய இமையமலைக்கு வந்து சேர்ந்தனர். இவ்வனைவர்களும் அம்மலை மீதமர்ந்ததும் அம்மலை பாரந்தாங்காது சமமாக நிற்க இயலாமல் வட திசை தாழ்ந்து தென் திசை உயர்ந்து சீர் நில்லாதாயிற்று. இதனைக் கண்ணுற்ற தேவர்கள் மிகவும் நடுநடுங்கிச் சிவ பெருமான் திருமுன் சென்று தொழுது உண்மையை விண்ணப்பித்துக் கொண்டனர். சிவபெருமான் அத் தேவர்கள் மீது அளவில்லாத தண்ணளி புரிந்து சிவபத்த முடிமணியாகிய அகத்திய முனிவரை நோக்கியருளினர். அவரும் வந்து திருவடிவணங்கிக் கைகட்டி வாய் புதைத்துத் தலை குனிந்து நின்றனர். மெய்யன்பு நீங்காச் சைவனே! நீ உடனே தென்றிசை நோக்கி நடந்து பொதியை மலைக்குச் சென்று அங்கு அமர்ந்திருப்பாயாக என்றருளினன்.

என்னை இடையருது உள்ளும் (தியானம்) நிலையும் பெரும்பற்றும் ஒருங்கமைந்த நீ என்னை யொப்பாய். அதனுல் நீ தென்பாற் பொதியிலில் போய் அமரின் இந் நிலவுலகம் சமமாக நிற்கும் எனவும் அருளினன். உடனே அகத்திய முனிவர் சிவபெருமானை நோக்கிப் பெருமானே! அடிகளின்

திருமணத் திருக்காட்சியினைக் கண்டு கும்பிட்டுக் களிப்புறு மாறு எண்ணில் கோடி உயிரினங்கள் இவ்விடத்தில் எங்குந் துளிகூட இடமின்றிச் சூழ்ந்திருக்கின்றனர். பாவியாகிய அடியேன் மட்டும் அத்திருக் காட்சியினைக் காணும் பேறில் லாது அகன்று செல்லுதல் வேண்டும். அடியேன் அடிகளை யகன்று எங்ஙனம் உய்வேன். வேறு எந்தக் காலத்தில் நின் திருமணக் காட்சியினைக் கண்டுகளிப்பேன் எனக் கண்ணீரும் கம்பலையுமாக நின்று மனம் நைந்து விண்ணப்பித்துக் கொண்டனன்.

அதனைத் திருச்செவி சாய்த்த சிவபெருமான் முனிவனே! உலக நன்மையின் பொருட்டும் ஆருயிர்கட்கு உதவும் அரிய உதவியின் பொருட்டும் இக் காரியத்தினை நீ நிறைவேற்றக் கட வாய் என்றருளினர். மேலும் நம்முடைய திருமணத் திருக் கோலக் காட்சியினைத் தேசமெல்லாம் புகழும் தென்றிசைக் கண் சிறந்த திருவூர்களுள்ளும் மிகவும் சிறந்த ஒரு திருவூரில் நீ கண்டுகளிக்குமாறு யாம் காட்டியருளுவோம் எனத் திரு வாய் மலர்ந்தருளினர். அத் திருவருளைக் கேட்கும் பேறு பெற்ற அகத்திய முனிவர், அளவிலாப் பேரின்பங்கொண்டு பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டனர். இடையிடையே காணப்பெறும் புண்ணியத் திருவூர்கள் யாவற்றையும் கண்டு கும்பிட்டுக் கொண்டு தென்றிசை நோக்கி நடந்தனர். தென்றமிழ்ப் பொதிய மலையைச் சென்றெய்தினர். அங்கண் அமர்ந்திருந்து அருந்தமிழ் பேணி வந்தனர்.

தமிழ்ப் பொதிய மலையில் நெடுநாளாக உறைந்து வருங் காலத்து ஒருநாள் அகத்திய முனிவர் தமக்குள்ளேயே நினை வாராயினர். அஃதாவது, இதுகாறும் நம்மை ஆண்டருளும் அம்மையப்பனும் சிவ்பெருமானுக்குத் திருமணம் பெருஞ்சிறப் புடன் நிறைவுற்றிருக்கும், உலகன்னையாகிய பார்வதி அம்மை யாருடன் சிவபெருமான் திருவெள்ளி மலையாகிய திருக்கைலை மலைக்கு எழுந்தருளியிருப்பன். அடியேனுக்குத் திருமணத் திருக்கோலக் காட்சியினைத் திருவூர் ஒன்றில் தந்தருள்வதாகத் திருவருள் புரிந்தருளினன். அத்திருவருட் கட்டளை எப் போது நிறைவேற்றியருள்வன். அறிகின்றிலேனே! எந்தத்

திருவூரில் கிடைத்தருளுமோ அதுவும் ஓர்கிலேனே என்று பல வாறு எண்ணமிட்டு வருந்தினர்.

மேலும் அத்திருக் காட்சி திரு ஆலவாயின் கண்ணோ, திருவாரூரிலோ, திருவண்ணமலையிலோ, திருத்தில்லையிலோ, திருக்காஞ்சியிலோ, திருமுதுகுன்றத்திலோ, எனப் பலவாறு எண்ணிக்கொண்டு சிவனிட்டை கூடியிருந்தனர். அங்ஙன மிருக்கையில் சிவபெருமான் அகத்திய முனிவனே! அஞ்சற்க, யாம் மிகுந்த அன்புடன் எழுந்தருளி வீற்றிருக்குந் திருவூர் திருவொற்றியூராகும். நீ அத்திருவூருக்கு வரக்கடவாய், உன்னுடைய காதல் மிக்க விழைவினை நிறைவேற்றி வைக் கின்றோமென வானிழல் மொழியாகத் திருவருள் புரிந்தனன்.

அதனைக் கேட்ட அளவானே அகத்திய முனிவர் கரை கடந்த பேரின்பமுற்று ஆடிப் பாடி அகமகிழ்ந்தனர். ஐயனே! அடிகளின் திருவருள் அடியேன்பால் இருந்தவாறு மிகவும் நன்று, நன்று என நாடிக்கொண்டு உடனே புறப்பட்டுக் காற்றினும் கடிதாய், மனத்தினும் விரைவாய் நடந்து திரு வருட்டுணையால் திருவொற்றியூரினை வந்தடைந்தனர். திரு வைந்தெழுத்தினை யோதிக்கொண்டு பிரம தீர்த்தத்தில் தீர்த்த மாடினர். திருமுறைச் சிவ தீக்கைப்படி திருவெண்ணீற ணிந்து நாட்கடன் முடித்துக் கொண்டனர். செந்தமிழாகம முறைப்படி சிவபூசையினை முடித்துக் கொண்டனர். வடிவுடை யம்மையுடன் படம்பக்கநாதரையும் எட்டுறுப்பும் நிலத்தே படும்படி வீழ்ந்தெழுந்து வணங்கிச் செந்தமிழ்த் திருமறைப் பாடல்களைப் பாடிப் போற்றிப் புகழ்ந்தனர்.

நாடொறும் திருவொற்றியூர் மாடவீதியைக் காலையிலும் மாலையிலும் 'சிவ சிவ' என்னும் செந்தமிழ்த் திருமாமறை யினை ஓதிக்கொண்டு வலம் வந்தனர். வரும்பொழுதெல்லாம் எப்பொழுது கண்ணுதற் பெருங்கடவுள் கருணை செய்யுமோ என்னும் ஏசறவுடன் சிவ உள்குதல் (சிவத்தியானம்) செய்து கொண்டிருந்தனர். அங்ஙனமிருக்கையில் ஒருநாள் அத்திருக் கோவிலில் பல வாத்தியங்கள் முழங்க, கற்பகப் பூமழை பொழிய, மறைகள் போற்ற, வானர மகளிர் ஆட, பார்வதி தேவியாருடன் மாமணி அணைமேல் வீற்றிருக்க, நான்முகன்

மேன்மைபெரும் தழலோம்பலாகிய தண்டமிழ்ச் சடங்கினை யியற்ற, மாலை யொத்த மலையரையன் அம்மைதிருக்கையினை அப்பன் திருக்கைமேல் வைத்து மேனகையுந் தானுமாய்ப் பூம்புனலொழுக்கி மறை மொழிந்து கொடுக்க, சிவபெருமான் கையேற்றுக் கடைக் கணித்தருளும் திருமணக் கோலத்திருக் காட்சியினைக் காட்டியருளினன்.

அகத்தியமுனிவர் கண்டு கும்பிட்டுத் தம் இரு கண்களா லும் பேரின்பப் பெருவெள்ளம் பெருக, உள்ளம் உருக, உடம் பெங்கணும் மயிர்க்கூர்ச்செறிய, பொருள்சேர் புகழ்ப்பா வோதி, வலந்தரும் பெரும்பேற்றினை வரையாது வழங்கவல்ல வலஞ்சுற்றி வந்து திருவடி வணங்கிப் பேரின்பவெள்ளப் பெருக்கு மேலீட்டினல் கூத்தாடி ஒப்பரிய அப்பனே! ஓதரிய ஐயனே! வைப்பனைய வேந்தனே! அடியேனை ஆட்கொண்டரு ளும் முடிவிலா அண்ணலே! வணக்கம்; வணக்கம்; பன் முறை வணக்கம் என்று பரவித் தொழுதனன்.

அடியேன் பொருட்டு இவ்வுலகத்தார் அனைவரும் கண்டு கும்பிட்டுக் களிகூர்ந்து கடைத்தேறும் வண்ணம் திருமணத் திருக்கோலத் திருக்காட்சியுடன் எழுந்தருளிக் காட்டுவித்த கண்ணுதற் கடவுளே! இத் திருவூரின் கண்ணே எந் நாளும் இத்திருக் கோலத்துடன் மணவழகராகிய கலியாண சுந்தரர் என்னும் கவின்பெரும் அருமைத் திருப்பெயருடன் எழுந்தருளி யிருத்தல் வேண்டும். தேவ தேவன் மாதேவனுகிய நின்னை யார் மெய்யன்புடன் வந்து கண்டு கும்பிடுகின்றுர்களோ அவர்கட்கெல்லாம் இத்திருக் கோலக்காட்சிப் பயனுல் திரு மணம் வல்விரைவில் சொல்லரிய சிறப்புக்களுடன் நல்வாழ்வு பெற நிறைவுற வேண்டும் எனவரமருள வேண்டிக் கொண்ட னன். சிவபெருமானும் மெய்யன்பர்கள் எக்கோலத் தெவ் வுருவில் எம்மைக்கண்டு கும்பிட்டு எவ்வரம் வேண்டுகின்ற னரோ அவர்கட்கு அக் கோலத் தவ்வுருவில் அவ்வரம் நல்கி யருள்வது நம் திருவருண் முறையாகும் என்றருளிச் செய்து நீ விரும்பியவாறே ஆகக் கடவதெனத் திருவருள் புரிந்தனன் மணவழகராம் வள்ளற் பெருமான். பின்மறைந்தருளினர்.

உலகத்தில் பெற்றோர், ஆசிரியர், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் திருவருளால் தம்பாற் சார்ந்து தமக்

குரியராய்த் தம்மாற் பேணப்படுபவராய் வாழும் அனைவரையும் அறிவு, ஒழுக்கம், அன்பு, ஆக்கம், ஊக்கம், ஆண்மை, ஆட்சி, ஆண்டவன் வழிபாடு, அடியாரிணக்கம், அனைத்துயிரும் ஓம்பல் முதலிய அறமுறைகளிற் பயிற்றுவித்துப் பண்புடையவராக்கும் நற்கடப்பாட்டினராவர். இக கடப்பாடு அவர்கட்கு நாளும் நிகழவேண்டிய நம்பன் வழிபாட்டுக் கடப்பாடாகும். பெற்றோர்கள் பிள்ளைகட்கு ஐம்புல அறிவுகளையும் செம்மையுறப் பயிற்றுவிக்கின்றனர். எடுத்துக் காட்டாகத் தாம் சொல்லியே சொல்லுவிக்கின்றனர். ஆசிரியர்கள் கற்பிக்குங்கால் கற்குமுறையினைத் தாம் கற்போர் போல் இருந்து காட்டுவிக்கின்றனர். ஆன்றோர் வையத்து வாழ்வாங்கு வாழவேண்டி வழிபாடு முதலனைத்தையும் வகுத்துக்காட்டித் தாம் நடந்துகாட்டி நடப்பிக்கின்றனர் நடப்பிக்கின்றோன் தான் நடியாமல் எவரையும் நடிப்பிக்க முடியாமை மேலதற்கொப்பாகும்.

அம்முறையில் அனைவராலும், அனைத்துயிர்களாலும் அனைத்துத் தேவர்களாலும் சாரப்படுதற்குரிய விழுமிய தனிப் பெரு முழுமுதற் சிவபெருமானும் நள்ளிருளிலும் ஐம்பெருந் திருத்தொழில் நட்டம் புரிந்தருள்கின்றனன். அதுவே ஆருயிர்களைப் பயிற்றுவிக்கும் சீரிய பயிற்சி நாடகமாகும். அப் பெருமான் செயவன அனைத்தும் திருவருளால் திருவுள்ளத் திருக்குறிப்பாகிய கண்ணுதலினுல் ஆவன கண்ணுதல்—கருதுதல்; சங்கற்பித்தல். அவன் உயிர்க்குயிராய் அகத்தே உணர்வின் கண் நின்று எண்ணி நிகழ்த்தும் அருளிப் பாடனைத்தும் அவன்றன் ஒப்பரிய நீக்கமில் அறிவாற்றலாம் திருவருளால் புறத்து நாடகமாகக் காட்டி யருளப்படும். அந்நாடகக் காட்சித் திருவருள்களில் தலைசிறந்தது திருமணத் திருக்கோலத் திருக்காட்சியாகும்.

காட்சி வகைகளைத் தவம், பூசை, திருமணம், போர். அறமுறை என ஐவகையாகத் தொகுக்கலாம். இவ்வைந்தும் 'சிவயசிவ' என்னும் செந்தமிழ் ஐந்தெழுத்தின் திருக்குறிப்பாகும். தவம் கல்லால நீழலில் நல்லார் நால்வர்க்குச் சொல்லாமற் சொல்லி உணர்த்திய திருக்கூத்தாகும். நால்வரென்பது நாற்பகுதியினரென்பதாகும். வாழ்க்கை நூலாகிய மறைவழி

163974

நோக்கின் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பகுதியாகும். வழிபாட்டு நூலாகிய முறை வழி நோக்கின் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நாற்பாலாகும். முறை என்பது சீரிய செந்தமிழாகமம். சீலம்-சரியை. நோன்பு-கிரியை. செறிவு-யோகம். அறிவு-ஞானம், கற்பித்தலும், கற்றலும், கடைப்பிடித் தொழுகலும் கண்ணுதற் கழலிணையைக் கண்டுகொள் எனக் காட்டும் நற்றவமாகும்.

பூசை, அதற்குரிய மாதவஞ் செய் தென்றிசைப்பகுதியில் திருக்காஞ்சித் திருநகரில் உலகீன்ற அன்னை காமக் கண்ணியார் ஒரு மாமரத்தடியில் பெருமான் வழிபாடாகும். திருமணம், திருவொற்றியூரில் திருக்காட்சி நல்கி யருளிய இத் திருமணமாகும். போர், அறுமுகப் பெருமானை யீன்று சூரன் பொருமுரண் தொலைத்துத் தேவர்க்கு அருண்முறை நிறுத்தியதாகும். அறமுறை, நாவலூர் நம்பி ஆரூரரை ஆவலுடன் எழுந்தருளி வந்து ஆவணங் காட்டித் திருவெண்ணெய் நல்லூரில் வல் வழக்கிட்டு ஆட்கொண்டமையும் அவர்தம் பிறவரலாறுகளுமாகும்.

திருமணத் திருக்கோலத் திருநடிப்புத் திருக்குறிப்பினை வரும் செந்தமிழ்த் திருமாமறைமுடிபாம் திருவாசகச் செழுந்தேன் திருப்பாடல்களால் உணர்க. திருமுறைகளெட்டும் முறையே சிவபெருமானின் எட்டுவான்குணத்தின் எழின் முறையாகும். எனவே திருவாசகம் அம்முறையில் வரம்பிலின்பத் திருக்குறிப்பாகும். திருச்சிற்றம்பலத் திருக்கோவையார் அவ்வின்பபேற்றினை ஆருயிர்களை மீளா அடிமையாகக் கொண்டருளிய அவ்வாண்டவன் அவ்வுயிர்கள் துய்த்துப் பேரின்பு கொள்ளுமாறு ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று காட்டிக் காணும் கண்ணுதலாகும். "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே'என்பது செந்தமிழ்த் திருமாமறைத் திருப்பாட்டாகும். திருப்பாட்டெனினும் திருமந்திரம் எனினும் ஒன்றே.

திருவாசகச் செந்தேன்பா வருமாறு:

"மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெலாங் கலங்கிடுங்காண் சாழலோ."

—அ. திருச்சாழல்

O25:138.211.T
N64

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு."—திருக்குறள்,

இச் செந்தமிழ்ப் பொதுமறைக் கேற்ப ஆணும் பெண்ணு மாய்த் திருமணமுறையால் நண்பெய்தி இன்புற்று நல்வாழ்வு பெற்று நாடாச் சிறப்பாகிய சிவபெருமானுக்கு மீளா அடிமை யாய்ப் பிறப்பற வையத்து வாழ்வாங்கு வாழ்வதே திருமண முறையின் இன்றியமையாச் சிறப்பாகும். அதற்கு இருவரும் ஒருவர்பால் ஒருவர் உகப்புறுதல் வேண்டும். அதனைச் சிவபெருமான் அகவுணர்விற் கண்ணுதலாற் காட்டியருளுதல் வேண்டும். அவ்வுண்மைவரும் செந்தமிழ்த் திருமாமறை முடிபானுணரலாம் :

"தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் இயோகெய்தி வீடுவர்காண் சாழலோ."
—அ. திருச்சாழல்

மேலும் வரும் தனித்தமிழாகமத் திருப்பாட்டானு முணர்க :

"கண்ணுதல்யோகி ருப்பக் காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்பம் அளித்த
தோரார்."—சிவஞானசித்தியார்

மேற்கூறிப் போந்த ஐந்திணையும் நினைவுகூருமாறு ஒருவெண் பாவிற்றருகின்றும் :

வையத் தகம்புற வாழ்வுசிவன் கண்ணுதலால்
எய்துமியல் நாடகத்தால் எய்துவிப்பன்—செய்தவமும்
பூசையும் போற்று திருமணமும் போர்முறையும்
நேசவருள் வாயிலா நின்று.

கண்ணுதல்—கருதுதல்; திருவுள்ளக்குறிப்பு; சங்கற்பம்.

அகத்தியருக்கு மணவாளக் காட்சிச் சருக்கம் முற்றும்

தொண்டைமான் திருப்பணிச் சருக்கம்

உயிரருளுடைய உயர்தவ முனிவர்களே! கீழுலகத்தி லிருந்து ஆதிசேடன் அருமையாக ஈன்ற மகன் காஞ்சிமா

நகரத்திலிருந்து அறமுறை தவருது செங்கோலோச்சி அரசாண்டு வந்தான். அவன் பெயர் தொண்டைமான் என்பதாகும். தன்னுடைய நாட்டிலிருந்த குறும்பர்களை யெல்லாம் அடக்கி யொடுக்கினன். வடகீழ் திசையிலிருந்த வாணன் ஓணன் என்னும் இரண்டு குறுநில மன்னரை எதிர்த்துப் போர் செய்து அவர்கள் படைகளைச் சிதறவடித்துப் புறமுதுகிட்டு ஓடச்செய்தனன். அவ்விருவரும் தோற்ருேடித் தங்கள் தங்கள் கோட்டைகளுக்குட் போய் நுழைந்து பதுங்கினர்.

கோட்டையிலுள்ள வைரவமூர்த்தியாகிய காவற் கடவுளை உள்குதலாகிய தியானத்திலிருந்தனர். அவர் அருளால் ஒரு பூதத்தை உண்டாக்கிப் போருக்குப் போகச் செய்தனன். அப்பூதம் தொண்டைமானை எதிர்த்து அவன் சேனையுள் முன்னின்ற சேனை முழுவதையும் வாரியுண்டது. இதனைக்கண்டு எஞ்சிய சேனைகள் ஓடியொளித்தன. அரசன் கண்டு அஞ்சி ஒன்றுந் தோன்ருது திருவேங்கட மலையினைப் போய்ச் சேர்ந்தனன். அவ்விடத்திலுள்ள திருமாலை மனத்திலே வைத்து எட்டெழுத்தினை எண்ணி ஐம்பொறிகளை அடக்கி வாய்வாளாது தவஞ் செய்து கொண்டிருந்தான். வாய்வாளாது என்பது வாய்பேசாது, மௌனமாய், ஊமையாய் என்று பொருள்படும்.

திருமாலானவர் அருள்கூர்ந்து கருட ஊர்திமின்மேல் எதிர்வந்து அரசனே! உன்னுடைய தவத்தினுக்கு மகிழ்ந்தோம். நினக்கு வேண்டிய வரம் யாது? என வினவினர். அரசன் எழுந்து பணிந்து, ஐயனே! யான் வாணன், ஓணன் என்னும் இரண்டு குறும்பர்களை எதிர்த்தபோது அவர்கட்குத் துணையாக ஒரு பூதம் வெளிவந்து என் சேனை முழுவதையும் விழுங்கிவிட்டது. யான் தன்னந்தனியனுயினன். நான் பழையபடி போர் செய்து பூதமுடன் அவ்விருவரையும் வெல்லும்பொருட்டுத் தேவரீர் சக்கரப் படையினைத் தந்தருள வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டனன். திருமாலும் அவன் விரும்பியவாறு சக்கரப் படையினைக் கொடுத்து மறைந்தருளினர்.

அரசன் அச் சக்கரப் படையினைப் பெற்று மீண்டும் போய் அவ்விருவரையும் எதிர்த்துப் போர் புரிந்தனன். அப்பொழுது

அப்பூதம் பழையபடியே வந்து அரசனுடன் எதிர்த்தது. அரசன் சக்கரப்படையினை ஏவினன். பூதங் கண்டு அதனைத் தன் கையிலுள்ள தண்டுப் படையால் அடித்து வீழ்த்திடச் சக்கரப்படை முரிந்துவிட்டது. அரசன் நடுநடுங்கித் திரும்ப ஓடித் திருவொற்றியூரினை யடைந்து அங்குத் திருவருளால் செந்நெறியாகிய உயிர்க்கு உடல்போன்று விளங்கும் திருவெண்ணீற்றை உடம்பெங்கணும் அணிந்து முழுநீறு பூசிய முனிவராய், அந்நெறிக்கு உடைபோன்று திகழும் சிவமணியினைப் பூண்டு, செந்நெறிக்கு உயிராக உள்ளுறைந்து ஒருகாலும் நீங்காதிருக்கும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தினைக் கண்ணுதற் கடவுளின் பேரருளால் உண்ணிறை யன்பினுல் ஓவாது உணர்வினில் கணித்துக் கொண்டிருக்கும் முழுமயிர் யாக்கை முனிவரைக் கண்டு அளவிலா இன்பங்கொண்டு முனிவர் திருவடியில் விழுந்து வணங்கித் தன்னுடைய குறைகளனைத்தையும் விண்ணப்பித்துக் கொண்டனன்

முழுமயிர் முனிவர் மனங்கசிந்து சிறிதுநேரம் சிவ உள்குதலிலிருந்து படம்பக்கநாதரை மனமுறப்பணிந்து அவர்தம் திருவருள் பெற்றுக் கடவுள் திருமுன்னிருந்த ஒரு தருப்பைப் புல்லினை எடுத்து அதனைச் சிவபெருமானுகவே கருதி அதனை அரசனிடங் கொடுத்து, இதனை எடுத்துக் கொண்டு போய் உன் பகைவர்களை வெல்லக்கடவாயென்று அருளினன். அரசன் வணங்கி இரு கைகளாலும் வாங்கிக்கொண்டு முனிவருடைய வாழ்த்து மொழியினையும் பெற்றுக்கொண்டு மீண்டனன். மீண்டுவரும்போது ஈதென்னை திருமாலின் சக்கரப் படையினலேயே அப்பூதத்தினை வெல்ல முடியவில்லையே! இத்தருப்பைப்புல் என்ன செய்யப்போகின்றது? என எண்ணினன். எண்ணியும், அருந்தவ முனிவரால் அருளிச் செய்யப்பட்ட இது எவ்வாறு இருக்கிறதோ பார்ப்போமென்று நினைந்துகொண்டே சென்றனன்.

சென்று வாணனையும் ஓணனையும் போருக்கு அழைத்துப் பொருதத் தொடங்கினன். அப்பொழுது அப்பூதம் எதிர்த்து வந்து வீரச் சிரிப்புச் சிரித்துப் பெருமுழக்கம் செய்தது. அது கண்ட மன்னன் சிவபெருமானை உள்ளுற எண்ணித் தொழுது தருப்பைப் புல்லை ஏவினன். அப்புல் சிவப்படையாகிய

மழுவாய்ச் சென்றது. பூதம் அதனைக்கண்டு மிகவும் நடுநடுங்கிற்று. ஓ! ஓ! இது நம்பெருமான் மழுப்படையாயிற்றே, இதனை நாம் எங்ஙனம் வெல்வேம்? இதனை எதிர்த்து நிற்க நம்மால் முடியுமா? சிறிதுநேரம் நாம் இங்கிருந்தால் யான்மடிய வேண்டி வரும் எனப் புறமுதுகிட்டு ஓடிற்று. ஓடிச்சென்று வாணன் ஓணன் என்னும் அக்குறும்பர் இருவரையும் அப்பூதந்தானே கொன்றுவிட்டு மறைந்தது.

பூதம் அக்குறும்பர்களைக் கொன்ற குறிபபினை உய்த்துணரின் சிவபெருமானின் மழுப்படை ஒருவர் பால்வந்து சேருமாயின் அவர் குற்றமற்றவராய்த், தூயராய், சிவபத்தராய், நல்லாராய், நானிலத்தார்க்கும் நடுநிலை பிறழாது நன்மை செய்யும் நற்றவராய் உள்ளார் என்பது துணிபு. அவருடன் பகைவராய் வருவார் எத்திறத்தானும் தீயவரேயாவர். அதனுல் அவர் கொன்றழிக்கப்படற் குரியராவர். அம்முறைப்பற்றி அக்குறும்பர் இருவரையும் அப்பூதம் மழுப்படையின் ஏவலனுய் நின்றுகொன்றொழித்தது. இதுபோல் சண்டேசுர நாயனுர் திருக்கையிலுள்ள மாடு மேய்க்குங்கோல் சிவபெருமான் திருவருளால் மழுப்படையாக மாறி அவர் தம் தந்தையாகிய எச்சதத்தன் தாளிரண்டையும் அவன் செய்த சிவக்குற்றந்தீர வெட்டி வீழ்த்திற்று. இவ்வுண்மை வரும் சேக்கிழாரடிகள் திருமொழியானுணரலாம்:

> "சிந்தும் பொழுதில் அதுநோக்கும் சிறுவர் இறையில் தீயோனைத்
> தந்தை எனவே அறிந்தவன்தன் தாள்கள் சிந்தும் தகுதியினுல்
> முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க் கதுவே முறைமையினுல்
> வந்து மழுவா யிடஎறிந்தார் மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்".
>
> —10 சண்டேசுரர்—51

தொண்டைமான் கண்டு வெற்றிமுரசு அறை வித்தனன். அவர் தம் கோட்டைகளைத் தன் வசமாக்கிக் கொண்டனன். திருவொற்றியூர் வந்து சேர்ந்தனன். முழுதுடலும் கெழுவு மயிர் முழுத்தவ முனிவரைப் பத்திமேலீட்டினுல் திருவடியில்

வீழ்ந்து வணங்கி ஐயனே ! இனி அடியேன் செய்யவேண்டிய பணிவிடைகளை அருளிச் செய்யவேண்டுமென விண்ணப் பித்துக் கொண்டனன். இத்திருக் கோவிலுக்குத் திருமதில் கள், திருமண்டபங்கள் திருக்கோபுரங்கள் சிறப்புறக் கட்டு வித்துத் திருவிழாவும் செய்வாயாக எனக் கட்டளையிட்டரு ளினன்.

தொண்டைமான் இக்கட்டளையைத் தலைமேற்கொண்டு திருக் காசித்திருநகருக்குச் சென்று ஐந்நூறு சிவலிங்கங்களை யும் ஐந்நூறு மாவிரத அந்தனர்களையும் கொணர்ந்து திரு வொற்றியூரில் நிலைநிறுத்திப் பலவகைத் திருப்பணிகளையும் புரிவித்தனன். அத்திருக்கோவிற்குக் காவலாக வீரமாகாளி யையும் அவள்தன் மந்திரமும் சக்கரமும் நிறுத்தப்பட்ட ஒரு வட்டப் பாறையை ஏற்படுத்தி, மாவிரத அந்தணர்கட்கு எல்லாப் பொருள்களும் விளங்கும்படி செவியறிவுறுத்தருளிய பரமசிவத்தைத் தியாகராசப்பெருமான் திருமுன் (சந்நிதி)புக்கு மேற்புறமாக நிலைநாட்டினன்.

ஏழு காளிகட்கும், வைரவர்கட்கும் மற்றைய தேவர் கட்கும் வரிசை வரிசையாகத் திருக்கோயில்கள் உண்டாக் கினன். ஊர்களும் வளப்பங்களும் வகுத்தனன். பல தீர்த்தங் களையும் புதுக்கினன். மாசித்திங்கள் மகநன்னாளில் திருக் கடலாட்டு என்னும் தீர்த்தவிழாவும், பெருவிழா முதலியனவும் சதாசிவத்தின் திருமுகத்தில் தோன்றிய மகன்னியரான தலைமைபெற்ற ஆதிசைவ அந்தணரைக் கொண்டு எஞ்ஞான் றுஞ் செம்மையுற நடத்துவித்தனன். உரோமச முனிவரைப் பணிந்து அங்கு அவர்க்குப் பலநாள் தொண்டுசெய்து பிரியா விடை பெற்றனன். பெற்றுக் திருக்காஞ்சீபுரத்தை அடைந்து அறமுறை தவறாது திறமுற ஆண்டுவந்தனன். பின் திரு வருட்டுணையால் சிவவுலகத்தையடைந்து இன்புற்றனன்!

தொண்டைமான் திருப்பணிச் சருக்கம் முற்றும்.

இலவன் வேள்விச் சருக்கம்

சிவஞானச் செல்வர்களே !

படைப்போனாகிய நான்முகன் வாழும் உலகத்தில் அவ னிடத்தில் திருவொற்றியூரின் தீராமாண்பினைக்கேட்டு வந்த

நாரதமுனிவர் ஒருநாள் அயோத்திமாநகரம் சென்றனர். அவ்வயோத்தியினை அறமுறை தவருது ஆண்டு அமருல கடைந்த தசரத இராமனின மகன் இலவன் என்னும் மன்னன் அவ்வயோத்தியை அப்பொழுது ஆண்டுகொண்டிருந்தனன். நாரதர்சென்று அம்மன்னனைக் கண்டனர். அம்மன்னனும் நாரதர் திருவடியில் வீழ்ந்து வணங்கி அழைத்துவந்து அரி யணையில் அமர்வித்தனன்.

நாரதர் அரியணையில் அமர்ந்ததும், மன்னன் முனிவர் கோமானே ! நான் படைப்போன் நிலையை அடைதற்குப் பெரிதும் விரும்பியுள்ளேன். அதன்பொருட்டு அடியேன் செய்யவேண்டிய கருமம் யாது ? அதனைக் கட்டளையிட்டருள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டனன். நாரதர் இலவனை நோக்கி ஓ இலவனே ! அவ்வெண்ணம் நிறைவேற வேண்டுமாஞல் எல்லா வேள்விகளிலும் சிறந்த இராசசூய (மன்னர் வேள்வி) வேள்வியினைச் செய்யக்கடவாய். அவ் வேள்வியினையும் இவ்வுலகத்தில் நனிமிகச் சிறந்த தென் தமிழ் நாட்டிற்றிகழும் திருவொற்றியூரில் சென்று செய்வா யாஞல் சிறிதும் தடையின்றிப் பெரிதும் இனிமையாய் உரிய காலத்தே நிறைவேறுமென்று வாய்மொழிந்து போயினர்..

அதனைக் கேட்டு மகிழ்ந்த இலவன் தான் ஆண்டு கொண்டிருந்த அயோத்தியை விட்டு நீங்கிப்புறப்பட்டு எட்டுத் திசைகளிலுமுள்ள மன்னர்களை எல்லாம்வென்று கல்விக்குக் கரையிலாத காஞ்சிமாநகரத்தை யடைந்தனன். இத்திருவூர் காஞ்சி மரத்தின் பெயரால் அமைந்ததாகும். அங்கு முன்ஞெரு காலத்து அம்மை கம்பையாற்றின் கரையில் சிவக்குறி (சிவ லிங்கம்) அமைத்து வழிபட்டனள் அப்பொழுது சிவபெரு மான் திருவருளால் அவ்வியாற்றில் பெருவெள்ளம் பெருக் கெடுத்து வந்து சிவக்குறியினை அழித்திடுவதுபோல் இருந்தது. அம்மை அச்சிவக் குறியினைக் கட்டித்தழுவிக்கொண்டனள். சிவபெருமானுங் குழைந்து கொடுத்து முன்னும் பின்னுமாக அம்மையின் முலைச்சுவடும் வளைச்சுவடும் அடையாளமாகப் பெற்றருளினன்.

அத்தகைய கம்பையாற்றில் செந்தமிழ்த் திருவைந் தெழுத்தோதித் தீர்த்தமாடினன். மறை வடிவாய்த்திகழும்

ஒரு மாமரத்தடியில் வீற்றிருந்தருளும் காமக் கண்ணியை ஒரு பங்கிலேயுடைய ஏகாம்பரக் கடவுளைத்தொழுது திருவைந் தெழுத்தைக் கணித்துக்கொண்டு மெய்யடியார்களுடன் அளவளாவி அத்திருவூரின் கண்ணே சிலநாள் தக்கியிருந் தனன். அங்ஙனம் தங்கியிருக்கும்போது திருவொற்றி யூருக்குச் சென்று இராசசூய வேள்வியைத் தொடங்கற்குரிய நன்னுள் எப்பொழுது ஏற்படும் என்று திருவருளை எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருந்தனன். அங்ஙனம் இருக்கு நாளில் ஒரு நாள் ஓர் ஒப்பில்லாத சிவனடியாரைக் காணும் பேறு பெற்றனன். அவரைக கண்டதும் எழுந்து வரவேற்று அவர்தம் திருவடியில் வீழ்ந்து வணங்கி அவருடன் அளவ ளாவி உரையாடிக் கொண்டிருந்தனன். அவர் பதின்மூன்ரும் பிறைநாளாகிய பிரதோசப் பெருமையினைப் பெரிதும் பாராட்டிச் சொல்லத் தொடங்கினர்.

பிரதோசமானது வளர்பிறைப் பதின்மூன்ரும் பக்கத்தி (திரயோதசி) லாவது, தேய்பிறைப் பதின்மூன்ரும் பக்கத்தி லாவது புலர்காலை தொட்டு அறுபது நாழிகையும் இருப்பது தலையாயதாகும். முப்பது நாழிகை இருப்பது இடையாய தாகும். இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒரு விஞடி யாவது இருப்பது கடையாயதாகும். பன்னிரண்டாம் பிறை யாகிய துவாதசி கலந்து வருகிற திரயோதசி கடையிற்கடை (அதமாதமம்) யாகும். துவாதசி கலந்த திரயோதசியென்பது முதனுள் துவாதசி முப்பது நாழிகைக்கு மேல் திரயோதசி தொடங்கி மறுநாள் இருபத்தாறேகால் நாழிகை இருக்கு மாஞல் முதனுள் பிரதோச வழிபாடு செய்தல் வேண்டும். ஒரு வேளை மறுநாள் இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒரு நாழிகையாவது இருக்குமேயாகில் அந்நாளிலேயே வழிபாடு செய்தல் வேண்டும்.

பிரதோசமென்பது புலரிதொடங்கி இருபத்தாறேகால் நாழிகை முதல் இரவு மூன்றேமுக்கால் நாழிகை வரைக்கும் உள்ள நாழிகை ஏழரையாகும். இந்த நாழிகை ஏழரையில் மஞ்சள் வெயிலின் (ரஜனி முகக்) காலத்தில் உண்டாகும் பிர தோச காலத்தினை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். நாள் ஒன்றிற்கு முழுத்தம் பதினறு. இவற்றுள் நண்பகல் முழுத் தம் எட்டு. இவ்வெட்டில் விடியல் தொடங்கி ஏழு முழுத்

தத்தைக் கழித்து எட்டாவது முழுத்தம் (முகூர்த்தம்) பிர தோச காலமாகும். இந்த முழுத்தம் மூன்றேமுக்கால் நாழிகை. இதனை மூன்று பகுதியாகப் பிரிக்கப் பகுதியொன்றுக்கு நாழிகை ஒன்றேகால் ஆகும். இம்மூன்று பகுதிகளில் முதற் பகுதியில் பிரதோச வழிபாடு செய்வது தலையாயதாகும். இரண்டாம் பகுதி இடையாயதாகும். மூன்றும் பகுதி கடை யாயதாகும். இம்மூன்று பகுதியினுலும் உண்டாகும் பயன் ஒன்றற்கொன்று வேறுபட்டதாகாது. பிரதோச வேளை இர ஜனிமுக வேளையென்பது மஞ்சள் வெயில் காய்கிற வேளை யாகும். பதினேராம் பிறையாகிய ஏகாதசியில் சிவபெருமான் தேவர்கள் முதல்யாவர்களும் உய்யும் பொருட்டு கடலிற்றோன் றிய கண்டாரைக் கொல்லும் நஞ்சு உண்டருளினன் என்ப பன்னிரண்டாம் பிறையாகிய துவாதசியில் விழித்திருந்தனன் என்ப. பதின்மூன்றும் பிறையாகிய திரயோதசியில் சிவபெரு மான் திருக்கூத்தியற்றிய திருக்கோலம் என்ப.

பிரதோச காலத்தில் சிவன் திருக்கோவிலின்கண் எல்லாத் தேவர்களும் ஒருங்கு வந்து கூடிச் சிவன் திருக்கூத்தினைக் கண்டு களித்துக் கும்பிடுவர். அதனுல் சிவன் கோவில் நீங் கலாக வேறு ஆலயம் புகுவோர் அருநரகடைவரென அறை வர். பிரதோச காலத்தில் சிவன் திருக்கோவிலுக்கு வேடிக கையின் பொருட்டோ, வியனரங்கில் மெல்லியலார் புரியும் ஆடல் கண்டுகளிக்கும் பொருட்டோ வந்து சேர்வோர் மெய் யுணர்வுகைவரப் பெறுவர். அஃதென்னையெனின் ? ஆங்கு வந்து பத்தி மேலீட்டால் தொழும் மெய்யடியார்களின் திரு வெண்ணீற்றுப் பொலிவும், சிவமணி அழகும், திருக்கண் ணருளும் கண்டாரனைவர்களையும் தம் வயம் இழுத்து நல் வழிப்படுத்தும் தன்மைய. அதனுல் இவர்களும் அவர்களின் வழி நின்று நன்மை எய்துவர். நன்னெறியொழுகுவர் அத னுல் மெய்யுணர்வு எய்துவரென்பதாம்.

பிரதோச காலத்தில் உணர்வென்னும் ஊர்தி நந்தியின் இடப் பக்கத்தைத் தொட்டுக்கொண்டு அதன் இரண்டு கொம் புகளினுடைய நடுவில் சிவலிங்கப் பெருமானைக் கண்டு கும் பிடும் காட்சியால் வினையனைத்தும் விண்ணுற அடுக்கிய விற கில் வெவ்வழல் புகுந்த காலத்துண்டாகும் அழிவுபோன்று அழிந்துபோம். பிரதோச காலத்தில் மும்முறை வலம் வந்

தால் பிணி நீங்கும். ஐந்துதரம் வலம்வந்தால் மக்கட்பேறுண்டாகும். ஐம்பொறிகளையும் அடக்கி மிகுந்த அன்புடனே அடிமேல் அடி வைத்துத் திருவைந்தெழுத்தினை உருவெண்ணிக் கொண்டு வலஞ்செய்யின் அடியொன்றுக்கு ஒரு கோடி வேள்வி செய்து முடித்த அரும்பயன் உண்டாகும். இக்காலத்தில் மெய்ந்நெறிஞானத்துக்கு வித்தாகக் காணப்படும் திருவிளக்கிடுதலும், பள்ளத்தே பாயும் வெள்ளம் போன்ற பேரன்பின் அடையாளமாகிய திருமுழுக்கும், செப்ப நெஞ்சின் திருவடையாளமாகிய ஒப்பனையும் உள்ளன்புடன் புரிவிப்போர் எய்தும் பயன் கோடாகோடியாகும். இப்பிரதோச நாளே ஒப்பரிய தலையாய திருநாளென்று உணர்வாயாக வென்றனர்.

திருமுழுக்கு—அபிசேகம். ஒப்பனை—அலங்காரம்.

கண்ணுதற் பெருங்கடவுள் கண்டாரைக் கொல்லும் கடல் நஞ்சு உண்டு கண்டத்திலடக்கிய காலம் சுங்குற்பொழுதென்ப. இவ்வுண்மை வருந்திரு மாமறையானுணர்க :

உரையினில் வந்தபாவம் உணர்நோய்களும்ம செயல்தீங்கு
குற்றமுலகில்
வரையினி லாமைசெய்த அவை தீரும் வண்ணம் மிக
வேத்தி நித்தநினைமின்
வரை சிலையாக அன்று மதில் மூன்றெரித்து வளர்கங்குல்
நங்கைவெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத் திரு
நாரையூர் கைதொழவே''

சிவபெருமான் நஞ்சுண்டருளியபின் தேவர்தொழ ஆடியருளிய திருக்கூத்து வருமாறு :

''கடலினஞ்சமு துண்டிமையோர் தொழுதேத்த நடமாடி
அடலிலங்கையரை யன்வலி செற்றருள் அம்மானமர்
கோயில்
மடலிலங்கு கமு கின்பலவின்மது விம்முவலிதாயம்
உடலிலங்கும் உயிருள்ளளவுந்தொழ உள்ளத்துயர்போமே
—க.

[1] இந்த நூற்றாண்டில் ஆட்சிச் சட்டப்படி இத்தகையார் ஆடல் முதலியன நிறுத்தப்பட்டுள்ளன.

ஊர்தி நந்தியின் கொம்பிரண்டு நடுவின் வழியாகச்சிவக் கொழுந்தினைக் கண்டு கும்பிடுங்கால் உள்ளன்புடன் ஓதிக் கொள்ளுதற்கு வேண்டிய திருமாமறைத் திருப்பாட்டு வருமாறு :

"வம்ப டுத்த மலர்ப்பொழில் சூழ மதிதவழ்
செம்படுத்த செழும்புரி சைத்தெளிச் சேரியீர்
கொம்படுத்த தொர் கோல விடைமிசைக் கூர்மையோ
டம்ப டுத்தகண் ணாளோடு மேவல் அழகிதே.''—2.

இதனைப் பணிவன்புடன் கேட்ட அயோத்தி மன்னனான இலவன் பேரின்பமுற்று இத்தகைய நன்னாளிலேயே இராசசூய வேள்வியினைத் திருவொற்றியூரில் முடிக்க வேண்டுமென்று காஞ்சிமாநகரத்தை விட்டுப் புறப்பட்டுத்திருவொற்றியூரை நோக்கி வந்தனன். வந்து கொண்டிருக்கையில் சிவபெருமான் அம்மன்னனின் பத்தி மேம்பாட்டினை உலகோர்க்குணர்த்தும் பொருட்டுப் பேரிடியையும் பெருமழையையும் வருமாறு திருவுள்ளங் கொண்டருளனின். அம்மழையினால் வழி சிறிதும் தெரியவொண்ணாதபடி எங்கும் ஒரே பேரிருள் மூடிக்கொண்டது. பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. யாதொரு வழியுந்தெரியாமல் தடுமாறும்படி நேரிட்டது.

இதனை மன்னன் கண்டு ஐயோ! இஃதென்னை பிரதோச காலம் நெருங்கிவிட்டதே மழையினால் தடைப்படும் போலிருக்கின்றதே, பிரதோச காலங்கழித்துத் திருவொற்றியூரினுக்கு நாம் போவதைக் காட்டிலும் உயிர்விடுவதே மிக்க நலமாகுமென்று நாடினன். நாடித்தன் உடைவாளையுருவித் தன் கழுத்தைத் துணித்துக்கொள்ளத் துவங்கினன். தொடங்கவே, சிவபெருமான் அம்மையோடு ஆனேற்றின்மீது அழகுற வீற்றிருந்தருளி மன்னன் காணும்படி திருவருட்காட்சி கொடுத்தருளினன். மன்னன் அளவிறப்பப் பணிந்து பெருமானே? எளியேனைத் தடுத்தாட்கொண்டருளிய ஏந்தலே! இறைவனே! இந்த இடம் உம்முடைய அடிமையாகிய எளியேன் பெயரால் "இலவனூர் பேறூர்" என வழங்குதல் வேண்டும்

என விண்ணப்பித்துக் கொண்டனன். இவ்விடத்தில் அடிகள் இயல்பாக முளைத்தருளும் சுயம்புப் படிமமாகத் திருக்கோயில் கொண்டருளுதல் வேண்டும் எனவும் பெருங்காதலுடன் கேட்டுக் கொண்டனன்.

சிவபெருமானும் பெருந்தண்ணளிபுரிந்து அவ்வாறேயாக என வரம் ஈந்தருளினன். பின் மறைந்தருளினன். மன்னனும் அவ்வூரை விட்டுப்புறப்பட்டுத் திருவொற்றித் திருவூரை வந்து அடைந்தனன். திருவைந்தெழுத்தினை ஓதிப் பிரமதீர்த்தத்தில் தீர்த்தமாடினன். சிவதீக்கை முறைப்படி திருவெண்ணீறு உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள் (இரண்டு) வலது தோள், முழங்கை, மணிக்கட்டு (மூன்று) இடது தோள் முழங்கை, மணிக்கட்டு (மூன்று) காது (இரண்டு) கழுத்து முதுகு என்னும் பதினாறு இடங்களிலும் திருவெண்ணீறணிந்தனன். (இஞ்ஞான்றுநாமெல்லாம் இவ்வாறு அணிவதற்கு நம் செந்நெறி முதல்வர் (சைவசமயாசிரியர்) நால்வருள் முதலவராகிய திருஞானசம்பந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய "மந்திரமாவது நீறு" எனத்தொடங்கும் திருநீற்றுத் திருப்பதிகம் ஓதித் திருநீறணிதல் வேண்டும். இதுபோல் தொடுமிடம் தொடுதற்குத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிய "தலையே நீ வணங்காய்" எனத்தொடங்கும் திருப்பதிகம் ஓதி ஒன்பதிடங்களைத் தொட்டு "ஏகனாகி இறைபணி நிற்றல் வேண்டும். இத்திருப்பதிகத்தில்" தலை, கண், செவி, மூக்கு, வாய் (அறிதற்கருவியாகிய ஐந்து), நெஞ்சு, கை, ஆக்கை, கால்கள் ஆகிய இடங்கள் ஒன்பதும் ஓதப்பட்டுள்ளன. மேலும் உற்றார், இறுமாந்து, தேடிக் கண்டுகொண்டேன் என மூன்று திருப்பாட்டுக்கள் ஓதப்பட்டுள்ளன அம் மூன்றும் முறையே பதி, பசு. பாசம் (இறை, உயிர். சிறை) எனப்பகர் மூன்றனையும் குறிக்கும் திருக்குறிப்பாகும். கால்களால் வலம் வருதல்போன்று ஆக்கையால் வலம் வருதலும் திருவாணை என்ப. அஃதாவது புரண்டு புரண்டு வலம் வருதல் இம்முறையினை நம் திருநாவுக்கரசு நாயனார் புரிந்தருளி நம்மனோர்க்கு வழிகாட்டி வைத்தருளினர். அவ்வுண்மையினைவரும் சேக்கிழாரடிகள் திருவாய் மொழியானுணர்க :

"அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற கழல் வணங்கி
அருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணியோட்டும் திருவீதி புரண்டுவலங்
கொண்டு போந்தே

எப்புவனங் களுநிறைந்த திருப்பதியின் எல்லையினை இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினுர் திருநாரை யூர்பணிந்து பாடிச் செல்வார்."—திருநாவுக்கரசர்—179.

பின் நமச்சிவாயத் திருப்பதிகம் மூன்றும் முறையுற ஓதி நிறைபெரும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தினைச் சீருறக் கணித்தல் வேண்டும். கணித்தல்-எண்ணுதல் இவற்றுள் திருவங்கமாலையினுல் சீலமும் நோன்பும், திருநீற்றுப்பதிகத்தால் செறிவும், நமச்சிவாயத் திருப்பதிகத்தால் அறிவும் ஆகிய நன்னெறி நான்மை நற்றவப் பணிகளில் நாம் நிற்பவராவோம்; இவற்றையோதி இம்முறையாற் பணிசெய்யின். இவற்றை ஒரு வெண்பாவால் நினைவுகூரத் தருகின்ருேம் :

ஓதுமங்க மாலை உயர்சீலம் நோன்பூட்டும்
தீதில்திரு நீற்றுமறை சேர்க்கும்செறி—வோதும்
நமசிவய மூன்றும் அறிவுநிலை நல்கும்
தமராய தொண்டர் தமக்கு.

நமச்சிவாயத் திருப்பதிகம் நான்கனுள் "துஞ்சலும்" எனத் தொடங்கும் சம்பந்தப் பெருமானுர் திருப்பதிகம் சீலநிலையினர்க்கும், "காதலாகி" எனத் தொடங்கும் சம்பந்தப் பெருமானுர் திருப்பதிகம் அறிவு நிலையினர்க்கும், "சொற்றுணை வேதியன்" எனத் தொடங்கும் அப்பர் பெருமானுர் திருப்பதிகம் நோன்பு நிலையினர்க்கும், "மற்றுப் பற்றெனக்கின்றி" எனத் தொடங்கும் சுந்தரப்பெருமானுர் திருப்பதிகம் செறிவு நிலையினர்க்கும் திருவருளால் முறையே உணரக், கணிக்க ஓதற் குரியனவாய் அமைந்துள்ள கண்ணுதற் றிருக்குறிப்புக் கருதுந் தோறுங் கழலடிக் கழிபேரின்பம் அருளுவதாகும் சிவதீக்கை முறையினை எம்மால் திருமுறை வழியாய்த் தொகுக்கப்பட்ட சிவதீக்கை நூலின்கட் காண்க.

சிவமணியாகிய திரு அடையாள மாலையினைப் பூண்டு சிவன் திருக்கோவிலினைச் 'சிவசிவ' என்னும் செந்தமிழ்த் திருமாமறையினை உணர்வினிற் கணித்துக்கொண்டே வலம் வந்து வடிவுடையம்மையாரையும் படம்பக்க நாதரையும் கண்

களிக்கக் கண்டு பலமுறை நிலத்தே எட்டுறுப்பும் நன்கு படும்படி வீழ்ந்தெழுந்து வணக்கம் புரிந்தனன். பிரதோசகாலத்தில் இராசசூய வேள்வியினைத் திருவருளால் இனிதுற நிறைவேற்றினன். பல வரங்கள் பெற்றனன். பிரியா விடைகொண்டு அயோத்தியை அடைந்து அரசாட்சி செய்துகொண்டு வாழ்ந்திருந்தனன்.

வீழ்ந்தெழுந்து வணங்குமுண்மையினை வரும் சேக்கிழாரடிகள் திருவாய்மொழியானுணர்க:

"கையுந் தலைமிசை புனைஅஞ்சலியன கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுடன் உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரு மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்.",
—12. திருநாவுக்கரசர்—167

வீழ்ந்தெழுதலால் ஆம்விழுப்பயன் வருமாறு:

நேர்ந்துநிலம் வீழ மலம்வீழும் எட்டுறுப்பால்
நேர்ந்துதொழ எண்குணமாம் நேர்.

வழிபாட்டில் முட்டு வருங்கால் வாள்கொண்டுயிர்விடத் துணியும் வாய்மையினை வரும் சேக்கிழாரடிகள் வண்மறையானுணர்க:

"பூசை கடிது முடித்தடியேன் என்னே பிழைத்த தெனப்பொருமி
ஆசை உடம்பால் மற்றினிவே றடையும் இன்பம் யாதென்று
தேசின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார் பினில்நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசை மிகவும் இசைப்பித்தார்"
—12. சேரமான் பெருமாள்—42.

இலவனூர் பேறூர் என்பது சென்னையிலிருந்து பூவிருந்தவல்லிக்குப் போகும் வழியில் உள்ளது. அஃதிஞ்ஞான்று போரூர் என வழங்கப்படுகின்றது.

இலவன் வேள்விச்சருக்க முற்றும்.

தீர்த்தச் சருக்கம்

சிவனிறைவுள்ளத் திருவினரே!

முற்காலத்தில் மாந்தாத என்னும் மன்னன் ஒருவன் இருந்தனன். அவன் வஞ்சனையில்லாதவன். உண்மையையே நாடுகின்றவன். பாவஞ் சேராவண்ணம் உலகை ஆளும் பண்புடையவன். திருவெண்ணீற்றை முழுநீறு பூசிய முனிவர் போன்று உடம்பு முழுவதும் மங்காமற் பூசி மகிழ்பவன். திருவெண்ணீறணிகிலாத எண்ணிலாப் பாவிகளைக் கண்டால் "அம்மகாம் அஞ்சுமாறே" என்னும் அருந்தமிழ்த் திருமாமறை முடிபின்படி மிகவஞ்சி விலகிக் கண்ணிற்படாத தூரத்தே நீங்குபவன். சிவனேசமுடைய சீராளன். சிவனடியார்களைச் சிவனெனவே உள்ளூரவுன்னும் ஒண்மையன். அறம்பலவும் இடையருதாற்றும் திறத்தன். சோலைகளையும், தடாகங்களையும், அறச்சாலைகளையும், அறவிடுதிகளையும், திருமடங்களையும், ஆங்காங்கே நிலைநிறுத்துபவன்.

சிவவேள்விகளையே தவம் எனப் புரிபவன். சிவமணியே மேலாம் தவஅணியெனப்பூண்பவன், சொல்லரியபெருஞ்சீர்த்தியுடையவன். பகைவர்களை வென்று கொற்றத்திருவுடன் வாழ்பவன், அழகில் கருவேளாகிய மன்மதனினும் மேலானவன். கல்வியில் கடலாயுள்ளவன், அயோத்திமாநகரை ஆளுபவன். புலவர்களால் சூழப்பெற்றவன். கூத்துக்கலை (பரதசாத்திரம்) நூல் பயின்றவன். இத்தகைய மன்னன் நெடுநாள் நிலவுலகத்தைப் பொதுவற ஆண்டு மூப்படைந்தனன். நரைதிரையுற்றனன். தசையற்றுப் பற்கள் வீழ்ந்து தலைநடுக்கம் அடைந்து துன்பமுற்றனன்.

அங்நிலையில் ஒருநாள் சிவவஞ்சகரை நோக்கி ஐயன்மீர்! யான் இன்னமும் இவ்வுலகில் வாழ்ந்து துன்பமுருதபடி விரைவில் இறப்பு எய்துவதற்கு ஏதாவது சூழ்ச்சியுண்டோ என்றனன். அவர்கள் பெருமன்னனே! தாங்கள் செய்திருக்கிற பெரும் புண்ணியங்களெல்லாம் அழிந்துபோகத்தக்க ஒரு காரியம் செய்தல்வேண்டும் அது செய்தால் தங்கள் எண்ணம் திண்ணமாகக் கைகூடுமென்றனர். அதைக்கேட்டு மன்னன் அவர்கள் கூறியவற்றை மனத்தி லடக்கிக்கொண்டு கருணீகனை அழைத்து நீ உடனே சென்று சிவத்திருப்பதிகளில் நான்

கொடுத்துவருகிற அறங்களையெல்லாம் குறைத்துக் கணக்கெழுதிக்கொண்டுவா என்று கட்டளையிட்டனன். அவனும் அங்ஙனமே எழுதிக்கொண்டுவந்து அரசன் கையிற் கொடுத்தனன்.

அவ்வேட்டில் திருவொற்றியூர் நீங்கல் என்று எழுதியிருப்பது கண்டு கடுஞ்சினங்கொண்டு இங்ஙனம் ஏன் செய்தாயெனக் கருணிகனை ஒறுக்கச் செய்தனன். கருணிகன் அஞ்சி மன்னரேறே! "திருவொற்றியூர் நீங்கலாக" என்பது அடியேன் கையெழுத்தன்று மன்னித்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தனன். மன்னன் இருவகை எழுத்தையும் பார்த்து உண்மைதானென்று தீர்மானித்தான். தீர்மானித்துத் "திருவொற்றியூர் நீங்கலாக" என்பதனை அடித்துவிட்டு அவ்வேட்டினை அரண்மனையில் ஒரு அறைக்குள் காப்புறுத்தி வைத்தனன். மறுநாள் எடுத்துப்பார்க்கையில் பழையபடியே இருக்கக்கண்டு அளவிறந்த வியப்படைந்து இது மானுடர் எழுத்தன்று தெய்வக் கைஎழுத்துப்போல் தோன்றுகிறது. இது திருவொற்றியூர்ப் பெருமையே எனப் பெரிதும் நினைந்து உறுதி கொண்டனன்.

உடனே திருவொற்றியூரினை அடைந்து வணங்குதல் வேண்டுமென மனங்கொண்டனன். உடனே தன் அருமைப் பட்டத்து மனைவியுடன் புறப்பட்டனன். திருவொற்றியூரினை வந்து திருவருளாற் சேர்ந்தனன். ஊர்தியினைவிட்டு இறங்கினன். இருபக்கத்திலும் ஏவலர்கைகொடுத்துவரத் தன் கற்புறு மனைவியுடன் மெல்ல மெல்லத் திருவீதி நடந்துவந்தனன். பின்பு சிவன் திருக்கோவிலினுட் புகுந்தனன். பிரமதீர்த்தத்தில் தீர்த்தமாடினன். படம் பக்கநாதர் திருமுன் சென்று நிலத்தே எட்டுறுப்பும் படும்படி வீழ்ந்தெழுந்து வணங்கித் தொழுதனன். தொழுதவுடன் மூப்பு நீங்கி இளமைப் பருவமடைந்து விளங்கினன். மன்னன் தெரிந்து பெருமகிழ்ச்சியடைந்து கடவுள் திருமுன்னில் இருந்து பொருள்சேர் புகழ்புரிந்துகொண்டு வழுத்தினன்.

எல்லா நன்மைகளும் ஒருங்குகூடிய பெருங்குணத்தனே! எளியேனை அடிமைகொண்டருளும் பொருட்டு ஏட்டின் மத்தியில் வரிப்பிளந் தெழுதியருளிய எழுத்தறியும் பெருமானே!

அடியேன் வினையனைத்தையும் போக்கி யருளுவாய் என்று விண்ணப்பித்து, இளமை தந்த நாயனுர் என ஒரு சிவக்குறி யொன்று நிறுவிப் பூசித்தனன், பலகோடி அறங்களை அத் திருவூரின்கண் ஏராளமாகச் செய்தனன். பின் அயோத்திமா நகரஞ் சென்று பண்டுபோல் அரசாண்டு முடிவில் திருக் கைலையை எய்திப் பேரின்புற்றுப் பெருவாழ்வெய்தினன்.

திருவொற்றியூர்ச் சிவபெருமான் வரிப்பிளந்தாக்கிய வாய்மை வரும் சேக்கிழாரடிகள் திருவாய் மொழியானுணர்க.

" மருட்கொ டுந்தொழில் மன்னவன் இறக்கிய வரியை
நெருக்கி முன் திரு வொற்றியூர் நீங்கவென் றெழுதும்
ஒருத்தர் தம்பெருங் கோயிலின் ஒருபுறஞ் சூழ்ந்த
திருப்ப ரப்பையும் உடையதத் திரைக்கடல் வரைப்பு"

—12 திருக்குறிப்புத்தொண்டர்

" வஞ்சகரை நீங்கிவரும் மாந்தாதா ஒற்றியூர்
நஞ்சிவனைக் கண்டுதொழ நண்ணலும்—விஞ்சிளமை
ஏட்டில் வரிப்பிளந்து தீட்டிறைவன் எய்துவித்தான்
நாட்டுதமிழ் நாட்டியல்பால் நாடு.

தீர்த்தச்சருக்கம் முற்றும்.

தியாகச்சருக்கம்

சிவசீலர்களாகிய முனிவர்களே !

ஒரு காலத்தில் மறைமுறைச் செந்நெறியாகிய வைதிக சைவ அந்தண முதல்வர்கள் இருவர் வடமொழியில் இரண்டு பாடல் (சுலோகங்களை)களைச் செய்துகொண்டு விண்ணுலகத்தையொத்த திருவொற்றியூருக்கு வந்து சேர்ந்தனர். அவ்வூரிலுள்ளார் அவர்களது அரிய பாடல்களைக்கேட்டு அகமிக மகிழ்ந்தனர். வேண்டும் பரிசு வழங்கினர். அவர்கள் அப்பரிசுகளை விரும்பாதிருந்தனர். அதனைக்கண்ட அவ்வூரவர்கள் அவர்களை நோக்கி ஐயன்மீர்! உங்களுடைய உறையுள் (வாசத்தலம்) யாது? இங்கு வந்த காரியம் யாது? நாங்கள் எவ்வளவு பொருள் கொடுத்தாலும் மறுப்பதற்குக் காரணம் யாது? என வினவினர்.

அதுகேட்ட அவ்வந்தணர்கள் அவர்களை நோக்கி மெய் யன்பர்களே! நாங்கள் உறையும் ஊர் ஆடகபுரி என்னும் திருவூர். அவ்வூரின் மாண்பினைக் கூறுகின்றோம் கேளுங்கள். பண்டொருகால் எழுமுனிவர்களும் கலிகாலத்தின் கொடுமை யினின்றும் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நான்முகனிடம் சென்று விண்ணப்பித்தனர். அவன் பெருந்தண்ணளிவாய்ந்த கண்ணுதற்பெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டனன். அம்முதல்வன் ஆடகபுரியை அடைந்து தன்னை நோக்கித் தவம் செய்யின் கலிகாலக்கொடுமை அடராதெனக் கட்டளையிட்டருளினன். அங்ஙனமே அம்முனிவர்கள் சென்றுவாழும் திருவூராகும் அவ்வூர். அன்றியும் ஊழிவெள்ளத்தில் சிவ உள்ளலுடன் அறிதுயிலமர்ந்த நாராயணனுடைய கொப்பூழினின்றுந் தோன்றிய நான்முகனுக்குப் பழையபடியே படைப்புத்தொழில் பயிற்றுவிக்க எண்ணினன் மால்.

எண்ணித் தன்மகனாகிய நான்முகனை ஆடகபுரிக்குப் போகச் செய்தனன். அவனும் அத்திருவூர்சென்று சிவநோன் பியற்றி நிறைவேற்றினன். வேதாகமங்களையும் நன்குணர்ந்து அவற்றின் உண்மைகளையும் தெரிந்துகொண்டனன் படைப் புத்தொழிலும் கைவரப்பெற்றனன். அன்றியும் அகத்திய முனிவரால் உண்டாக்கிய ஒரு தீர்த்தமும் அங்குண்டு ஒரு ஆறும், சிவகங்கையும், சூரியதீர்த்தமும், சந்திரதீர்த்தமும் அங்குள. திருத்தண்டலை, திருவாரூர், திரு இடும்பை, திருமறைக்காடு, திருக்களரி, திருக்கோட்டூர், திருத்தெங்கூர், திருக்கைச்சினம் முதலியவற்றாற் சூழப்பட்டிருக்கிறது. முசு குந்தவேந்தன (சக்கரவர்த்தி)ல் பல திருப்பணிகள் செய்யப் பெற்றுச் சிறந்திருப்பது. திருவாரூருக்குத் தென்புறத்தி லுள்ளது.

நாங்கள் பல தேசங்கள் சென்று எங்கள் கல்விவன்மை யால் சேகரித்த பொருளனைத்தையும் ஆடகேச்சுரத்தே எழுந் தருளியிருக்கின்ற ஆடகேச்சுரர்க்கே உள்ளம் உவந்து உவப் பிப்போம். அப்பெருமானுக்கு அடியேங்கள் செய்த மணி யிழைத்த மாணிக்கஅணிக்குநடுவிற் பதிக்கத்தக்க நடுநாயக மணி கிடையாமையால் அப்பெருமானை உள்குதலாகிய தியான முறையில் நாடிக்கொண்டிருந்தோம். அப்பொழுது திருவொற் றியூரினுக்குவரின் அத்தகைய சிறந்த மணி கிடைக்கும் என

அப்பெருமான் வாஞெலியாக வழங்கியருளினன். அதஞல் இத்திருவூர்க்கு வந்து சேர்ந்தனம் என்றனர்.

அது கேட்ட அவ்வூரவர் தலையாய அந்தணர்களே! நீங்கள் சிவபெருமான் திருவாணையின்படி வந்துள்ளீர்கள். நீங்கள் விழுமிய முழுமுதல்வஞகிய படம்பக்கநாதர் திருமுன்னில் உங்கள் வடமொழி பாடல்களாகிய சுலோகங்களை எடுத்து மொழிந்து விளக்கிச் சொற்பொழிவாற்றிஞல் உங்கள் எண்ணம் இனிது நிறைவுறும் என்றனர். அங்ஙனமே அப்பார்ப்பனர்கள் அச்சிவன் கோவிலில் சொற்பொழிவு வாயிலாக அரங்கேற்றம் செய்து கொண்டிருந்தனர். அவ்வேளையில் அவர்கள் முன்னே உடம்பெங்கணும் திருவெண்ணீறு பூசி தலை, தோள், யார்பு, கண்டம், செவி, கை முதலிய இடங்களில் சிவமணிபூண்டு ஒப்பில்லாத ஒரு சிவத்தொண்டர் தோன்றினர்.

தோன்றிப் புலவர் முடிமணிகளே! நீங்கள் விரும்பிய நாயக மணி தேடித்தருகின்ஞேம் என்னுடன் வாருங்கள் என்று அழைத்துக்கொண்டு திருமயிலாப்பூரிலுள்ள வணிகர் வீதியை அடைந்தனர். பேரன்பரும் பெருவணிகருமாகிய ஏலேல சிங்கச் செட்டியாரிடம் சென்றனர். சென்று அவரை நோக்கி எங்கட்கு மாணிக்கம் வேண்டுமென்று மொழிந்தனர். அவரும் அவர்களை வணங்கி நன்ருக வரவேற்றுஅமரச் செய்தனர். தம்பாலுள்ள விலையேறப் பெற்ற அரியபெரிய மணிக்கற்களையெல்லாம் கொண்டு வந்து எதிரிலே வைத்தனர். அவைகளையெல்லாம் பார்வையிட்டு எங்களுக்கு வேண்டிய மணி இவற்றுளில்லையென்றனர்.

அது கேட்ட ஏலேலசிங்கர் ஐயன்மீர்! வேறுமணிகள் என்னிடத்திலில்லை. வேந்தனுக்கென்று வேருகவைத்துக்கொண்டிருக்கிற ஓர் உயர்ந்தமணி என்னிடத்திலுளது என்றனர். ஆஞல் அதைக் கொண்டுவந்து காட்டுவீராக என்று வந்த சிவனடியார் மொழிந்தனர். அங்ஙனமே அவர் அம்மாணிக்கத்தினைக் கொண்டு வந்து காட்டினர். அதைக் கண்ட பார்ப்பனப் புலவர்கள் இந்த மாணிக்கமே எங்களுக்கு வேண்டியதென்று குறிப்பித்தனர். உடனே சிவனடியார் திருக்கோலத்துடன் எழுந்தருளியுள்ள எம்மான் அம்மாணிக்கத்தினை எடுத்து அப்பார்ப்பனப் புலவர்கள் கையில் கொடுத்துவிட்டு மின்னென மறைந்தருளினர். ஏலேல சிங்கச்செட்டியார் இதனைக்கண்டு பெரிதும்

வியப்புற்றனர். வியப்புற்றுத் தன் மாளிகைக்குள் சென்றனர்.

அந்தணப் புலவர்கள் அம்மணியினை எடுத்துக்கொண்டு திருவொற்றியூரை நோக்கிப் படம்பக்கநாதர் திருவிளையாடலை நினைந்துநினைந்து வழிநடந்தனர். நடந்து வந்து திருவொற்றியூர்த் திருநகரைச் சேர்வதன் முன் மயிலையிலுள்ளனர் சிலர் இம்மாணிக்கத்தைப் பறித்துக்கொள்ளவேண்டுமென அப் பார்ப்பனரைப் பின் தொடர்ந்தனர். தொடர மத்தியில் எதிர்பாராதபடி பெருவெள்ளமுண்டாகித் தடை செய்தது. அதனைக் கண்டஞ்சி அத்தீயோர் பின்னடைந்தனர். அந்தணப் புலவர்கள் ஆதிபுரியினை அடைந்து அடியாரைப் பேரருளுடன் பெரிதும் ஆதரிக்கும் பிறையணி வள்ளலை அடுத்தடுத்துப் பணிந்து பரவிப் பிரியாவிடை பெற்று ஆடகபுரியை அடைந்தனர்.

வேறு சிலர் வேந்தனிடஞ் சென்று மன்னர் மன்னனே! தங்களுக்கென்று வைத்திருந்த விலையேறப்பெற்ற வேறெங்கும் கிடைக்க வொண்ணாத வியத்தகு மணியினை ஏலேலசிங்கர் ஓர் அந்தணருக்குக் கொடுத்துவிட்டார் என்று கூறினர். அதனைக் கேட்ட வேந்தன் அளவிலாச் சினங்கொண்டனன். உடனே ஏவலரை விட்டு ஏலேலசிங்கரை அழைத்து வரப் பணித்தனன். அவர்களும் செட்டியாரை அழைத்துக்கொண்டு வந்து வேந்தன் முன்விட்டனர், வேந்தனும் மணியினைப்பற்றி மனநடுக்கத்துடன் வினவினன். செட்டியார் வேந்தே! மாணிக்கம் வைத்தபடியே இருக்கிறது. இன்று நாள் நன்றன்று. நாளைக் கொண்டு வந்து கொடுக்கிறேன் என்றனர். வேந்தன் சினத்தினை அடக்கிக் கொண்டு அங்ஙனமே ஆகட்டும் போய் வருக என்றனன்.

செட்டியார் சிவன் திருவடியினை மறவா உள்கலுடன், அதுவே ஏக்கமாய்ப் படுத்துத் துயில் கொண்டனர். இறைவன் அவர்தம் கனவில் எழுந்தருளிச் செட்டியாரே அஞ்ச வேண்டா. வேண்டிய! உயர்ந்த மணிகள் உன்பெட்டியில் இருக்கின்றன. வேந்தனுக்குக் கொடுக்கக் கடவாய் என்றருளினன். திருவருளால் கனவுகண்டு விழித்துச் சிவபெருமானை உள்குதலாகிய தியானத்திலமர்ந்திருந்தனர். பொழு

தும் விடிந்தது. வேந்தனின் ஏவலாளர்கள் செட்டியாரை அழைத்துக்கொண்டு வேந்தன் முன் விட்டனர்.

வேந்தன் மிக்க சினங் கொண்டு எங்கே மாணிக்கமென்று கேட்டனன். செட்டியார் ஐயனே! யான் என் பெட்டியைத் திறந்து மாணிக்கத்தை எடுத்து வருவதற்குள் ஏவலாளர்கள் என்னை அழைத்துக்கொண்டு வந்து விட்டனர் என்றனர். அதனைக் கேட்ட வேந்தன் நீர் சொல்லுவது உண்மையானால் அம்மாணிக்கப் பெட்டியை இங்கு அழைப்பீராக என்றனன். சிலரைச் செட்டியார் வீட்டுக்கு ஏவிப் பெட்டியைக் கொண்டு வரச் செய்தனன். பெட்டியும் வந்து சேர்ந்தது. செட்டியார் தம்மிடத்திலிருந்த திறவு கோலால் திருவருளை உன்னி அப் பெட்டியைத் திறந்தனர். அதனுள்ளிருந்த ஒரு பையினை எடுத்து அவிழ்த்தனர். அதிலிருந்து ஒரு மாணிக்கத்தை யெடுத்து வேந்தன் கையில் கொடுத்தனர்.

அம்மணியினை வேந்தன் பெற்றுப் பார்க்கும் அளவில் அது பலகோடிப் பகலவர் ஒருங்கு கூடினாற் போன்று பேரொளி பரப்பிற்று. வேந்தன் கண்டு அளவிலா மகிழ்வு கொண்டனன். செட்டியாரை நோக்கி இன்னுமொருமணி யினை எடுத்துத்தாரும் என்றனன். செட்டியாரும் அங்ஙனமே ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொடுத்தனர். வேந்தன் கண்டு அவைகளைப் பார்க்கக் கண் கூசினன். உடனே செட்டி யாரை அணைத்துக் கொண்டு மிகவியந்து பாராட்டினன். பாராட்டிச் செட்டியார்தம் வளமனைவரைக்கும் வேந்தன் காலால் பின்தொடர்ந்து நடந்து வந்தனன். பல முகமனாகிய சிறப்புரைகள் மொழிந்து மீண்டனன். செட்டியாரும் திரு வொற்றியூர்த் தியாகராசப் பெருமானை எப்பொழுதும் இடை யறாது உள்கிக் கொண்டிருந்து இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று அழியாச் செல்வமுடன் வாழ்ந்துவந்து சிவபெருமான் திருவடிநிழலை எய்திப் பேரின்பமுற்றனர்.

திருவொற்றியூர்ச் சிறப்பு

அப்பர் பெருமானர் "கருவுற்ற நாண் முதலாக" என்னும் திருப்பாட்டில் "திருவொற்றியூரா திருவால வாயா திருவாரூரா" என மூன்று திருவிளிகள் ஓதியருளி னர். இம்மூன்றும் முறையே ஒருபுடையொப்பாக அன்பு

அறிவு ஆற்றல்களைக் குறிப்பனவாம். நன்னெறிவாழ்க்கையின் குறிக்கோள் சிவபெருமானின் நற்ருள் அடைதல், அதன்பொருட்டு வழித்துணையாயும் வையத்து வாழ்க்கைத் துணையாயும் திருவருளால் ஆண் பெண் இருவரும் மண முடித்து மருவி வாழ்கின்றனர். அவர்கள் காதலரென அழைக்கப்படுவர். காதலர்—தம்பதிகள். இவர்கள், ஒருவனும் ஒருத்தியுமாய்ச் சிவபெருமான் திருவடியை எய்தும்வரை ஒற்றித்து வாழ்தல் வேண்டும். ஒருவர் முன்னீங்கினுலும் மற்றவர் அவர் நினைவோடிருந்து அவரையும் சேர்த்துக்கொண்டு திருவடி சேர்தல் வேண்டும். இவ்வுண்மை வருமாறுணர்க:

"பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர்
போனகஞா னம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல் பெறுந் தவத்தி ஞரைச்
செப்புவதியா மென்னறிந்து தென்னர் கோமான்
மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசில் நெறி யவரோடுங் கூட ஈசர்
அடிநிழற்கீ ழமர்ந்திருக்க அருளும் பெற்ருர்."—
—12.மங்கையர்க்கரசியார்

சம்பந்தப்பெருமானுர் போன்று காதலியைக் கைப்பற்றிக் கொண்டே கடவுள் திருவடியைச் சேரும் பேறு பெறுதலும் சைவச் செந்நெறி மாண்பேயாம். இவற்றுக்கு முற்றுமாருக நம்பியாரூரர் திருவரலாறு அமைந்துள்ளது. அஃது உண்மைக்கு மாருஞர் உறும் தண்டனை காட்டுதற்கேயாம். நம்பியாரூரர் ஆணையை மீறியதனுல் கண்ணிழந்தார், பிணியுற்ருர். வாழ்க்கைத்தவறுதலால் பரவை நாச்சியாரால் ஊடப்பெற்று வாட லுற்ருர். பின் இருதலையானும் மன்னிப்பெய்திக் கண் பெற்றும் நோயற்றும் கூடப்பெறும் வாழ்வுற்ருர். இவற்றை வருமாறு நினைவு கூர்க:

இல் வாழ்க்கை என்ப திறைவனடி எய்துதற்குச்
செல்லும் வழித்துணையாய்ச் சேரிருவர்—ஒல்லுவகை
நீங்காது வாழ்தல் நிறை கற்பாம் நீங்க நின்ருர்
ஓங்கடிமை அன்றி உன்னுர் வேறு,
வையத் தொருவன் ஒருத்தியொடு வாழஇறை
செய்த முறை மீறினர்பால் தீத்தண்டம்—எய்துமெனக்

காட்டினர் ஆரூரர் கண் கெடுத்தே ஊடலால்
காட்டும் பரவையருங் காண்.
ஆரூரர் கண்ணிழத்தல் ஆணையினை மீறலினும்
சீரூர் பரவையார் செய்யூடல்—பாரூரில்
வாழ்க்கைத் தவறலினும் மன்னிப்பு மாணடிசேர்
வாழ்க்கை வழித்துணைக்காம் வாழ்வு.
வெய்ய ஒறுப்பதனை மன்னித்து வீடுசெயல்
சைவத் தனிச்சிறப்பாம் சால்புணர்த்த—ஐயனும்
கண்ணளித்தான் நோய் நீக்கி கைக்கொடுத்தாள்
விண் புகழ் ஆரூரர்க்கு வேறு. [பேர்பரவை

சைவச் செந்நெறியில் நங்கைமார்க்கு முன்னுள் நல்கியுள்ள தனிப் பேருரிமை சங்கிலிநாச்சியார் பால் நன்குணரலாம். இத்திருவொற்றியூரினின்றும் சம்பந்தப் பெருமான் திரு மயிலைக்கு எழுந்தருளி எற்புக் குடத்தினின்றும் பூம்பாவை யம்மையாரைத் திருவருளால் வருவித்தருளினர். அப்பர்பெரு மானரைத் திருமயிலைனிறுமித் திருவொற்றியூர்க்கு வர ஒற்றி யூரான் காட்சியருளினன் அவ்வுண்மை "கடிய விடையேறி" எனத்தொடங்கும் திருத்தாண்டகத் திருப்பாட்டானுணரலாம். இத்திருவூர் தொண்டைநாட்டைச் சார்ந்த முப்பத்திரண்டு திருவூர்களுள்ளும் இருபதாவதாகக் காணப்படும். மூவர் தேவாரமும் பெற்ற சிறப்புடையது. சம்பந்தப்பெருமானர் திருப்பதிகம் ஒன்று அப்பர் பெருமானர் திருப்பதிகம் ஐந்து சுந்தரப்பெருமானர் திருப்பதிகம் ஒன்று. ஆகத்திருப்பதி கங்கள் ஏழு உள்ளன. சம்பந்தப்பெருமானரும், சுந்தரப்பெரு மானரும் திருப்பதிகம் ஓதுவாரெய்தும் பயனைத் திருக்கடைக் காப்பில் ஓதியருளினர். அப்பர் பெருமானர் மூன்று திருப்பதி கங்கள் மட்டிலும் பயன் ஓதியருளினர். அம்மூன்றனுள் இத் திருவூர்த் திருப்பதிகமும் ஒன்று, அம்மூன்று திருப்பாட்டும் வருமாறு:

"மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே." —4, கக—க0

"வரைகளொத் தேயுயர்ந்த மணிமுடி அரக்கர்கோனை
விரையமுற் றறவொடுக்கி மீண்டுமால் செய்தகோயில்
திரைகள்முத் தால்வணங்குந் திருவிரா மேச்சுரத்தை
உரைகள்பத் தாலுரைப்பார் உன்குவார் அன்பினலே"
4—61—11

"வரையி னுயர் தோளுடை மன்னனை
வரையி னூர்வலி செற்றவர் வாழ்விடம்
திரையி னூர்புடை சூழ்திரு வொற்றியூர்
உரையி னற்பொலிந் தாருயர்ந் தார்களே." 5.24—10.

இத்திருவொற்றியூரின்கண் அப்பர் பெருமானுர்க்குத் தனித் திருக்கோவில் உள்ளது. ஆரூரர் சங்கிலிநாச்சியார் திருமண நினைவாக மாசித்திங்களில் மகிழடி சேவை நிகழ்கின்றது. திருக்கோவிலில் முதற்சுற்றில் நம்பியாரூரர் பரவை சங்கிலியர் மூவரும் அமர்ந்த தனிக்கோவிலுள்ளது.

பட்டினத்துப் பிள்ளையார்

சோழவள நாட்டில் காவிரி கடலொடு கலக்குமிடம் காவிரிப்பூம்பட்டினம். இது முற்காலத்து சோழர் தலைநகராயும் துறைமுகமாயும் இருந்தது. அதற்குப் புகார் என மற்றொரு பெயரும் உண்டு. துறைமுகமாதலின் வணிக மக்கள் பெரும் பான்மையராய் வாழ்ந்திருந்தனர். பெருஞ் செல்வமிக்காரா யுமிருந்தனர். அச்செல்வருள் தலைமை சான்றவர் சிவனேயச் செட்டியார். அவர்தம் அருமை மனைவியார் ஞானக்கலை அம்மை யார் அருந்தவப்பேற்ருல் ஓர் ஆண் மகவு பெற்று மகிழ்ந்தார். அம்மகவுக்குத் திருவெண்காடர் எனத் திருப்பெயரிட்டனர். அதற்குக்காரணம் திருவெண்காட்டுச் சிவபெருமான் திருவருளால் அப்பிள்ளை தோன்றியமை. பிள்ளையின் ஐந்தாண்டுப் பருவத்தில் சிவனேயச் செட்டியார் சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தனர்.

திருவெண்காடர் நல்லாசிரியரை அண்மி முறையுறக்கற் றுத்துறை போய புலமைமிக்க வல்லாராயினர். ஒழுக்கமும் விழுத்தவச் சிவபக்தியும் உடையராய்த் திகழ்ந்தனர் பதினாறுண்டுப்பருவம் வந்தெய்தியது. அவ்வூரில் தம்மரபில் சிவ சிதம்பரச்செட்டியாருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் இருவர் தம் அருந்தவத்தால் சிவகலை என்னும் பெண் மகவு தோன்றி வளர்ந்து வந்தது. அப்பெண் மங்கைப்பருவம் எய்தினள். திருவருளால் திருவெண்காடருக்கும் சிவகலை அம்மையாருக்கும் திருமணம் நிகழ்ந்தது. இருவரும் இல்லற வாழ்க்கையைச் செம்மையாக நடத்தி வந்தனர். திருவெண் காடரும் தம்மரபுக்கேற்ப முறையுற வணிகம் புரிந்து பெரும்

பொருள் தொகுத்தனர். பல நல்லறங்களும் புரிந்தனர். பட்டினத்துச் செட்டியார் என்னும் சிறப்புப் பெயரும் பூண்டனர். இவருக்கு முப்பதாண்டாகியும் மகப்பேறு கிடைத்திலது. அதனால் திருவிடைமருதூர்ச் சிவபெருமானை வழிபட்டுத் தவம் புரிந்தனர். திருவிடைமருதூரில் குருக்கள் மரபில் சிவசருமரும் அவர்தம் மனைவியார் சுசீலையம்மையாரும் சிவனடியார்கட்குத் திருவமுது முதலியன அன்புடன் அளித்து வந்தனர். அவர் தம் பெரும்பொருளும் வீட்டுப் பண்டங்களும் செலவாயின. விற்பதற்கு ஏதொரு பொருளுமில்லை. மிகவும் வருந்தினர். அதுகண்டு மருதவாணர் இரக்கமுற்றனர். கனவில் தோன்றினர். வில்வமரத்தடியில் ஒரு குழந்தையிருக்கும். அதனைக்கொண்டு திருவெண்காடர்க்கு நல்கிப் பெரும்பொருள் பெற்று உங்கள் சிவத்தொண்டினை முட்டின்றிச் செய்க என்றருளினன். அவர்களும் அவ்வாறே செய்து பொருள்பெற்றுத் தொண்டியற்றினர்.

திருவெண்காடர் அருமையாகப் பெற்ற அக்குழந்தைக்கு **மருதப்பிரான்** எனத் திருப்பெயரிட்டனர். பாராட்டி வளர்த்தனர். இக்குழந்தை தன் இளமைப்பருவத்தில் படகிலேறி விளையாடுவது வழக்கம். இப்பிள்ளை சித்தமுனிவர் ஆணையால் கந்தருவன் மணிபத்திரன் என்பவன் மீனாய்க்கிடந்தனன். அம்மீனை மருதப்பிரான் மிதித்த அளவில் அக்கந்தருவன் பண்டுபோல் வெளிவந்தனன் என்ப. மருதப்பிரானுக்குப் பதினாறுண்டாயதும் பொருள் தேடிவருவதாகக் கப்பலேறிக் கடல் கடந்து மணிகள் உள்ளழுந்திய எருமுட்டைகளைக் கொண்டுவந்து ஓரருஞ்செயல் நிகழ்த்தியதாகவும் உரைப்ப

இங்ஙனம் மருதப்பிரான் மணிகள் கொண்டுவந்து தந்தைபாற் கொடுத்து உட்சென்று ஒரு சிறு பெட்டியினைத் தாயர்பாற் கொடுத்து அங்கிருந்தாரெவர்க்குந் தெரியாமல் திருவிடை மருதூரை அடைந்து இறைவனோடு இரண்டறக்கலந்தனரென்ப. திருவெண்காடர் தம் அருமை மகனாரைக் காணப் பெருமையால் தேடிவருந்தினர். மனைவிபால் உசாவினர். மனைவியார் மகனார் தம்பாற் கொடுத்துவைத்த சிறுபெட்டியை நல்கினர். திருவெண்காடர் அதனைத்திறந்து பார்த்தனர். காதற்ற ஊசியும் ஓர் ஓலைச்சுருளும் இருந்தன. அச்சுருளில்

"காதற்ற வூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே'' என்று வரையப்பட்டிருந்தது. அதனைக்கண்டதும் திருவெண்காடர் பண்டை மெய்யுணர்வின் தொடர்பால் திருவருள் தூண்ட முற்றத்துறந்தனர். மனைவிக்கு வேண்டுவ மொழிந்து, தம் மேலாளர் சேந்தனாரைக் கொண்டு பொருளெல்லாம் அறஞ் செய்யக் கற்பித்து வெளிச்சென்றனர். ஆங்கோர் திருமடத்துத் தங்கிச் சிவனினைவோடிருந்தனர்.

காவிரிப்பூம்பட்டினம் எங்கும் பித்தரைப்போல் திரிந்து பிச்சையெடுத்தலைந்தனர். அவர்தம் தமக்கையார் மிகவும் நாணங்கொண்டு அவருக்கு நஞ்சுகலந்த அப்பஞ் சுட்டுக் கொடுத்தனர். பட்டினத்துப்பிள்ளையார் அதனைத்திருவருளால் உணர்ந்து, "தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்'' என்று சொல்லி அப்பத்தைத் தமக்கையார் வீட்டுக் கூரைமேல் எறிந்தனர். வீடு தீப்பற்றியது. அதனைக் கண்ட ஊரவர் அஞ்சி அடியில் வீழ்ந்து வணங்கிவேண்டினர். "தங்களைக்கேட்டுப் பிறந்திலம்'' என்றொரு பாடலைப்பாடத் தீயவிந்தது என்றுங்கூறுப. இன்னும் பல அருஞ்செயல் செய்தனர். என்ப, அன்னைபின் ஈமக்கடன் உருக்கமாகப்பாடி நிறைவேற்றினர்.

பின் திருவெண்காடர் திருவிடைமருதூர்க்கு வந்தனர் "தெய்வத்தாமரைச் செவ்விதின் மலர்ந்து'' எனத்தொடங்கும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவைபாடி அங்குத்தங்கியிருந்தனர் பின்னர் இறைவன் திருவாணைப்படி தென்னாடு, சோழநாடு, மலைநாடு கொங்குநாடு, துளுவநாடு தொண்டைநாடு, வடநாடு முதலிய இடங்களெல்லாஞ்சென்று பாடி வழிபட்டு வந்தனர். சோழ நாட்டுக்குச் சென்றிருந்தபோது திருவாரூரிலே நீர்க்கோவை நோயால் உயிர் நீத்த சிறுவனை உயிர்பெற்றெழும்படிச் செய்தனர். கொங்கு நாட்டிலிருந்த போது ஒருநாள் நள்ளிரவில், தமக்குப் பசி மிகுந்தமையால் அருகிலிருந்ததோர் வீட்டிற்சென்று கைதட்டினர். வீட்டவர் அறியாமையினால் கள்வரென்றெண்ணி அவரைப்பிடித்து வீட்டிலடைத்துத் துன்புறுத்தினர். அன்றுமுதல் பிள்ளையார் வரும் வெண்பாவைப்பாடி உறுதியோடிருந்தனர்.

"இருக்கு மிடந்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்க முடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி.''

இனித்துளுவ நாடடைந்திருந்த போது ஓர் அருஞ்செயல் நிகழ்ந்தது. அந்நாட்டிற்சென்று பிள்ளையார் உஞ்சேனை மாகாளத்தை யண்மினர். இறைவனை வணங்கினர். பிள்ளையார் கோயிலில் அமர்ந்தனர். சிவனினைவி லழுந்தியிருந்தனர். கள்வர்கள் அவ்வூர் அரசன் அரண்மனையில் பெரும் பொருள் களவு செய்துகொண்டு வந்தனர். சிலர் தங்கள் எண்ணம் நிறைவுற்றமைக்கு மகிழ்ந்து விலையேறப்பெற்ற மணிமாலையொன்றைப் பிள்ளையார் மேல் வீசி எறிந்தனர். அது தன்னை மறந்து சிவனினைவிலிருந்த பிள்ளையார் கழுத்தில் விழுந்தது. காவலர்கள், பிள்ளையாரைக் கள்வனென்று தவருக எண்ணி அரசன் முன் கொண்டுபோய் நிறுத்தினர். அரசனும் ஆராயாமல் கழுவிலேற்றும்படி ஆணையிட்டனன். அடிகளும் கழுமரத்தின் அண்டையில் சென்றனர். சென்று,

"என்செய லாவதி யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோ யிங்ஙனேவந்து மூண்டதுவே"

என்று இறைவனை வேண்டிப்பாடினர். பாடுதலும் அக்கழுமரம் தீப்பற்றி எரிந்து சாம்பராயிற்று. அரசனறிந்து அஞ்சி வந்து அடிவணங்கி அடிகட்கு அடிமையாகினன். அடிகளும் அரசனைத் திருவிடை மருதூர்க்குச் செல்லுமாறு ஆணையிட்டுப் போக்கினர். தாம் வடநாடு சென்றனர். அவ்வரசனே பத்திரகிரியாரென்ப, பத்திரகிரியார் திருவிடைமருதூர் சென்று அடிகண் மாட்டும் இறைவன்மாட்டும் நீங்கா அன்புபூண்டு சில நாள் ஒழுகி வந்தனர்.

வடநாடு சென்ற அடிகள் திரும்பத் திருக்குற்ருலம் வந்தெய்தினர். பின் திருவிடைமருதூர் வந்து சேர்ந்தனர். இறைவனை வணங்கினர். பத்திரகிரியாருக்கு வீடு பேறளித்தனர் திருவெண்காட்டை யடைந்தனர். தன் பொருளை யெடுத்து அறஞ்செய்த சேந்தனுரை அரசன் சிறையிட்டமை யறிந்தனர். திருப்பாடலருளித் தளைநீக்கிச் சிறை மீட்டனர். அதன் பின்பு சீர்காழியை யடைந்து "திருக்கழுமல மும்மணிக்கோவையும், தில்லை சேர்ந்து "கோயில் நான்மணி மாலையும்" பாடினர். திருஅண்ணுமலையை வணங்கிக்கொண்டு திருக்

காஞ்சியம்பதிக்கு வந்தனர். கச்சித்திருவந்தாதி, திரு ஏகம்ப மாலை, கச்சித்திருவகவல் முதலியனபாடி இறைவனை வணங்கினர். திருக்கழுக்குன்றம், திருவாலங்காடு, திருக்காளத்தி முதலிய திருவூர்களைத்தொழுது பாடல்களருளினர். இறைவன் திருவிடைமருதூரிலளித்த திருவாணைப்படி திருவொற்றியூரை அடைந்து திருவொற்றியூர்த்தொகை முதலிய அருட் பாடல்களைப் பாடிக்கொண்டு திருவொற்றியூரில் தங்கியிருந்தனர். சிலநாள் கழித்து இறைவன் திருவருள் முழுவதும் கைவரப்பெறுதலும் முதல்வன் முறையீடு, அருட்புலம்பல் முதலியன பாடிப் பட்டினத்துப்பிள்ளையார் ஒற்றியூரின் ஊர்ப்புறத்தே மாடு மேய்க்கும் சிறு பிள்ளைகளோடு வழக்கப்படி விளையாடு போல விளையாடினர். அருகிலிருந்தோர் குழியிலமர்ந்து தம்மை மணலுஞ் செடிகொடிகளும் கொண்டு வந்து மூடச்செய்தனர். இறைவனுடன் இரண்டறக்கலந்தனர். அவ்விடத்துச் சிவக்குறியாய்க் காணப்பட்டனர். அன்று முதலாக இத்திருவொற்றியூர்க்குச் செல்லும் மெய்யன்பர்கள் அனைவரும், பட்டினத்துப்பிள்ளையார் திருக்கோவிலிலும் சென்று வழிபடும் பெறலரும் பேறெய்தினர். பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் பதினொராந்திருமுறைக்கண் கக–ஆம் எண்ணுமுறைக்கண் அமைக்கப்பட்டது. அவை வருமாறு: 1. கோயின் நான்மணி மாலை 2. திருக்கழுமலமும் மணிக்கோவை, 3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, 4 திருவேகம்பமுடையார் திருவந்தாதி 5. திருவொற்றியூர் ஒருபா ஒருபது, ஆக ஐந்து நூல்கள் காணப்படுகின்றன. திருவொற்றியூர் ஒருபா ஒரு பதில்வரும் திருபாட்டு ஒன்றில் சிவபெருமானின் திருக்கோல உண்மை யுருவகம் உணர்த்தப்பட்டுள்ளது. அது பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் "முப்புரமாவது மும்மல காரியம்" என்னும் தனித்தமிழ்த் திருமாமறைக் கொள்கையோ டொத்ததாகும். அத்திருப் பாட்டு வருமாறு:—

"தூமதி சடைமிசை சூடுதல் தூநெறி
யாமதி யானென அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனேறு ஏறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
5. அது அவள் அவனென நின்றமை யார்க்கும்
பொதுநிலை யான்என உணர்த்திய பொருளே

முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்கதென்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதம் நானென நவிற்று மாறே
மூவிலை ஒரு தாள் சூலம் ஏந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யானென உணர்த்திய வாறே
நிலநீர் தீவளி உயர்வான் என்றும்
உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருளுநற் பூதப் படையோய் என்றும்
தெருள நின்றுஉலகினில் தெருட்டு மாறே
ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும்
ஒக்கும்நின் பெருமை உணர்த்தவும் உணராத்
தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வன்மையிற் சுழலும் மாந்தர்க்கு
ஆதி யாகிய அறுதொழி லாளர்
ஓதல் ஓவா ஒற்றி யூர
சிறுவர்தஞ் செய்கையிற் படுத்து
முறுவலித் திருத்திநீ முகப்படும் அளவே''—6.

ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரு நிரப்பாதே—யாராயோ
எண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம்.''—14.

போதும் பெரு விடில் பச்சிலை யுண்டு
புனலுண்டெங்கும்
ஏதும் பெருவிடில் நெஞ்சுண் டன்றே
இணை யாகச்செப்பும்
சூதும் பெருமுலைப் பங்கர்தென் தோணிபு
ரேசர்வண்டின்
தாதும் பெருத அடித்தா மரைசென்று
சார்வதற்கே.'' —12

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்
பிள்ளையைப் போல்
யாருந் துறக்கை யரிதரிது—நேரே
மனத்துறவும் அப்படியே மாண இவற்றில்
உனக்கிசைந்த வாறென்றே ஓர்''

—தாயுமானவர்—

95/6-34

வாகீச முனிவர்

சென்னைக்கடுத்த கோடம்பாக்கத்தில் **பரமானந்த முனிவர்** என்னும் சித்தாந்தச் செல்வர் ஒருவர் இருந்தனர். அவர்பால் சித்தாந்த நூல்களையெல்லாம் ஐயந்திரிபு அறக்கற்றவர் "வாகீச முனிவர்" இவர் திருவொற்றியூரில் கோளகி சந்தான சைவ மடத்திலிருந்து கொண்டு சித்தாந்த நூல்களை நன் மாணவர்கட்குப் போதித்து வந்தார். அது வருமாறு :

"சென்னைக்கு வடக்கில் திருவொற்றியூரில் கோளகி சந்தானத்தில் சைவ மடம் ஒன்று உள்ளது. அது சிவாகம ஞானப் பணி புரிந்து வந்தது. கி.பி. பத்துப் பதினொராம் நூற்றாண்டில் நிரஞ்சன தேவர் இம் மடத்திலிருந்து கொண்டு சிவாகமம் போதித்து வந்தார். பல்லவ வேந்தருள் மூன்றாம் நந்தி வன்மன் மகன் கோவிசயகம்ப வன்மன். அவனது பத்தாம் ஆட்சி ஆண்டில் நிரஞ்சனதேவர் திருவொற்றியூரில் சிவன் கோவில் ஒன்று எடுப்பித்தனர். அதற்கு "**நிரஞ்சன தேவேச்சுரம்**" எனப் பெயரிட்டனர். நிலங்களையும் நிவந்தமாக விட்டனர். இவர் மாணவர் சதுரானன பண்டிதர். இவர் சிவாகம வல்லார்.

இச் சதுரானன பண்டிதர் கேரள நாட்டிலிருந்து வந்தவர். இளமையில் இவர் இராட்டிரகூட வேந்தனான வல்லபனுக்கு நண்பர். பின்பு சோழநாட்டுக்கு வந்து சோழன் இராசாதித்தனுக்குத் துணைவராய் இருந்தார். இராட்டிரகூட வேந்தனால் சோழன் இறந்தான். அவனுடன் தன்னுயிர் போகாமைக்கு வருந்தினர். வாழ்க்கையில் வெறுப்புற்றனர். நிரஞ்சன குரவரையடைந்து துறவு பூண்டனர். இங்ஙனம் இராட்டிர கூட கன்னர தேவனான மூன்றாம் கிருட்டிண தேவருடைய இருபதாம் ஆட்சி ஆண்டில் தோன்றிய கல்வெட்டொன்றால் தெரிய வருகிறது. கேரள நாட்டு வழக்காறுகள் சில திருவொற்றியூர்த் திருக்கோவிலில் காணப்படுவதற்கு இவர் காரணராவார்.

நிரஞ்சன தேவர்க்குப் பின் இச் சதுரானன பண்டிதர் அத் திருமடத்துத் தலைவரானார். அவர் வழி வந்தோரும் தங்களைச் சதுரானன பண்டிதரென்றே கூறிக் கொண்டனர். அதனால் தான் பத்தாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் பல சதுரானன பண்டிதர்கள் காணப்படுகின்

றனர். இவர்கள் இருந்த மடமும் சதுரானன பண்டிதர் மடம் என்றே வழங்கப் பட்டது. " தடக்கையான் சதுரானன பண்டிதன் மடத்துளாள் என் மனத்துறை வல்லியே " என நிலவும் கம்பர் பாட்டும் இதனை வலியுறுத்துகின்றது. சதுரானன பண்டிதர் தம் ஞான குரவரான நிரஞ்சன தேவர் பெயரால் திருவொற்றியூர்க்கோயிலில் நிவந்தங்கள் ஏற்படுத்தியுள்ளனர். இவவுண்மை அவ்வூர்க் கல்லெழுத்தாலறியலாம்.

முதல் இராசேந்திரன், முதல் குலோத்துங்கன் முதலிய சோழ வேந்தர்கள் காலத்தில் சதுரானன பண்டிதர்கள் சிறந்து விளங்கினர். முதல் இராசேந்திரன் திருநாளாகிய மார்கழித் திருநாளன்று திருவொற்றியூர் இறைவன் நெய்யாடியருளுதற்கு நிவந்தமாக சதுரானனர் நானூற்றைம்பது காசு வைத்ததாக ஒரு கல்லெழுத்துக் கூறுகிறது. அதன்கண் " திருவொற்றியூர்த் திருமயானமும், மடமுடைய சதுரானன பண்டிதன் " என்று குறிக்கப்படுகின்றார். வேறு கல்லெழுத்துக்களும் அவரை மடமுடைய சதுரானன பண்டிதன் என்றே குறிக்கின்றன.

வாகீச முனிவர் கோடம்பாக்கத்திலிருந்து திருவொற்றியூர் வந்து சித்தாந்தம் போதித்து வந்தனர். இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் அவனது ஒன்பதாம் ஆண்டில் திருவொற்றியூரில் பங்குனி உத்திரப் பெருவிழா நடைபெற்றது. அதற்குச் சோழ வேந்தனும் வந்திருந்தான். ஆறும் திருநாளன்று திருவொற்றியூர் இறைவனான படம் பக்க நாயக தேவர், திருமகிழின் கீழ் திருவோலக்கம் செய்தருளினார். அக்காலை " ஆளுடை நம்பி ஸ்ரீபுராணம் " விரிவுரை செய்யப் பட்டது. அதனை அருகிருந்து ஒருங்கு கேட்டு இன்புற்றோருள் சதுரானன பண்டிதரும் வாகீச பண்டிதரும் சிறந்து விளங்கினர். வாகீச பண்டிதரே அப்புராணத்தை விரிவுரை செய்தனர். எனக் கருதுபவரும் உண்டு. அப்பொழுது தோன்றிய கல்லெழுத் தொன்றில் கை எழுத்திட்டோரில் முதல்வராக " இப்படிக்கு இவை மடமுடைய சதுரானன் எழுத்து " என்றும் இவர்கள் கையெழுத்திட்டுள்ளனர். திருவொற்றியூரில் வாகீச முனிவர் உறைந்த காலத்து சித்தாந்த நுணுக்கங்கள் அனைத்தையும் செந்தமிழ் அகவற் பாக்களால் " ஞானமிர்தம் ' என்னும் பெயரான் சிறந்த நூலொன்று இயற்றியருளினர் அஃது இன்றும் நின்று நிலவுகின்றது. என்றும் நின்று நிலவும்.

இராமலிங்க அடிகள்

இராமலிங்கப் பெருமானுர் சென்னைக்கு அணித்தாயுள்ள இத் திருவொற்றியூரை அடைந்தனர்; நாடொறும் அங்குள்ள கோயின் மரமாகிய அத்தி மரத்தடியில் புலனடக்கிப் புரியும் அகத்தவத்தமர்ந்து ஒற்றியூர்ப் பெருமானையும், திரிபுர சுந்தரி அம்மையையும் வழிபட்டு வந்தனர். ஒருநாள் அடிகள் மாணவர் பலரும் தற்சூழத் திருவொற்றியூருக்கு வந்துகொண் டிருந்தனர். இடையே மழை வந்தது. மாணவருடன் குறுக்கு வழியில் நுழைந்தனர். நுழைந்ததுதான் தெரியும். அனைவரும் திருவொற்றியூ ரடைந்தனர்.

மற்ருெரு நாள் அடிகள்வழிபட்டு விட்டு ஓரிடத்திற் கண் படைகொண்டனர். கள்வனெருவன் வலது காதிலணிந்திருந்த கடுக்கனைக் கழற்றினுன். இதனையுணர்ந்த அடிகள் உணரா தார் போன்று புரண்டனர். அக்கள்வன் இடது காதுக் கடுக் கனையும் கழற்றிக்கொண்டு போய்விட்டான். ஒருநாள் அடிகள் பட்டினத்துப் பிள்ளையார் திருக்கோயிற்றிருக் குளத்தினருகே வந்தனர். வரவும் அவ்வாலயத் தொண்டினைப் பல்லாண்டு களாக பண்புடன் புரிந்து வரும் முதிய அம்மையார் கண்ட னர். வணங்கினர். தமக்கு நல்வழிகாட்ட வேண்டினர். அடிகளும் ஒரு கை மணலை வாரி அம்மையார் கையிற் கொடுத்து மூடிக்கொள்ளப் பணித்தனர். அம்மையாரும் மூடிக் கொண்டனர். அடிகளும் மறைந்தனர். அம்மையார் கையைத் திறந்து பார்த்தனர். அவ்வளவும் தனித்தனிச் சிவக்குறி களாகக் காணப்பட்டன. அம்மையாரும் அடிகள்பால் பத்தி பூண்டனர்.

ஒரு நாள் திருவொற்றியூரை வழிபட்டு நெடுநேரம் கழித்துச் சென்னையிலுள்ள தம் வீட்டிற்கு வந்தனர். கதவைத் தட்டினர். அண்ணியார் தூங்கிவிட்டனர். அடிகள் வெளி யிற்படுத்துத்துயின்றனர். அண்ணியாரைப்போன்று ஓர் அம்மையார் வந்து எழுப்பி அன்னம் படைத்து உண்பித் தனர். அடிகளும் உண்டனர். சிறிது நேரம் கழித்து அண்ணி யார் வந்து எழுப்பினர். உண்டமை உரைக்க இருவரும் வியந் தனர். அம்மை திரிபுரசுந்தரியாரே வந்தருளினர் என்று தெளிந்தனர். மெய்த்தொண்டு புரிந்துவந்தனர். அடிகளார் பாட்டுவருமாறு:

"சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தைவினை தொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறு நோயால் நிகழவைத்தல் நீதியோ
எந்தைநீ யொற்றி எழுத்தறியும் பெருமானே."

திருவொற்றியூரான் அடிமை

வற்ருக் காவிரி பாயும் சோழவள நாட்டுத் தஞ்சைக் கருந்திட்டைக் குடியில் மந்தாரடிச் செல்லப்பிள்ளையார் கோயில் தெருவில் வேளாளர் மரபில் நற்பண்பு வாய்ந்த பஞ்சநதம்பிள்ளை யென்னும் ஒரு சான்றவர் தம் கற்புறு மனைவி சுந்தரம்மாளுடன் இல்லறம் பேணி வந்தனர். இவ்விருவர் தவப்பேற்ருல் ஐந்தாவதாக ஓர் அரிய ஆண் மகவு பிறந்தது. அம்மகவுக்கு இராமசாமி எனப் பெயரிட்டனர். இவர்தம் இளமைப் பருவத்தில் சிவகுருநாதர் இனிய செந்தமிழ்க் கல்வியை நன்முறையிற் கற்பித்தனர். இவரும் முற்றவப் பேற்ருல் எளிதினிற் கற்றனர். உற்ற சிவ வழிபாட்டினையும் பற்றிப் பயின்று கடைப்பிடித்தொழுகினர்.

அக் காலத்தில் அங்குள்ள கருவேல நாதர் திருமுன்னில் மறையோதும் ஒலிகேட்டு இச்சிறியார் விருப்பத்துடன் அங்குச் சென்ருல் அப்பார்ப்பனர் இவரைஅச்சுறுத்தி வெருட்டுவர். அப்போதெல்லாம் மனம் வருந்தி நமக்கு மறையோதுங் காலம் எப்பொழுது வருமென்று எண்ணிக்கொண்டேயிருந்தனர். தன்னுடைய பதினுரும் அகவையில் சென்னைக்கு வந்தனர். வணிகம் செய்து பொருளீட்டிவந்தனர். திருச்சியிலுள்ள நற்பண்புகளுக்கு உறைவிடமாகிய மீனும்பாளை மணம் செய்வித்தனர். இவ்விருவரும் காதல்மிக்க கருத்து ஒருமித்து இல்வாழ்க்கையினை நல்ல முறையாக நடத்தி வந்தனர். இவர்களுக்கு இரண்டொரு மக்களும் திருவருளால் பிறந்தனர்.

இராமசாமித் தொண்டர் பல்வேறு வணிகம் புரியினும், யோக நூல் பயிறல், அடியார்க்கமுதளித்தல், சிவ வழிபாடியற்றல் முதலியவற்றில் மிகக் கருத்துக்கொண்டு ஊக்கமுடன் உழைத்து வந்தனர். திருவருளால் நாடொறும் திருவொற்றியூர் சென்று விடாது சிவ வழிபாடியற்றிவந்தனர். வழிபாட்டின் சிறப்பால் செல்வப் பெருக்கமும் மிக்குடையராயினர். நல்ல குணங்களும் சொல்லொணு நிலையில் நாளும்

வளர்ந்தன. தாம் புரிந்துவரும் சிவத் தொண்டுகளை மேலும் மேலும் சால்புறச் செய்து வந்தனர். செல்வம் இறைவனுடைமை என்னும் மெய்யுணர்வால் அனைத்தையும் அரன் பணிக்கே ஆக்கி வந்தனர்.

ஒருநாள் பிரம தீர்த்தத்தில் நீராடி எழுந்தனர். ஒரு சிவனடியார் அவரை நோக்கி நீர் இத்திருக் கோவிலைப் புதுப்பித்தல் வேண்டுமென்றனர். இவரும் அதை இறைவன் கட்டளையே என்று கொண்டு புதுப்பிக்கத் தொடங்கினர். பூசை, திருவிழா, திருவிளக்கு முதலியன முட்டின்றி நடந்து வருமாறுஞ் செய்தனர். பன்னிரண்டு ஆண்டுகள் நாடொறும் திருவொற்றியூரானைப் போற்றி வழிபட்டு வருவதென நோன்பெடுத்துக்கொண்டனர். இந்நோன்பினை விடாது செய்து கொண்டுவருநாளில் இவர்தம் மக்கள் இறந்தனர். ஒரு நாள் ஒரு மகன் இறந்துகிடந்தனன். அதனைப் பொருட்படுத்தாமல் அப்பூதியடிகளாரைப் போன்று உறுதியுடன் காலையில் திருவொற்றியூர் சென்று வழிபட்டு மீண்டனர். பின்பு மகனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் செய்து முடித்தனர்.

இவரது செல்வப் பெருக்கில் அழுக்காறு கொண்ட இழுக்குடைக் கொடுமனத்தோர் சிலர் இவருடன் பகைத்து இவரைக் கொலை செய்யப் பொழுது நோக்கியிருந்தனர். ஒருநாள் நண்பர்களுடன் திருவொற்றியூர்க் கடற்கரை சென்று கடலை நோக்கிக் கடலுக்கும் சிவபெருமானுக்குமுள்ள சில ஒப்புமைகளை விரித்து உரையாடி மகிழ்ந்துகொண்டிருந்தனர். நண்பர் விலகி இவர் தனித்திருக்கும் நேரம் பார்த்துப் பகைவன் ஒருவன் பின்புறமாக வந்து கூரிய வாளால் கழுத்தைக் குறிவைத்து வெட்டினன். அவ்வெட்டுக் கழுத்திற் படாமல் தவறிவிட்டது. இரண்டாமுறை வெட்டினன். அப்பொழுதும் அவ்வெட்டுக் கழுத்திற்படாமல் வேறு சில விடங்களில் எளிதாகப்பட்டது. திருவருளால் அவனுடைய கண்கள் மூடுண்டன. அவன் மண்மேல் வீழ்ந்தனன். அப்பகைவனுடைய வாள் இராமசாமியார் கைக்கு வந்தது. அற்குள் நண்பர்களும் வந்து சூழ்ந்தனர். இந்நிகழ்வு தொண்டர் தம் தொண்டின் பெருமையும், அவர்தம் உறுதிப்பாடும் அவருக்குத் திருவொற்றியூரான் செய்யும் ஆரருளும் விளக்க நேர்ந்த அரியநிகழ்வாகும்.

இந்நிகழ்வின் பின் சிறு காயத்துக்கு மருந்து செய்யும் ஆங்கில மருத்துவர் வெளிச் செல்வதைத் தடுத்தும் கேளாமல் திருவொற்றியூரையடைந்து வழிபட்டு வந்தனர். இவர்தம் பத்திமிகுந்த உறுதிப்பாடு அறுபான்மும்மை நாயன்மார் தம் மெய்யன்பின் உறுதிப்பாட்டை ஒப்பதாகும். சின்னாட்களுக்குப் பின், அப்பகைவர்கள் அனைவர்கள் நம் இராமசாமித் தொண்டரை வந்து சரணடைந்தனர். யாண்டும் மனவலியினும் படைவலியினும் திருவருள்வலியே பெரிதென்னும் மெய்ம்மையினை இதனால் உணரலாம்.

இங்ஙனம் பன்னிரண்டு ஆண்டுகளாகத் தாம் எடுத்துக் கொண்ட நாள்வழி, வழிபாட்டு நோன்பு திருவருளால் நிறைவுற்றதுடன் திருக்கோவிற்றிருப் பணியும் நிறைவுற்றது. திருவருளால் இவர்தம் வாழ்நாள் முற்றும் தவநாளாகத் திருவருளின்புடன் பெருகிவந்தன. சிறந்த ஓர் ஆண் மகவை இந்நாளில் பெற்றெடுத்தனர். அக்குழந்தைக்குச் சிவபெருமானைத் திருவீழிமிழலையிற் கண்ணிடந் தப்பி வழிபட்டு ஆழிபெற்ற கண்ணன் போன்று சிவ வழிபாடியற்றும் சீர்மை தோன்றக் கண்ணன்' என்னும் திருப்பெயர் சூட்டினர். அப்பிள்ளையைப் பாராட்டி வளர்த்துக் கல்வி கற்பித்துவேண்டுவ புரிந்து வந்தனர்.

திருக்கோவில் திருப்பணியை நிழல்காலும் ஒளி சேர் கருங்கல்லால் இழைத்து அழகுறச் செய்வித்தனர். முறையே கருவறை, நடுமண்டபம் (அருத்த மண்டபம்) மாமண்டபம் அகச்சுற்று (உட்பிரகாரம்) முதலியவற்றை அழகுற அமைப்பித்தனர். மேலும் சனகாதிகளும், பட்டினத்தடிகள், பத்திரகிரியார், இராமலிங்க அடிகள் முதலான மெய்யுணர்வு கைவந்த தவத்தோர்களும், தும்புரு கின்னரர், நாரதர் முதலானோர்களும், ஏனைய தேவர்களும் மெய்யுணர்வடைந்து பொய்ப் பிறப்பினை யொழித்தனரன்றோ? எனினும் அவர்கள் இத்திருக் கோவிற்றிருத் தூண்களில் பண்டு வழிபட்டதுபோன்று இன்றும் வழிபட்டு நம்மை வழிப்படுத்துமுறையில் நின்று கொண்டருள்கின்றனர்.

திருவொற்றியூரான் திருவருளால் திருவெண்பாக்கத் திருக்கோவில் திருப்பணியையும் செய்வித்து முடித்தனர். திருவொற்றியூரான் திருக்கோவில் நிறைவுற்றதும் தாது

ஆண்டு, வைகாசி 18-ஆம் நாள் 1936 மே மாதம் 31-ல் பெருஞ் சிறப்புடன் பெரும் பொருட் செலவில் குடமுழுக்குச் செய்வித்து முடித்தனர். இவர்தம் பெயரால் ஒருசிவக் குறியும் நிறுவியுள் ளார். குடமுழுக்கின்போது சாமவேதத்தைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

திருவொற்றியூர்க் கல்லெழுத்தின் பிழிவு.

திருவொற்றியூர்த் தியாகருக்கு 'காரணி விடங்கர்' எனவும் ஒரு திருப்பெயர் வழங்குகின்றது. திருவாரூர் விடங்கருக்குத் 'தஞ்ச விடங்கர்' எனவும் ஒரு திருப்பெயருண்டு. திருவொற்றி யூரில் 'லகுலீக பாசுபாதர்கள்' என்னும் ஒருவகைச் சைவர்கள் இருந்தனர். அவர்கள் காரோண தேசத்தவர்கள். காரண என்பது காரோண எனமருவிற்றென்பது கல்லெழுத்தால் தெரியவருகின்றது.

திருவொற்றியூரின் கண் ' அருளிரக்கப் பிள்ளையார் ' 'குமாரசாமி தேவர்' 'காரணிவிடங்க தேவர்,' 'படம் பக்க நாயகதேவர்,' 'வட்டப்பாறை நாச்சியார்.' முதலிய திருக் கோலத் திருவுருவங்கள் இருக்கின்றன. மேலும் மன்னர் களால் நிறுவப்பட்ட 'அருஞ்சாகீசுர முடையார்', கம்பீசுர முடையார்'. 'விடல்விடுகீசுரர்' என்று வழங்கப்படும் திருவுரு வங்களும் திகழ்கின்றன. சோம சித்தாந்தத்தைத் தழுவிய பௌத்த மதத்தர்களை விலக்குதற் பொருட்டே துர்க்கை, பைரவர் முதலான தேவதைகளின் நிறுவலும், பலிபூசை முதலான நிகழ்வுகளும் ஏற்பட்டிருக்குமென எண்ணுதலுங் கூடும். இவற்றை ஆதிசங்கரர் நிறுத்தி அப்புறப்படுத்தி விட்டனர் என்ப. எனினும் பின்னர் மெல்ல வந்து நுழைந்த தாகவும் தெரிகிறது. இத்திருவூரில் நிரஞ்சன குரு என்னும் செந்நெறி முதல்வர் பெரிய திருமடத் தலைவராக வீற்றிருந் தனர். சதுரானன பண்டிதர், கேரள நாட்டினர். இவர் நிரஞ்சன குருவின் மாணவர். பின்பு இத்திருமடத்திற்குத் தலைவரானர். இவரே, கருவறையாகிய மூலத்தானத் திருப் பணிக்குப் பெருங்காரணராவர்.

ஒரு கல்லெழுத்து வருமாறு

" வெகுதானிய ஸூ தைமீ 7உ புஷல் கோட்டத்தில் தனியூர் ஒற்றியூர், தியாகராஜ சுவாமியார் கோயில் திருப்பணி

முதலான தர்மம் செய்யவேண்டி, ஸ்ரீஹஜாத்து ஓராவது பொது முத்திரைக்கு அதிகாரியாகிய ருஜஸ்ரீ மூததம்பி முதலியார் இராயஸம் கொடுங்கையூர் பெத்துநாயகர் யிவர்கள் முன்பாக உல்லி வெங்கிடேசஞ் செட்டியாருக்கு சீதனத்தார் நிசியத்த (நிச்சயித்த) பட்(டயம்) திருவொற்றியூர் கோயிலில் காலசந்தி உபயமும், மத்துமுள்ள திருப்பணி முதலாகிய தருமங்களும் செய்துகொண்டு தாங்கள் தங்கள் பரிபாலம் பண்ணி (க்கொ)ள்ளக் கடவீர்களாகவும். இந்தப்படிக்கு கணக்கன் ஆயிரங்காத்தான் எழுத்து. வள்ளப்பக் குருக்கள் கையெழுத்து காளத்திக் குருக்கள் கையெழுத்து, ஒற்றியப்பக் குருக்கள் கையெழுத்து. இது 17-வரியில் எழுதப்பட்டிருக்கிறது. (1936-இல் வெளியிடப்பட்டுள்ள சென்னை திருவொற்றியூரான் அடிமை த.ப. இராமசாமி பிள்ளையவர்களின் வெளியீடாகிய "திருவொற்றியூர்த் தலபுராணசாரம்' என்ற நூலில் மேலுள்ள காணப்படுகின்றன. அவர்கட்கு நன்றி உரித்தாகுக).

திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை.

சென்னையை அடுத்துள்ள பல்லவபுரமென்னும் பல்லாவரத்தில் மிகப் பெரும்புகழுடன் வாழ்ந்து மறைந்த தனித் தமிழ் இயக்கத் தலைவர் சிவத்திரு 'மறைமலையடிகளார்' தமக்குற்ற கொடிய நோய் நீங்கப்பெறுமாறு திருவொற்றியூரி லெழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானை வேண்டிக்கொண்டனர். நோயும் நீங்கிற்று (1898, ஜூன், 27), அதன்மேல் அடிகளார் 'திருவொற்றி முருகர்மும்மணிக்கோவை'யைப் பாடினர். இக்காலத்தும் தனித்தமிழ்ப் பாட்டுக்களால் இறைவன் திருவருளை எளிதாகவும் இனிதாகவும் பெறுதல் காணலாம்.

சென்னை-600 008.
163974.
[illegible]

குறள் நெறி பரவட்டும்!

வாணிகம் ஓங்கட்டும்!

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந்தம போற் செயின்—வள்ளுவர்

SCANNED

காஞ்சிபுரம், பனாரஸ் பட்டு சேலை,
சோளி, பாவாடைகளுக்கும்

மற்றும் பலவித நூலாடைகளுக்கும் நியாயம், நேர்மை, ஒரே விலைக் கொள்கையுடைய எங்கள் ஸ்டோர்ஸுக்கு வருகைதந்து பயனடைய வேண்டுகிறோம்.

SCANNED

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

"கைத்தறி நிலையம்"

53, கிடங்கு தெரு, சென்னை-1.

(கொத்தவால்சாவடி சமீபம்)

கவுணியன் அச்சகம், சென்னை.